www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමී
Puthiya Poomi

சுற்று 14 | யூலை 2007 | பக்கம் 16 | விலை 20/= | சுழற்சி 104



ஜே.வி.பி யின் திரை விலகிறது
5ம் பக்கம்



சம்பூர் உயர் பாதுகாப்பு வலையச் சதி
6ம் பக்கம்



மலையக அமைச்சர்களை தினம் தோறும் நினைக்கிறோம்
4ம் பக்கம்



தமிழர் எங்கே போவது?
7ம் பக்கம்

# ஐ.நா. தலையீடு ?

மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க ஐ.நா. வின் விஷேச பிரதிநிதிகள் இங்கு வருவது உறுதியாகி விட்டது. அதன் தொடர்ச்சியாக மனித உரிமைகள் கண் காணிப்பு நிலையம் அமைக்கப்படலாம். ஐ.நா வின் பெரும்பான்மையான சர்வதேச சமவாயங்களில் கையெழுத்திட்டுள்ள இலங்கை 'ஐ.நா. பிடியிலிருந்து' தப்ப முடியாத நிலை ஏற்பட்டுவருகிறது. ''பயங்கர வாதத்திற்கு எதிரானவை'' என்றபேரி லான இலங்கை அரசாங்கத்தின் அமெரிக்காவின் ஆளும் கட்சியையும் எதிர்க்கட்சியையும் சேர்ந்த 50ற்கு மேற்பட்ட அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க அமெரிக்கா தலையிட வேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களும் இலங்கையில் மனிதஉரிமை மீறல்களைக் கண்காணிக்கும் ஐ. நா காரியாலயமொன்றை அமைக்க நடவடிக்கை ஆணைக் குழுவின் விசாரணைகளை கண்காணிக்க இங்கு வந்துள்ள சர்வ தேச பிரசித்த பிரமுகர்கள் குழுவின் விருப்பப்படி நடக்க முடியாமலும், அவர்களை திருப்பி அனுப்ப இயலாமலும் இலங்கை அரசாங்கம் இக்கட்டில் மாட்டிக் கொண்டுள்ளது. அப் பிரமுகர்கள் குழு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ளது. அதற்கு சட்டமா அதி



இவர்கள் தான் சர்வதேச சமூகம்?

யுத்த நடவடிக்கைகளை நிறுத்தும்படி 'இணைத்தலைமை' நாடுகள் வலியுறுத்தவில்லை என்பதும் கவனத்திற்குரியது. ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது என்பதால் அதிகூடிய அதிகாரப்பங்கீட்டை கொண்ட நம்பக மான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று அந் நாடுகள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன. எடுக்கப்பட வேண்டும் என்றும் புஷ்ஷைக் கேட்டுக் கொண்டுள்ளனர். ஐ. நா மனித உரிமைகள் குழு, பாதுகாப்புச் சபை என்பவற்றில் இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள் பற்றி அக்கறையுடன் உசாவப்படுகிறது.

கொலைகள் ஆட்கடத்தல்கள் உட்பட மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை பர் சி.ஆர்.டி. சில்வா எழுதிய கடிதத்தின் கருத்துக்கள் அரசாங்கத்தின் கருத்துக்களல்ல என்று கூறவேண்டிய நிலைமைக்கு ஜனாதிபதி ராஜபக்ச தள்ளப்பட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்களை அடிப்படையாகக் கொண்டு அதிகரித்துவரும் வெளிநாடுகளின் அழுத்தங்களால்

தொடர்ச்சி 2ம் பக்கம்



60 வருடப் பாராளுமன்ற ஆட்சி !
8ம் - 9ம் பக்கம்



கருணாநிதிக்கு தமிழ் மொழியும் கனிமொழியும்
12ம் பக்கம்



ஊடகவியளாளர்கள் மீதான தாக்குதல்கள்
3ம் - 14ம் பக்கம்



பெரியார் திரைப்பட விமர்சனம்
15ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# குற்றவியல் அவதூறுச் சட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் முன் வந்துள்ளது. அதற்குப் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருவதால் அரசாங்கம் அம்முடிவை எடுக்கவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் இது உடனடியான ஒரு மழுப்பல் என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஏதோ விதத்தில் அதனைக் கொண்டுவரவே செய்வர்.

அரசாங்க நடவடிக்கைகளால் மூடி மறைக்கப்பட்ட உண்மைகள் பற்றிய செய்திகளை வெளிக்கொண்டு வந்தவர்கள் பலர் குற்றவியல் அவதூறுச் சட்டத்தின் கீழ் முன்பு 2002ம் ஆண்டிற்கு மேல் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டமை நினைவிருக்கலாம். குறிப்பாக சில பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மீது அச் சட்டத்தின் கீழ் பல வழக்குகள் தொடுக்கப்பட்டன.

"பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில்" ஈடுபடுத்தப்படுபவர்கள் 'பாதுகாப்பு' நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பற்றி யாரும் கேள்விக்குட்படுத்தவோ அவர்களின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தவோ முடியாத சூழ்நிலை ஊடகங்களுக்கு இருப்பதை அறிவோம். இருந்தும் பல அரசாங்க அத்துமீறல்கள் பற்றிய செய்திகள் வெளிவரவே செய்கின்றன.

இந்நிலையில் அவற்றை சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும் குற்றவியல் அவதூறுச் சட்டம் மீண்டும் அரசுக்குத் தேவையாகிறது. இதன் மூலம் தற்போதைய ஜனநாயக மறுப்பு சூழ்நிலை மேலும் மோசமாகும். மனித உரிமை மீறல்கள் தலைவிரித்தாட ஊக்கியாக குற்றவியல் அவதூறுச் சட்டம் இருக்கும். இது அப்பட்டமான பாசிச நடைமுறை யாக மாற்றமடையும். நடைபெறுகின்ற குற்றச் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்படுவதாக இல்லை. ஆனால் அவை பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டிருப்பதே அரசிற்குப் பிரச்சினையாக உள்ளது. அதற்கு ஆப்பு வைப்பதற்கே இச்சட்டம் அமுலுக்கு வரவிருக்கிறது. எனவே கருத்துச் சுதந்திரம் ஊடக சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்து கொள்வது அனைவருக்கும் முன்னால் உள்ள கடமையாகும். புதியபூமி இச்சட்டம் கொண்டு வருவதை வன்மையாகக் கண்டித்து எதிர்க்கிறது. அது கைவிடப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றது.



## புதிய ஜனநாயக கட்சித் தோழர்களை விடுவிக்க உதவுங்கள்!

கடந்த பெப்ரவரி 14, 15 ஆம் திகதிகளில் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு கடந்த நான்கு மாதங்களாக அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் புதிய- ஜனநாயக கட்சியின் ஐந்து தோழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கடந்த 22ம் 25ம் ஆம் திகதிகளில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களான வெ. மகேந்திரன், ரா. ஜெயசீலன், சு. சுகேசனன் ஆகியோரும் ஆசிரியர் நியமனத்திற்காகத் தெரிவாகியுள்ள ச. மோகன்ராஜ், சி. கிருஸ்ணப்பிரியன் ஆகியோரினதும் விடுதலைக்கான நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளுமாறு புதிய- ஜனநாயக கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளிலும் போராட்டங்களிலும் மக்களின் சார்பாக நின்று வெகுஜனப்போராட்டங்களில் துணிவாக ஈடுபட்டு மலையகத்தில் மாற்று அரசியல் தலைமை கொடுத்து வந்த அத்தோழர்களின் கைதும் தடுப்பு வைப்பும் அரசியல் ஒடுக்குமுறையின் வெளிப்பாடாகும். மலையகத்தில் புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை முடக்கும் மறைமுக அரசியல் சதிச் செயல்பாடுமாகும்.

அந்தச் சதியிலிருந்து எமது இளம் தோழர்களை மீட்டெடுத்து மலையகத்தின் புதிய புரட்சிகரப் பரம்பரையினரை வளர்த்தெடுக்க வேண்டும். எமது தோழர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சந்தேகக் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவிக்க சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் வெகுஜன ரீதியான செயற்பாடுகளை துரிதப்படுத்தவும் நிதியுதவிகளை வழங்குமாறு புதிய- ஜனநாயக கட்சி வேண்டுகிறது.

## 1980 யூலையில்

பொதுவேளை நிறுத்தம் செய்த எண்பதினாயிரம் அரசாங்க ஊழியர்கள் பாசிச ஒடுக்குமுறை உள்ளாக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பொலீஸ் குண்டர் படைத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு பலர்படுகாயங்கள் அடைந்தனர். இது அப்பட்டமானவர்க்க ஒடுக்கு முறையாகும். இதற்கு ஜே. ஆர் தலைமை தாங்கினார்.

## *1983 யூலையில்*

தமிழர்களுக்கு எதிரான கொடிய வன் முறை ராணுவ உதவியுடன் கட்டவிழ்த்து விடப்பட்டது. திட்டமிட்ட இவ் வன்முறை களால் சிறையில் 52 தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டதுடன் மூவாயிரம் தமிழர் கொலையுண்டனர். வீடுகள் கடைகள் எரிக்கப்பட்டு தமிழர் வடக்கு கிழக்கு மலையகத்திற்கு அனுப்பப்பட்டனர். இது ஜே. ஆரின் பேரினவாத ஒடுக்கு முறையாகியது.

## *ஐ.நா தலையீடு.......*

1ம் பக்க தொடர்ச்சி

இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் மேலும் சிக்கல்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால் கொலைகளோ ஆட்கடத்தல்களோ காணாமல் போதல்களோ கைதுகளோ நிறுத்தப்பட்டதாக இல்லை.

கடந்த மாத இறுதியில் ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் பற்றி கடுமையான நிலை ப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அதைவிட மனித உரிமைகள் மீறல்கள் பற்றியே பொதுவான கரிசனை காட்டப்படுகிறது. தற்போதைய மனிதஉரிமை மீறல்களுக்கு யுத்த சூழ்நிலையே காரணமாகும். இருப்பினும் யுத்தசூழ்நிலையை இல்லாமலாக்கி தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு ஐ.நா. சபை யூடாக அழுத்தம் கொடுப்பதற்கு இணைத்தலைமை நாடுகள் எவ் வித நடவடிக்கைகளையும் எடுப்பதாக இல்லை. அதற்கான விருப்பத்தையும் அவை வெளியிடவும் இல்லை. யுத்த நிறுத்தம் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்பவற்றை ஐ.நா. சபைக்கு வெளியில் வைத்திருக்கவே இணைத்தலைமை நாடுகள் விரும்புகின்றன. நோர்வே அனுசர ணை, சமாதான நடவடிக்கைகள், யுத்த நிறுத்தம் போன்றவற்றை வற்புறுத்துவதாக இல்லை. அவ்விடயங்களை மீதுள்ள இலங்கை அரசாங்கத்தின் முட்டுக் கட்டைகளைக்களைவதில் இணைத்தலைமை நாடுகளுக்கு அக்கறை இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா வின் உள்ளும் வெளியிலும் அழுத்தங்களை கொடுக்கவே அந்நாடுகள் எண்ணம் கொண்டுள்ளன. இது ஐ.நா வின் ஆரம்ப நட வடிக்கையாக இருக்கும். ஆனால் காலப்போக்கில் நிலைமைகள் என்னவாகும் என்பதே பிரச்சினை. எவ்வாறாயினும் இலங்கைக்கான ஒரு தலையீட்டு நிகழ்ச்சி நிரல் ஐ.நா. வில் வரையப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு அதிகரிக்கும் ஐ.நா. தலையீடுகளால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவும் முடியாது. யுத்தம் நிறுத்தப்படவும் மாட்டாது. இலங்கை அரசாங்கமும் நாடும் மக்களும் மேலும் கடுமையான இன்னல்களுக்கு முகம் கொடுக்கப் போகின்றனர் என்பது மட்டும் தெளிவாகிறது.

## முட்டாள்களா? அபேபக்கியர்களா?

1983 வன்முறையை அடுத்து ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒவ்வொரு நாளும் யாராவது அமைச்சர் பேசுவார். ஒரு தடவை எம்.எச். மொகமட் பேசும் போது "சிங்கள மக்கள் நல்ல மக்கள்" என்று சொன்னதைக் கேட்டு எனது சிங்கள இடதுசாரி நண்பர் விழுந்து விழுந்து சிரித்தார். இப்போது முஸ்லீம்கள் யாரும் கடத்தப்படவில்லை என்று முஸ்லீம் அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவித்ததோடு ஒருவர் மொகமட் சொன்னதையே திரும்பிச் சொல்லியிருக்கிறார்.

சிங்களவர்கள் தமிழருக்கு கேடு செய்தாலும் முஸ்லீம்களுக்கு கேடு செய்யமாட்டார்கள். எனவே அவர்கள் நல்லவர்கள் என்ற கருத்தைத்தான் இந்தத் தலைவர்மார் சொல்ல முயலுகின்றனர். இதன் மூலம் முஸ்லீம்களைத் தமிழரிடமிருந்து மேலும் அந்நியப்படுத்தி ஒரு போலியான பாதுகாப்பு உணர்வை உண்டாக்கலாம். ஆனாலும் யதார்த்தமான நிலைமை என்ன? சிங்களப் பேரினவாதம் தமிழர்களது தேசிய இன உரிமைகளையும் பிற உரிமைகளையும் நசுக்குவதோடு நிற்கும் என்று இவர்கள் கனவு காணுகிறார்களா? தெற்கிலுள்ள சாதாரண முஸ்லீம் மக்களும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முஸ்லீம்களும் கடந்த இரண்டு ஆண்டுகளில் பேரினவாதம் பற்றி நிறையக் கற்றுள்ளனர். தலைவர்கள் தலைகளைப் பானைகட்குட் புதைத்துக் கொண்டு இது இரவு என்று பாசாங்கு செய்யலாம். ஆனால் மக்களுக்கு இருளுக்கும் ஒளிக்கும் வேறுபாடு தெரியும்.

## வாயடைத்துப் போனதனால் வாராது

"வாயடைத்துப் போனோமே வாராதாம் ஒரு சொல்லும்" என்பது கவிஞர் முருகையனின் கவித்துவமான ஒரு வரி. அது ஒரு அதிர்ச்சியான நிலை பற்றியது. ஆனால் அரசாங்க ஆதரவாளர்களாக உள்ள தமிழ் அரசியல்வாதிகளின் இடையிடயிலான மௌனம் வேறு வகையானது.

கொழும்பு லொட்ஜ்களிலிருந்து தமிழர் வெளியேற்றப்பட்டது பற்றியும் கொழும்பிலிருந்து தமிழர் வெளியேற்றப்பட்டது பற்றியும் அவர்களது குரல் யாருக்கும் கேட்கவில்லை. கடந்த ஒரு வருடத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி எப்போதேன் இவர்களிற் பலர் வாய் திறந்திருந்தால் அது அரசாங்கத்தை நியாயப்படுத்துவதற்காகவே இருந்திருக்கும். இப்போது எல்லாரையும் வாயடைக்கச் செய்கிற விதமாக அல்லவா விஷயங்கள் நடக்கின்றன.

## பின்நவீனத்துவப் பிழைப்பு

மே மாதம் ஒரு பின் நவீனத்துவ (?) சிறு சஞ்சிகை தனக்கேயுரிய அசட்டுத்தனத்துடன் அ. மார்க்ஸ் என்கிற பின்நவீனத்துவப் போதகரைச் செவ்வி கண்டிருந்தது. அதில் அவர் இலங்கையில் தன்னுடன் உடன்படாத சிலரையும் தன்னை என்றுமே விமர்சித்திராத சேரனையும் சிவத்தம்பியையும் சேர்த்து ஒரு பிடி பிடித்திருக்கிறார். கேள்வி என்ன வென்றால் இவ்விருவரும் சிவசேகரமும் நு.ஃமானும் அவரைத் தாக்குகிறார்களே அது ஏன் என்பது தான். பாவம். கேள்வி கேட்டவருக்கு ஒருவரைத் தாக்குவதற்கும் அவரது கருத்துக்களை மறுப்பதற்கும் உள்ள வேறுபாடு தெரியாது. பதில் சொன்னவருக்கு யார் என்ன சொன்னார்கள் என்றே தெரியாது. எனவே வாய்க்கு வந்தபடி ஆளுக்கு ஒரு நிந்தனையாக அள்ளிவீசியதோடு தன்னுடைய சீடப்பிள்ளைகள் சிலபேரைக் குறிப்பிட்டு ஏன் அவர்கள் மட்டுமா இவர்களும் இலக்கியவாதிகள் தானே என்றும் சீறி விழுந்திருக்கிறார்.

பார்ப்பனிய எதிர்ப்பென்று சொல்லிக்கொண்டு அதே அளவு மோசமான வர்க்க சாதியாதிக்க நிலைப்பாட்டின் காவல் நிறுவனமான குமுதத்தின் வீட்டு விறாந்தைப் பத்திரிகைகளில் ஒன்றில் ஒட்டிக் கொண்டு தலித்தியமும் பேசலாம், பின் நவீனத்துவமும் பேசலாம். யாரையும் வாய்க்கு வந்தபடி திட்டலாம். இவருக்குப் பொழுது போக்கு அவர்கட்கு வியாபாரம்.

## நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

### ஆடுகளைப் பாதுகாக்க

இன்றைய உலகின் நவீன ஹிட்லர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ். அந்த இரத்தக் காட்டேரியின் சர்வதேச சகபாடி தான் பிரித்தானியப் பிரதமராக இருந்த ரொனி பிளயர். ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பாலஸ்தீனத்திலும் இன்னும் உலக நாடு களின் உள்நாட்டு இரத்தப் பெருக்குகளுக்கும் மக்கள் கொல்ல ப்படுவதற்கும் புஷ்சும் பிளயரும் வகித்து வந்த பாத்திரம் வெட்கக் கேடானது. மனித குலமே காறித்துப்புகின்றது. பிரித்தானிய மக்கள் பிளயர் மீது கோபமும் வெறுப்பும் கொண்டனர். அதனால் தனது பத்து வருடப் பிரமதர் பதவியை கடந்த மாதம் 27ம் திகதி துறந்து கொண்டார்.

பதவி விலகிய தனது விசுவாசியான பிளயரைக் கைவிட ஜோர்ஜ் புஷ் விரும்பவில்லை. ஆதலால் பிளயரை மத்திய கிழக்கு சமாதானத் தூதுவராக நியமிக்க வெள்ளை மாளிகை நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஈராக், ஆப்கா னிஸ்தான் பலஸ்தீனம் லெபனான் ஆகிய நாடுகளில் அமெரிக்க இஸ்ரேலையே நேரடி ஆக்கிரமிப்புகளுக்கும் கொடிய அழித் தொழிப்புகளுக்கும் பக்கத்துணையாக நின்று தனது நாட்டு ராணு வத்தை அங்கு நிலை கொள்ள வைத்த ரத்தக்கறை படிந்த பிளயர் எப்படி சமாதானத் தூதுவராக மத்திய கிழக்கிற்கு வரமுடியும். ஆடுகளுக்கும் ஓநாய்களுக்கும் சமாதானம் பேச பெரிய ஓநாயைத் தூதுவராக நியமித்தது போன்றது தான். இஸ்ரேலின் ஸியோனிசத்திற்கும் அதன் பலஸ்தீன ஆக்கிரமிப்பு அழித்தொழிப்பிற்கும் வழிகாட்டியது அமெரிக்காவும் பிரித்தானியாவும். அத்தகைய நாடுகளின் தலைவர்கள் மத்திய கிழக்கிலும் பாலஸ்தீனத்திலும் அமைதிக்கு பாடுபடுவர் என யார் தான் நம்ப முடியும். போர் தொடரவும் அழிவுகள் பெருகவும் பிளயர் தனது பணியை வழங்குவார் என்பதே உண்மையாகும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# ஐ. தே . கட்சி ஆட்சிக்கு வர முயற்சி ஜே. வி. பி யின் புதிய முன்னணி

## மக்கள் தங்களை தற்காத்துக் கொள்வார்களா?

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ள ஐ.தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே. கட்சி (ஜனநாயகப் பிரிவு) என்று தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஐ.தே கட்சியில் ஜனநாயகம் இல்லையென்று அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு அங்கு ஜனநாயகத்தை தேடிக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்திலிருந்து வெளியேறிய முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீரவும், சிறிபதி சூரியாராச்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மக்கள் பிரிவு) என்று தங்களை அழைத்துக் கொண்டு ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்பட இணக்கம் கண்டுள்ளனர். இதே வேளை ஜே.வி.பி 'புதிய தேசிய கூட்டணி' (நவ ஜாதிக பெரமுன) என்ற பெயரில் அதன் தலைமையில் அரசாங்கத்திற்கும் ஐ.தே கட்சிக்கும் மாறாக கூட்டணி அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. கட்சிகளை அமைப்புகளையும் தனிநபர்களையும் இணைத்துக் கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தில் வெற்றி பெறுவதாகவும், புலிகள் இயக்கத்தை தாக்கி அழிப்பதாகவும் சிங்கள மக்களை உணர்ச்சி வசப்படுத்துவதில் ஈடுபட்டு வருகிறது. மக்கள் மீதான பொருளாதார சுமை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும் ஆட்கடத்தல்கள் கொலைகள் கைதுகள். காணாமல் போதல்கள் அதிகரித்து வருவதாலும் மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி வெறுப்பு அடைந்துள்ளனர். இலங்கை அரசாங்கத்திற்கு கடன்களை வழங்கி வரும் நாடுகள் குறிப்பாக மேற்கு நாடுகள் அதிருப்தியடைந்துள்ளன. ஐ.நா அமைப்புகளிலும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்கள் மேலோங்கியுள்ளன.

இந்த சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை உருவாக்கி ராஜபக்ச அரசாங்கத்தை இக்கட்டில் மாட்டி, பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த ஐ.தே.கட்சி சகல வழிகளிலும் முயற்சித்து வருகிறது. அது அரசாங்கப் பக்கத்திலிருந்து சிலரைத் தம்பக்கம் இழுக்கவும் முயன்று வருகிறது. இவ் முயற்சிக்கு மங்கள–சூரியாராச்சி என்போரது விலகலும் விமர்ச



னங்களும் உற்சாகம் அளித்துள்ளது.

ராஜபக்ச அரசாங்கம் செல்வாக்கிழந்துள்ள இச் சூழலில் ஜே.வி.பி தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், தூய்மையாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காகவும் அரசாங்கத்திற்கு எதிராக புதிய கூட்டணி அமைக்க அழைப்பு விடுத்துள்ளது. ஆனால் அதனுடன் கூட்டணி அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு வெளியே இருக்கும் எந்த இடதுசாரி கட்சி தயாராகும் என்பது கேள்வியே. தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரங்களை பங்கிடுவதை ஜே.வி.பி எதிர்க்கிறது. ராஜபக்ச அரசாங்கத்திற்கு இதுவரையும் கொடுத்து வந்த ஆதரவின் மூலம் ஏகாதிபத்திய உலகமயமாதலையும் தமிழ் மக்கள் மீதான யுத்தத்தையும். கெடுபிடிகளையும் முன்னெடுக்க பங்களிப்பு வழங்கி வந்திருக்கிறது. இதனால் ஜே.வி.பி கோரும் கூட்டணி எத்தகையதாக இருக்கும் என்பதைக் புரிந்து கொள்ளமுடியும்.

ஐ.தே. கட்சி தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கிறது எதிர்வரப்போகும் தேர்தலில் பாராளுமன்றப் ஆட்சி அதிகார மாற்றப் பாதையில் அதற்கே வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ராஜபக்ச அரசாங்கத்தின் பொருளாதார நெருக்கடிகள் யுத்தக் கெடுபிடிகள் மற்றும் ஜனநாயக மனித உரிமை மீறல்கள் என்பன ஐ.தே கட்சி பாராளுமன்றத்தின் ஆட்சியை கைப்பற்றுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளன.

இதேவேளை தற்போதைய அராஜக அடக்குமுறைகளுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் மத்தியிலும் பல அமைப்புகளும் தனிநபர்களும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருவதைக் காணலாம். இத்தகைய அமைப்புகள் உடனடியாக ஐ. தே கட்சியும், சுதந்திரக் கட்சியும் ஒன்றுதான் என்ற அடிப்படையில் மாற்று அரசியல் சக்திகளாக அதிகாரத்தை கைப்பற்றும் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் ஒரு மூன்றாவது சக்தி சரியான வேலைத்திட்டத்துடன் மேற்கிளம்பக் கூடியதாக இல்லை. அந்தளவிற்கு இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் செயலிழந்து காணப்படுகின்றன. இதனால் இன்று மக்கள் தங்களை தற்காத்து கொண்டால் போதும் என்ற நிலையிலேயே இருக்கின்றனர்.

அத்துடன் பழகிப்போன பாராளுமன்ற பாதையில் மாறி மாறி இரண்டில் ஒரு கட்சியை அதிகாரத்திற்கு கொண்டுவரும் புள்ளடி அரசியலுக்கு அப்பால் அரசியல் மாற்றுச் சிந்தனை மக்களிடம் இன்னும் தோன்றவில்லை. அத்தகைய சிந்தனைக்கு மக்களது பிரச்சினைகளை முன்வைத்த வெகுஜனப் போராட்டங்களே ஒரே வழி முறை. அதன் மூலமே உறுதியான மக்கள் சார்பு அரசியல் மாற்றங்களை கொண்டு வர முடியும். அதற்கான பாதையில் காணப்படும் தடைகளை அகற்றி கடுமையான அரசியல் வேலைகளையும் வெகுஜனப் போராட்டங்களையும் அரசியல் பொதுவேலைத்திட்ட அடிப்படையில் நேர்மையான சகல அரசியல் சக்திகளும் ஐக்கியப்பட்டு முன்னெடுக்க வேண்டும்.

# கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவது மக்கள் விரோத நடவடிக்கையாகும்!

வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டன. அங்கு இராணுவ நடவடிக்கைகள் உக்கிரமடைந்துள்ளன. மக்கள் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இடம்பெயர்ந்துள்ளன. அதிபாதுகாப்பு வலயம் என்ற பேரில் சொந்தக்காணிகளிலும், பிரதேசங்களிலும் மீளக்குடியேறும் உரிமை மறுக்கப்படுகிறது.

இந்நிலையில் கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலும், கிழக்குமாகாண உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்களும் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


யுத்தக் கொடூரத்தால் மக்கள் இடம் பெயர்ந்துள்ள சூழ்நிலையில் சுதந்திர நடமாட்டமும் இயல்பு வாழ்வும் ஜனநாயகமும் மனிதஉரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. இந் நிலையிலும் தேர்தல்களை எவ்வாறு நடத்துவது? சாதாரண சூழலில் தேர்தல்களினால் மக்களிடையே மோதல்களும் பிளவுகளும் ஏற்படுவதே வழமை. கிழக்கு மாகாணத்தில் இயல்பு வாழ்க்கை மறுக்கப்பட்ட அச்ச நிலையில் தேர்தல்கள் நடந்தால் எப்படி இருக்கும். மேலும் தாராளமாகவே எல்லாத்தரப்பினரிடமும் ஆயுதங்கள் இருந்து வரும் நிலையில் தேர்தல் நடந்தால் அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும், பிளவுகளுக்கும் அமைதியீனத்திற்குமே வழிவகுக்கும். அத்துடன் பேரினவாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சியும் இன ஒடுக்கலும் வெற்றிகரமாக நடை முறைக்கு வரவே உதவும்.

எனவே யுத்தத்தை நிறுத்தி, அரசியல் தீர்வு காண்பதற்கான சமாதான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்பை அரசாங்கம் தட்டிச் கழித்து விட்டு தேர்தல்களை நடத்த முயற்சிப்பது இன்னொருவகையில் மக்கள் விரோத நடவடிக்கை ஆகும்.

அத்துடன் அடக்கு முறைகளுக்குட்பட்டிருக்கும் தமிழ்மக்களை மேலும் பலவீனப்படுத்துவதாகவும் முஸ்லீம், தமிழ் மக்களிடையேயான கசப்புணர்வுகளைத் தூண்டி இடைவெளிகளை அதிகரிக்கவும் தேர்தல் உதவக்கூடியதாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டமை தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் பாதுகாக்கப்படுவதற்கு ஒரு சாதகமான அம்சமாகும். அதில் முஸ்லீம்களுடைய அபிலாஷைகள் உள்ளடக்கப்படாமை ஒரு குறைபாடாகும். அதனை நிவர்த்தி செய்ய தமிழ் முஸ்லீம் தலைமைகள் இணங்கிக் கொள்ள இயலும் அதைத் தவிர்த்து பேரினவாதத்திற்கு துணை போகும் வகையில் வடக்கு கிழக்கு மாணங்கள் தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்டமைக்கு ஆதரவு கொடுப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும். அத்தகைய தற்கொலைப் பாதைக்கு வலுவூட்டுவது போன்றதே கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதற்கு துணை போவதாகும்.

இவ்வாறான தேர்தலால் கிழக்கில் அபிவிருத்தியும் சுபீட்சமும் ஏற்படும் என யாராவது எண்ணினால் கனவாகவே இருக்கும். சிலருக்கு சுகங்கள் கிடைக்கலாம். அவையாவும் முழுத்தமிழ் முஸ்லீம் மக்களையும் விழுங்க நிற்கும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் நச்சுத்தன நோக்கங்களுக்கு உதவவே முடியும். எனவே கிழக்கில் தேர்தல் நடாத்தும் அரசின் கபடத்தைப் புரிந்து கொண்டு அதனை நிராகரிக்க வேண்டும் அரசாங்கம் தேர்தல் நடத்துவதைக் கைவிடச் செய்வதற்கு தமிழ் முஸ்லீம் மக்களும் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும்.



## தாக்குதலுக்கு உள்ளான தினக்குரல் ஊடகவியலாளர்

தினக்குரல் நாளிதழின் செய்தியாளரான ஊடகவியலாளர் கே.பி. மோகன் கடந்த 28- 06- 2007 அன்று கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கான அழைப்புக் கடிதத்துடன் சென்றார். செல்லும் வழியில் செயலகத்திற்கு அண்மித்த படைச் சோதனைச் சாவடியில் வைத்து விபரம் கேட்கப்பட்டார். அவர் தனது ஊடக அடையாள அட்டையையும் அழைப்புக் கடிதத்தையும் காண்பித்தார். அதன் பின்பு அவரைச் செல்ல விடாது தடுத்து நிறுத்திய விமானப்படையினர் மிக மோசமாகத் தாக்கினர். ஊடகவியலாளர் அதுவும் தமிழர் என்பதற்கான காரணத்தால் படுகாயங்கள் ஏற்படுமளவிற்கு மோகன் தாக்கப்பட்டார். தாக்கியவர்கள் பின்பு பொலிசில் அவரை ஒப்படைத்தனர். அதன் பின்பே கொழும்பு மத்திய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஊடகவியலாளர்கள் மீது தொடரும் மிலேச்சத்தனமான தாக்குதல் வரிசையில் நடந்த அண்மைய சம்பவம் இதுவாகும். இத்தகைய கேடுகெட்ட செயலுக்கு யார் பெறுப்பேற்பது? அரசாங்கம் நேர்மையாக ஏற்றுக்கொண்டு உரிய நடவடிக்கையை எடுக்குமா? பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளருக்கு உரிய நஷ்டஈடு வழங்குமா?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரச் சுமை



இன்று உயர்ந்து செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலை களினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவது தோட்டத்தொழிலாளர்களே ஆவார். அவர்களின் மிகக் குறைவான வருமானம் நாளாந்தத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளது. ஏனைய சமூகத்தினரை விட மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களாகத் தோட்டத் தொழிலாளர்கள் இருந்து வருகின்றனர்.

அவர்கள் அதிகமாகப் பாவிக்கும் கோதுமை மா மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகள் பெருமளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. எரிபொருள் விலை உயர்வு காரணமாகப் போக்குவரத்து கட்டணங்களும் செலவுகளும் அதிகம். இதனால் தோட்டப்பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏனைய பகுதிகளை விடவும் பலமடங்கு அதிகமாகவே இருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமோ ஏனைய எல்லாத் தொழிலா ளர்களின் சம்பளத்தை விட மிகவும் குறைவாகும். அதனை உயர்த்துவதென்றால் தோட்டக்கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் மீண்டும் ஒரு கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவேண்டும். அதற்கு தோட்டக் கம்பெனிகள் தயாராக இல்லை. தோட்டத்தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களை ஏமாற்றும் நோக்கில் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவார்கள். தொழிற்சங்கங்களுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான யூன், டிசம்பர், மாதங்களில் மிகவும் ஆவேசமான அறிக்கை விடுவார்கள். தேர்தல் காலங்களில் இனிப்பாகப் பேசுவார்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வென்றெடுக்க முன் வரமாட்டார்கள்.

தோட்டத்தொழிலாளர்களும் அவர்களின் அவலத்தைப் பற்றி மிகவும் உணர்ச்சிகரமாக எடுத்துக்கூறுவார்கள். தொழிற்சங்கத் தலைவர்களை வாங்கு வாங்கென்று வாங்குவார்கள் இயல்பாகவே திட்டுவார்கள். ஆனால் அவர்களுக்கு பதிலாக நேர்மையான மாற்றுத் தலைமைகளைப் பலப்படுத்தமாட்டார்கள். தேர்தல் வந்ததும் அதே தலைமைகளைக் கண்மூடித்தனமாகவும் அடிமைச் சிந்தனையுடனும் ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு பல படித்தவர்கள் மிகவும் துணை புரிவார்கள்.

பொதுவாகவே இன்று நாட்டு மக்கள் அனைவரும் விலைவாசி உயர்வால் மிகவும் அவதிப்படுகின்றனர். யுத்தத்தினாலும் வெளிநாடுகளில் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டியிருப்பதாகவும். சம்பளத்தை உயர்த்த முடியாதிருப்பதாகவும் அரசாங்கம் கூறுகிறது. இது ஏகாதிபத்திய உலகமயமாதலின் விளைவாகும். முழுக்க முழுக்க இறக்குமதிகளில் தங்கியிருப்பதன் அபாயமாகும்.

இதில் தோட்டத்தொழிலாளர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவதற்குக் காரணம் அவர்களுக்கான நியாயமான சம்பளத்திட்டமோ விலைஉயர்விற்கான கொடுப்பனவு அடிப்படைகளோ இல்லை. அதற்கு தோட்டக் கம்பெனிகளும் அதன் சார்பில் செயற்படும் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் தடையாக இருக்கின்றன. அத் தடைகளை அகற்ற உரிய உறுதியான தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் தோட்டத் தொழிலாளர்கள் முழுப்பட்டினியை எதிர் நோக்க வேண்டிய நிலைக்கே தள்ளப்படுவர்.

# மலையகத் தமிழர் வெளியேற்றம் எவரும் கண்டுக் கொள்ளவில்லையா?

கடந்த மாதம் 7 ஆம் திகதி கொழும்பு லொட்சுகளில் தற்காலிகமாக தங்கியிருந்த தமிழ் மக்கள் வலுக்கட்டாயமாக பஸ்களில் ஏற்றப்பட்டு கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் கொழும்புக்கு கொண்டு வரும்படி இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர மலையகப் பகுதிகளை சேர்ந்த தமிழர்கள் கைது செய்யப்பட்டு பலாத்காரமாக மலையகப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி ஊடகங்களும் எதனையும் தெரிவிக்கவில்லை. மலையகத் தலைவர்கள் என ப்படுபவர்களும் இது பற்றி வாய்த்திறக்கவே இல்லை.

கடவத்தை, பூகொட, கிரிபத்கொட போன்ற பகுதிகளில் வீடுகளிலும் கடைகளிலும் தொழிற்சாலைகளிலும் வீதி திருத்த வேலைகளிலும் வேலைசெய்து வந்த மலையகத்தமிழர்களை அங்கிருக்க வேண்டாமென்றும் அவர்கள் சொந்த இடங்களுக்கு சென்றுவிட வேண்டுமென்று பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதனையடுத்து அவர்கள் நிர்ப்பந்தத்தால் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மலையகத்திலுள்ள வேலையில்லாதவர்கள் கொழும்பிலும் கொழும்புக்கு அருகிலுள்ள கடைகள், தொழிற்சாலைகள், வீடுகள் வேலைவாய்ப்பை கொடுக்கின்றன. கொழும்பில் "சந்தேகம்" என்றபேரில் பெரும் எண்ணிக்கையில் மலையகத்தமிழர்கள் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர். விளக்கமறியலிலும் வைக்கப்படுகின்றனர். அவர்கள் தமது அடையாள அட்டைகளை காட்டிய போதும் தொழில் செய்வதை உறுதிப்படுத்திய போதும் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த நெருக்குதல்களுக்கும், அசௌகரியங்களுக்கும் ஆளாகின்ற மலையகத்தமிழர்களுக்காக குரல் கொடுக்க எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரோ அமைச்சரோ முன்வருவதில்லை. கைது செய்யப்படுபவர்களை பொலிசாருடன் பேசிகெஞ்சி விடுவிப்பதற்காகவே அரசாங்கத்தில் பிரதியமைச்சராக இருப்பதாக பகிரங்கமாக பிரகடனப்படுத்தி வரும் இராதாகிருஸ்ணனும் மேற்படி மலையகத் தமிழர்களின் கைதுகள் வெளியேற்றங்கள் பற்றி கொதிப்பதாக இல்லை.

மலையக நகரங்களிலும் தோட்டங்களிலும் கூட நாளாந்தம் தேடுதல்களை நடத்தி பொலிஸாரும் இராணுவத்தினரும் அதிகமான மலையகத்தமிழர்களை கைது செய்கின்றனர். தடுத்து வைக்கின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் வடக்கு கிழக்கிற்கு வெளியில் மேற் கொள்ளப்படும் இன ஒடுக்கல் நிகழ்ச்சி நிரலில் கைதுகளால் பாதுகாப்பு கெடுபிடிகளால் அதிகமாக மலையகத்தவர்களே பாதிக்கப்படுகின்றனர். அவசரகாலச் சட்ட விவாதத்தில் பங்கு பற்றாது நழுவியும் அவசரகாலச் சட்டத்திற்கு வாக்களித்தும் அல்லது கலந்து கொள்ளாமலும் விடும் மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்களால் மலையகத் தமிழர்கள் கைது செய்யப்படுவதையும் தடுத்து வைக்கப்படுவதையும் கடத்தப்படுவதையும் வெளியேற்றப்படுவதையும் தடுக்க முடியாதுள்ளது. அவர்கள் அவை பற்றி கண்டுகொள்ளாமலே இருக்கிறார்கள்.

ஊடகங்கள் மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மலையக மக்கள் எதிர் நோக்கும் அவலங்களுக்கு கொடுப்பதில்லை.

# மலையக அமைச்சர்களே உங்களை தினம் தினம் நினைக்கின்றோம்!



மலையக மக்களாகிய எங்களைப் பற்றிப் பலவிதமான ஆய்வுகள் அலசல்கள் செய்யப்பட்டு எமக்குள்ள பிரச்சினைகள் சம்மந்தமாகப் பலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் போன்றோருக்கு அவைபற்றி எவ்வித அக்கறையும் கிடையாது. அவர்களை வாகன அணிகளிலும் வாசற்தலங்களிலும் மேடைகளிலும் காண்போருக்கு கண்கள் உறுத்தவே செய்யும். என்னே எடுப்பு, அதற்கேற்றால் போன்ற உடுப்பு, கைகளில் தங்க ஆபரணங்கள், விரல்களில் பளிச்சிடும் கற்கள் பதித்த மோதிரங்கள், ஒளி வீசம் கொழுத்த முகங்கள், அலாதியான அங்க அசைவுகள், ஆட்களுக்கு ஏற்றால் போல் வசதிகள் கொண்ட வாகனங்கள், முன்னால் பின்னால் பாதுகாப்புக்கள், விசுவாச எடுபிடிகள், மாளிகைகள் போன்ற வீடுகள். அப்பப்பா, தலைவர்கள் என்றால் நம்ம தலைவர்மாரு தான் அதற்குரிய ஆட்கள் என்று நாங்கள் பூரிப்பு அடைந்து நிற்கின்றோம். எங்களை ஏமாற்றத் தெரிந்ததால் நீங்கள் தலைவர்கள் ஆனீர்கள். நாங்கள் மீண்டும் மீண்டும் ஏமாறுவதால் தரித்திரம் பிடித்தவர்களாகிக் கொண்டோம். இருந்தாலும் நாங்கள் உங்களை தினம் தினம் நினைக்க மறந்ததில்லை.

நம்ம மலையகத்திற்கு மகிந்தவானவர் வாரிவழங்கிய அமைச்சர்கள் எட்டுப்பேர். அதில் இரண்டு அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சர்கள். மிகுதியானோர். பிரதி அமைச்சர்கள். எல்லாமே எங்களுடைய பிரச்சினைகளுடன் சம்மந்தமுடைய பெயர்களைக் கொண்டவையாக இருப்பினும் அவற்றால் எங்களுக்கு கிடைத்தவை எதுவும் இல்லை. ஆனால் நாங்கள் ஒவ்வொரு நாளும் நம்ம அமைச்சர்களை நினைத்து நினைத்து "பெருமைப்பட்டுக்" கொள்வோம். சிலர் திட்டிக்கொள்வார்கள். சிலர் நியாயப்படுத்திக் கொள்வார்கள். அவங்களை விடப்பா. எல்லாம் நம்ம தலை விதி என்று நொந்து கூறுவோர் நம்மில் பலர் இருக்கிறார்கள்.

எவ்வாறாயினும் காலைக் கடன்களுக்காக மலசலகூடத்திற்குப் போகும் போதும் தண்ணீருக்கு கஷ்டப்படும் போதும் குண்டுங் குளியுமான வீதிகளால் செல்லும் போதும் லயன்களில் நாற்றம் ஏற்படும் போதும் தோட்ட உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சரை முத்து முத்தாக நினைத்துக் கொள்வோம். பின்பு பாடசாலைக்கு ஏறி இறங்கி கல்வி வளங்கள் அற்ற பாடசாலையின் பெயரிலான கட்டிடத்தில் நீண்டதூர நடைக்களைப்போடும் அரைகுறைப் பசியோடும் வந்த மாணவர்களுக்கு கற்பித்து கஷ்டமுறும் போதும் நம்ம பிரதிக் கல்வியமைச்சர் பற்றி ஆனந்தம் கொண்டு மாகாணக் கல்விக்கு அருள் புரியும் சாமியாரையும் நினைத்து கொள்வோம் தோட்டப்புறத்திற்கு தபால் விநியோகிப்பவரை அடிக்கடி காணபோம். ஆனால் எமக்குரிய தபால்களை நாங்களே சென்றுதான் எடுக்க வேண்டும். தாமதம் பற்றியோ கிடைக்காமை பற்றியோ யாரிடம் முறையிடுவது. மலையகத் தோட்டங்களுக்கான தபால் என்றால் அப்படித் தான் என்பதை நினைக்கும் போது தபால் பிரதி அமைச்சர் செல்லமாகச் சாமி போல் நடந்து வருவது போன்ற காட்சியைக் காண்போம்.

தனியார் வைத்தியசாலைக்குச் செல்ல அதிக பணம் தேவை. அதனால் அரசாங்க மருத்துவமனையில் சென்று மனைவி, குழந்தைகளுடன் காத்திருந்து டாக்டர் வரவில்லை, அந்த மருந்து இங்கு முடிந்துவிட்டது. நாளைவாங்க போன்ற வசனங்களையும் தாதிமாரின் சினப்புகளையும் அறியா மொழியில் கேட்டு விழிபிதுங்கி நிற்கும் போதெல்லாம் நம்ம பிரதி சுகாதார அமைச்சர் வடிவான வேலவரை நினைத்துப் பெருமை கொள்வோம்.

கொழும்பிலே மலையக இளைஞர்கள் பிடிபடுவதையும் பூசாவிலிருந்து மீட்டு வந்த கதைகளையும் அறிக்கையில் பார்த்துப் பூரித்துப் போய் நம்ம பிரதி அமைச்சர் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமானவர் என நினைத்து இதுவும் வாழ்க்கைக்கான தொழிற்பயிற்சி தான் என நினைத்து கிருஷ்ண பகவானின் திருவிளையாடல்களை வியந்து கொள்வோம்.

இவர்களுக்கும் மேலாக உள்ள பெரிய அமைச்சர்களை எப்பொழுதும் நினைத்த வண்ணமே இருக்கிறோம். நம்ம இளைஞர்களான தொழிலாளிகள் எல்லாம் இப்போது வலுப்பெற்றுள்ளார்கள். கடந்த சம்பள உயர்வுப் போராட்டத்தில் பெற்ற சம்பள உயர்வால் இளைஞர்கள் உடல் உள வலுவூட்டப்பட்டு பொருளாதாரத்தில் உயர்வு கண்டிருக்கிறார்கள். இவற்றுக்கொல்லாம் காரணம் நம்ப இளைஞர் வலுவூட்டல் அமைச்சரான ஆறுமுகம் கொண்டவர் தான் காரணம் என்பதை எண்ணி எண்ணிப்பூரிப்படைந்தே வருகின்றோம்.

நாங்கள் மலையகத்தின் எந்த அரச காரியலாயங்களுக்குச் சென்றாலும் நம்ம பேச்சைக் கேட்டு கொஞ்சம் நில்லு, அப்புறம் வா, சும்மா கரைச்சல் பண்ணாதே போன்ற வேற்று மொழி ஏச்சுக்கள் ஏளனங்களால் நாங்கள் தமிழர் என்பதை உணரவைக்கிறாங்கள். கூனிக் குறுகும் அந்த வேளைகளில் நமக்கு கிடைத்த சமூக அபிவிருத்தி பற்றியும் குறிப்பாக சமத்துவமின்மையை அகற்றும் அமைச்சால் ஏற்பட்டுள்ள சமத்துவ மாற்றத்தைப் பற்றியும் நினைத்து நினைத்து பகலிலேயே சந்திரனைப் பார்த்து நிம்மதி கொள் கிறோம்.

இவ்வாறு எமது மக்களின் பெயரால் கிடைத்த எட்டு அமைச்சுகளின் ஊடாக மலையக மக்கள் சொர்க்க வாசலை நோக்கி வீறு நடை போட்டு வருகிறார்கள் என்றே பேசப்படுகின்றது. உண்மை யாதெனில் அமைச்சர் பெருமக்களுக்கும் அவர்களை அண்டியோருக்கும் சொர்க்கம் தான். ஆனால் சாதாரண தொழிலாளர்களுக்கும் அவர் தம்பிள்ளைகளுக்கும் நகரம் போன்ற வாழ்வுதான் தொடர்கிறது. மலையகமே உன் கதி இது தானா? மாற்றம் ஏதும் கிடையாதா? நொந்தும் வெந்தும் நிற்கின்றோம். ஒரு நாள் வரும் என்று நம்புகின்றோம். நம்பிக்கை வீண் போகாது.

குறிஞ்சியான்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 14 யூலை 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 104

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படவேண்டும் அறிக்கைப் போர் வேண்டாம்

மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறி வெளிநாட்டு சக்திகள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக "அறிக்கைப் போர்" புரிகின்றன. தமிழ்த் தேசிய சக்திகள் இலங்கை அரசாங்கத்தின் மீது வெளிநாடுகள் சுமத்துகின்ற மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பூரண திருப்தி கண்டுள்ளன எனலாம். ஐ.நா சபையின் மனித உரிமைகள் குழு அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டம் , ஐ. நா வின் பாதுகாப்புச் சபை போன்றவற்றிலும் இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி கேள்வி எழுப்பப் படுகின்றன. அக்கேள்விகளுக்கு ஏட்டிக்குப்போட்டியாக இலங்கை அரசாங்கம் பதிலளித்துவருகிறது. ஆனால் கடத்தல்கள், கொலைகள், காணாமல் போதல்கள் கைதுகள், தடுத்துவைப்புகள், வெளியேற்றங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இலங்கையில் நடைபெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார். அதன் விசாரணைகளை அவதானிப்பதற்காக சுதந்திரமான சர்வதேச பிரபலமான பிரமுகர்கள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஓய்வு பெற்ற இந்திய உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் பி.என் பகவதி தலைமை தாங்குகிறார்.

அவ் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் விரைவாகவும் பாரபட்சமற்ற விதத்திலும் இடம் பெறவில்ல என்று அந்த அவதானிப்பு குழுவினர் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கைகள் அவ்விசாரணை மீது நம்பிக்கைக் கொள்ள முடியாத நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

அந்த அவதானிப்பு குழு விடுத்த அறிக்கைகள் அக்குழுவின் ஆணைக்குட்பட்டதல்ல என்று கூறி அதனை கண்டிப்பதாக இலங்கையின் சட்டமா அதிபர் சி. ஆர்.டி.சில்வா கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இலங்கையின் குற்றவியல் சட்ட முறையின்படி சட்டமா அதிபர் திணைக்களம் புலன் விசாரணைகளில் ஈடுபடுவதில்லை என்றும் பொலிஸார் புலன் விசாரணைகளை முடித்தப் பிறகு புலன்விசாரணை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் சார்பில் வழக்குகளை தொடுப்பதும் புலன்விசாரணைக்கு சட்ட ஆலோசனை வழங்குவதுமே சட்டமா அதிபர் திணைக்களத்தின் வேலையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வாறு தெரிவித்திருந்த போதும் புலன் விசாரணைகளை மேற்கொள்ளும்படி பொலிஸாருக்கு உத்தரவிடுவதுடன் புலன் விசாரணைகளை நெறிப்படுத்தவும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அதிகாரம் இருப்பதாகவே நாம் அறிகிறோம். அத்துடன் ஆணைக்குழு விசாரணை என்பது உண்மைகளை கண்டறியும் விசாரணை ஆகும். அது ஒருவகையில் புலனாய்வாகும். அதனை மறுப்பது போல் சட்டமா அதிபர் அளித்துள்ள விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. மனித உரிமை மீறல்களை வைத்துக் கொண்டு வெளிநாட்டவர்கள் நாட்டாண்மை பண்ணுவதை அங்கீகரிக்க வேண்டியதில்லை. அதற்காக உண்மைக்கு மாறாக அறிக்கைகளை விட வேண்டியதுமில்லை. மனித உரிமை மீறல்களை ஏதோ விதத்தில் நியாயப்படுத்தவும் தேவை இல்லை.

சட்டமா அதிபர் மனித உரிமை மீறல்களை தடுக்க சட்டத்திற்குட்பட்ட விதத்திலேயே பல அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் திணைக்களங்களில் சட்டமா அதிபர் திணைக்களம் அதன் பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது.

மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு 13 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் 90 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பணத்தையும் காலத்தையும் செலவழித்து குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய நிலை பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் பற்றிய உரத்தகுரல்கள் வாதவிவாதங்கள் எல்லாம் வரையறைக்குட்பட்டதுதான். ஆனால் வெளிநாட்டு சக்திகள் விரும்பினால் மனிதஉரிமை மீறல்களை வைத்துக் கொண்டு நாடுகளை ஆக்கிரமிக்கலாம். லட்சக்கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்பட்டாலும் அவற்றைக் கண்டும் காணாமலும் இருக்க வேண்டுமென்றால் கண்களை இறுக மூடிக்கொண்டும் இருக்கலாம். அவை அவர்களது விருப்பு வெறுப்பிற்கு உட்பட்டது.

யுத்த நிறுத்த மீறல்களாக தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றதுடன் கொலைகள், கடத்தல்கள் காணாமல் போதல்கள், கைதுகள் போன்றன மிகவும் மோசமாக தலைவிரித்தாடுகின்றன. யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி அறிக்கை செய்து வந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு அரசாங்க நிர்ப்பந்தம் காரணமாக அதன் அறிக்கை வெளியிடும் பணியை இடைநிறுத்திக் கொள் வதாக அறிவித்துள்ளது.

அதேபோன்று மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளை கண் காணிக்க நியமிக்கப்பட்டுள்ள சுதந்திரமாக சர்வதேச பிரபலமான பிரமுகர்களின் அவதானிப்புக் குழு வின் பணிகளை இடை நிறுத்தி கொள்ள வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருந்தால் ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை களை விட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மைகளை கண்டறிந்து மனிதஉரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் எதிர் காலத்தில் அவ்வாறான மீறல்கள் இடம் பெறாமல் தடுக்க பாரபட் சமற்ற விசாரணைகளை நடாத்த வேண்டும். அத்துடன் பாரபட்ச மற்ற நீதி புரியப்படுவதாகப் பகிரங்கப்படுத்தப்படவும் வேண்டும்.

உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்ற ஏகாதிபத்திய நாடுகளின் வாடிக்கையாளர் அந்தஸ்திலேயே இலங்கை அரசு இருக்கிறது. அந்த உலகமயமாதல் வர்த்தகத்தில் தனக்கு வேண்டும் போது மட்டும் பங்கெடுத்துக்கொண்டு விரும்பாத போது ஒதுங்கி நிற்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில் மனித உரிமை மீறல்களை ஏகாதிபத்திய நாடுகள் பொறுத்துக் கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்தி வருகின்றன. அதனை அலட்சியம் செய்துவிட்டு இலங்கை அரசிற்கோ அரசாங்கத் திற்கோ தனித்து இயங்க முடியாது.

ஏகாதிபத்திய நாடுகளின் தலையீட்டால் இலங்கை அரசாங்கத்தின் மீது மேற் கொள்ளப்படும் அழுத்தங்கள் இலங்கை மக்களின் போராட்டங்களுக்கு சாதகமானவை போன்று இருந்தாலும் அவ்வழுத்தங்கள் நிரந்தரமானவையோ முழுமையாக இலங்கை மக்களின் அக்கறைக்குட்பட்டதோ அல்ல. மனித உரிமைகள் தொடர்பாக ஏகாதிபத்திய அழுத்தங்கள் ஏகாதிபத்திய நலன்களுக்குட்பட்டதேயன்றி மக்களின் மனித உரிமைகளின் மீதானவையல்ல.

இலங்கையின் முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கங்களின் அக்கறையும், ஏகாதிபத்திய நலன்களும் முரண்படுகின்ற இடங்களில் மக்கள் சார்பான போராட்டங்களுக்கு வலுசேர்க்கப்படலாமேயன்றி அவற்றிலேயே பூரணமாக தங்கி இருக்க முடியாது. ஆளும் வர்க்கங்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்குமிடையிலான முரண்பாடுகளினால் ஏற்படும் சூழலைப் பயன்படுத்தி ஆளும் வரக்கங்களின் கையாலாகாத்தனங்களை அம்பலப்படுத்தப்படுத்தவும் மக்கள் தமது அரசியல் போராட்டங்களை முன்னெடுக்கவும் முடியும்.

-ஆசிரியர் குழு-

# ஜே. வி. பி யின் அடுத்த கட்டத்திற்கு திரை விலகிறது

**வெகுஜனன்**

**மகிந்த சிந்தனை மூலம் யுத்தத்திற்கு** வழி காட்டியதிலும் அதற்கு வலுவூட்டியதிலும் ஜே. வி. பி யின் பங்கு பாரியதாகும். ஜாதிக ஹெல உறுமயவுடன் போட்டி போட்டு இனவாதம் பேசியதிலும் ஜே. வி. பி முன் நின்று வந்தது. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்து தமது பிடியில் அவரை வைத்திருக்கலாம் எனக் கனவுகண்டவர்களும் ஜே.வி.பி. யினர். ஆனால் இன்று ஜே.வி. பி யின் கனவுகள் கலைந்துள்ளன. ஜனாதிபதியானவர் தனது நிறைவேற்று அதிகாரத்தின் சகல அஸ்திரங்களையும் பயன்படுத்தி வருவதைக் கண்டு அவர்கள் திகைத்து நிற்கின்றனர். "பதவிக்கு என்னைக் கொண்டு வந்தமைக்கு நன்றி. ஆனால் இனிமேல் உங்களது பேச்சை நான் கேட்கத் தயாராக இல்லை. ஆறுவருடங்களுக்கு நான் சொல்வதைத் தான் நீங்கள் கேட்க வேண்டும். இதற்கு மேலாக ஏதாவது செய்ய முயற்சித்தால் அதற்கு நடவடிக்கை எடுக்க எனக்குத் தெரியும்" என்றவாறான ஒரு செய்தியைத் தான் ஜே.வி.பி. யினர் மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுள்ளனர். அதன் காரணமாக ஜே.வி.பி– மகிந்த மண உறவு முடிந்து விட்டது. தனி வழியில் செல்வதற்கு ஜே.வி.பி முடிவு செய்துள்ளது. அவ்வழி எவ்வழி என்பதே கேள்வியாகிறது. அத் தனிவழிக்குத் தானே– தலைமைதாங்கப் போவதாகவும் தெரிவித்ததுள்ளது.

தவறான கொள்கை நிலைப்பாடுகள் தவறான விளைவுகளுக்கே இட்டுச் செல்லும் என்பதற்கு ஜே. வி. பி யின் குறுகிய இனவாத அரசியல் முடிவுகள் சமகால உதாரணமாகும். ஜே.வி.பி தனக்குள்ள 38 பாராளுமன்ற உறுப்பினர் பலத்தை வைத்து ஜனாதிபதியை வழி நடத்தலாம் என்ற எதிர்பார்ப்பு முறியடிக்கப்பட்டுவிட்டது. மலையகத் தமிழ்க் கட்சிகளையும் முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தன் பக்கம் கொண்டு வந்தார் மகிந்த. அத்துடன் 18 ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களையும் இழுத்துக் கொண்டார். இவ்வாறு அமைச்சுப் பதவிகள் என்ற பெருவலையை வீசி பெரிய சிறிய மீன்களை எல்லாம் பிடித்து ஒரே தொட்டியில் வைத்திருக்கிறார். போதாதற்கு ஹெல உறுமயவும் அமைச்சர் பதவி பெற்றுக் கொண்டது. பேரினவாத வெறிபிடித்த சம்பிக்க ரணவக்க சுற்றாடல் அமைச்சர்.

இந் நிலையில் ஜே.வி.பி தனித்து விடப்பட்டதுடன் அது வீதியில் இறங்குவதைத் தடுப்பதற்கு மகிந்த வெவ்வேறு உத்திகளைக் கையாளவும் தயாராகி உள்ளார். மீண்டும் அரசாங்கப் பக்கம் போக முடியாமலும் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து செயல்பட முடியாமலும் அதேவேளை மக்களுக்கு பதில் கூற முடியாமலும் ஜே.வி.பி தடுமாறி நிற்கின்றது.

ஜே.வி.பி தலைமையில் உள்ளவர்களது சில கோப்புகள் ஜனாதிபதியின் வசம் சிக்கி இருப்பதாகவும் தேவை ஏற்பட்டால் அதன் சிகப்பு நாடா கட்டவிழ்த்துக் கொள்ளப்படும் என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது. அதற்கு அப்பால் ஜே.வி.பி யின் பாராளுமன்றப் பலத்தை எதிர்காலத்தில் முறியடிப்பதற்கு தற்போது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் மறு சீரமைப்பு திருத்த சட்ட மூலம் அவர்களுக்கு ஒரு பெரும் சவாலாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தற்போதைய ஜே. வி. பி. யின் 38 ஆசனங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து



வெற்றிலைச சின்னத்தில் போட்டியிட்டுப் பெற்ற ஆசனங்களாகும். இவ் வெற்றி யானது தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறைமையினால் கிடைத்த ஒன்றாகும். ஆனால் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் மறுசீரமைப்பு என்பது விகிதாசாரத்தையும் தனித்தனித் தேர்தல் தொகுதி முறைமையையும் இணைத்து முன்னெ டுப்பதை முன்மொழிந்து நிற்கிறது. அது நிறைவேற்றப்பட்டால் ஜே.வி.பி யினால் இன்றையளவு ஆசனங்களில் ஐந்தில் ஒரு பகுதி யைக் கூடப் பெற முடியாது என்றே நம்பப்படுகின்றது. அதனா லேயே ஜே. வி. பி மேற்படி சட்ட மூலத்தை கடுமையாக எதிர்த்து நிற்கின்றது. ஆனால் அரசின் தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தின் உள்நோக்கம் தமிழ் முஸ்லீம் மலையகப் பாராளுமன்றப் பலத்தை குறைப்பது மட்டுமன்றி ஜே.வி.பி போன்ற கட்சிகளையும் ஓரங் கட்டுவதேயாகும்.

முன்னைய காலங்கள் போன்று ஜே. வி. பி யினால் மக்கள் சார்பு கோரிக்கைகளை முன்வைத்து அதனைப் பிரசார இயக்கமாக்கி முழக்கங்கள் இட முடியவில்லை. முன்பு அடிக்கடி லிப்ரன் சுற்று வட்டத்திலும் கோட்டை புகையிரத நிலையம் முன்பாகவும் நடாத்திய ஆர்ப்பாட்டங்களைக் இப்போது காண முடியவில்லை. அடக்கி வாசிக்கிறதா? அல்லது அச்சமடைந்து நிற்கிறதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஜே.வி.பி நேரடியாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடாகவும் பேரினவாத முழக்கங்கள் இட்டு யுத்தப் பேரிகை முழங்கியது. தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்று கிடையாது. தீர்வுத் திட்ட யோசனை என்பது நாட்டைப் பிரிப்பதற்கு வழி கோலும் என்றனர். புலிகளை அழித்து நாட்டின் இறமையைப் பாதுகாக்க வேண்டும். அதற்காக யுத்தமே ஒரே வழி என்று உச்சக் குரல் வைத்தனர். சிங்களப் புலிகள், ஊடகப் புலிகள், இடதுசாரிப் புலிகள் என ஊதிப் பெருப்பித்து பொலீஸ் ராணுவ அடக்கு முறைகளுக்கு வழிகாட்டி நின்றனர். யுத்த சூழலில் மனித உரிமை மீறல்கள் பற்றிப் பேசுவது தேசத்துரோகம் என அடியெடுத்துக் கொடுத்தவர்களே ஜே.வி.பி யினர் தான். இவற்றின் மூலம் சிங்கள மக்களிடையே யுத்தத்திற்கு எதிராகவும் சமாதானம் அரசியல் தீர்வு மனித உரிமைகள் போன்றவற்றுக்கு ஆதரவாகவும் எழுந்து நின்ற சக்திகள் அச்சுறுத்தப்பட்டு மெளனமாக்கப்பட்டனர். அதனால் யுத்தின் மூலம் தீர்வு கண்டுவிடலாம் என்ற ஒரு மாயத் தோற்றம் கட்டியெழுப்பப்படுவதற்கும் சிங்கள மக்களில் கணிசமானோர் அதற்கு மெளன அங்கீகாரம் வழங்கப்படுவதற்கும் ஜே. வி. பியின் தீவிர பிரச்சாரம் வழி வகுத்துக் கொடுத்தது. இவற்றின் அடிப்படையிலேயே கொலைகள் ஆட்கடத்தல்கள் கப்பம் பெறுதல் தடுத்து வைத்தல் போன்றன இடம் பெறத் தொடங்கி உச்ச நிலையைத் தொட்டு நிற்கின்றன. தமிழர்கள் முஸ்லீம்கள் மலையகத்தமிழர்கள் என்போருக்கு எதிராகப் பேரினவாதப் பிசாசு பல நிலைகளிலும் தலைவிரித்தாடி பச்சை இரத்தம் குடித்தும் வருகின்றது. போகிற போக்கைப் பார்த்தால் உசிப்பி ஏவி விட்டவனையே பிசாசு இறுதியில் அடித்துக் கொள்ளும் என்பது போன்ற நிலையை நோக்கித் தான் விடயங்கள் சென்று கொண்டிருக்கின்றன.

அண்மையில் தமிழர்கள் கொழும்பில் இருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்வு பற்றி பாராளுமன்றத்தில் ஜே.வி.பி உறுப்பினர் அனுர குமார திசநாயக்கா ஒரு உரையை நிகழ்த்தினார். கடந்தகால வரலாற்றில் இருந்து பாடம் படிக்காத முட்டாள்தன நடவடிக்கை என உணர்ச்சிகரமாகப் பேசினார். ஒரு புறத்தில் கண்டிப்பது போன்றும் மறுபுறத்தில் வேறு விதமாக நடவடிக்கை எடுத்திருக்கலாம் என்ற தோரணையிலும் பேசினார். எவ்வாறாயினும் அத்தகையதொரு நடவடிக்கையை எடுப்பதற்கு உரிய பேரினவாத

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சம்பூர் உயர் பாதுகாப்பு வலயம் தமிழர் நிலங்களை அபகரிக்கும் சதி!

திருமலை தயா

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தை உள்ளடக்கிய பல பகுதிகள் ஏற்கனவே அதியுயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த மாதம் 10 ஆம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின்படி சம்பூர், மூதூர் கிழக்குப் பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புலிகள் இயக்க கட்டுப்பாட்டிலிருந்த அப்பகுதியை 2006 ஆகஸ்ட் மாதம் இலங்கை இராணுவம் கைப்பற்றியது. மூதூர் கிழக்குப் பகுதியை 2006 செம்டெம்பர் மாதமும் 2006 யூலை மாதம் மாவிலாறையும் இலங்கை இராணுவம் கைப்பற்றியது. அதனால் அப்பகுதிகளிலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் மீளக்குடியேறவில்லை. தற்போது அப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படத்தப்பட்டு அப்பகுதிக்கு எவரும் செல்லமுடியாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் நிரந்தரமாக குடியிருந்த தமிழ்மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகி நிற்கின்றனர்.

அங்கிருந்து 18 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் பயிர் செய்த 4500 ஏக்கர் விவசாய காணிகள் கைவிடப்பட்டுள்ளன. 24 கிராமங்களில் எவருமே இல்லை. இப்பகுதியில் 18 பாடசாலைகள் இரண்டு வைத்திய சாலைகள், இரண்டு பிரதேசசபை காரியாலயங்கள், 33 நீர்ப் பாசனக்குளங்கள் போன்றன கைவிடப்பட்டுள்ளன. இதனால் விவசாய செய்கையும் பாரியளவில் நடைபெற்ற மீன்பிடித் தொழிலும் கைவிடப்பட்டுள்ளன.

இராணுவ மயமாக்கலுக்கும், இராணுவ தேவைகளுக்காகவுமே பாதுகாப்பு வலயங்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படுகின்றன. அத்துடன் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் உயர் பாதுகாப்பு வலயங்களால் தமிழ்மக்கள் அப்பிரதேசங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்படுவதுடன் அவர்களின் சொந்தக்காணிகளும் அவர்கள் வாழும் பிரதேசங்களும் தேசிய பாதுகாப்பு என்ற பேரில் அவர்களிடமிருந்து அரசாங்கம் நிரந்தரமாகவே பறிக்கிறது. வடக்கில் பலாலி முகாமையடுத்துள்ள வலிகாமம் வடக்கு. யாழ்ப்பாண நகரப்பகுதிகள், தீவுப்பகுதிகள் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டப் பின்னர் அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு அங்கு வாழும் உரிமை கடந்த 16 வருடங்களுக்கு மேல் மறுக்கப்பட்டு வருகின்றது..

வலிகாமம் வடக்கு காணி பறிப்பிற்கு எதிராக அரசியல் நடவடிக்கைகளை இடதுசாரிக் கட்சிகள் எடுத்தன. தமிழ் தேசியத் தலைவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்தனர். இவற்றால் இழந்த அப்பகுதிகளை மக்களுக்கு மீட்டுக் கொடுக்க முடியவில்லை.

திருகோணமலை துறைமுகப்பகுதியிலுள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கு கொடுக்கப்பட்டன. அப்பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கிறது. 69 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட சம்பூர் - கிழக்கு மூதூர் பகுதியில் சம்பூரில் 500 ஏக்கரில் அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதனை இந்தியாவே அமைத்துக்கொடுப்பதுடன் அவ்விடத்தில் வெளிநாட்டு முதலீடுகளுடன் சில தொழிற்துறைகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காகவே இப்பகுதி அதி உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. அதை தொடர்ந்து திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்படலாம்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அம்பாறையில் தீகவாபி. சேனநாயக சமுத்திரம், கல்லோயா, கந்தளாய், பதவியா, திருகோணமலை துறைமுகப் பகுதி, பன்குளம் போன்ற பகுதிகளில் திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களை பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ந்து செய்து வந்துள்ளன.



இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டது. வடக்கு மாகாணமும். கிழக்கு மாகாணமும் சட்டபூர்வமாக இணைக்கப்பட் டது. ஆனால் 2006 ஒக்டோபர் மாதம் இலங்கையின் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றின் மூலம் மீண்டும் பிரிக்கப்பட்டன. தற்போது வடக்கு மாகாணசபைக்கும் கிழக்கு மாகாணசபைக்கும் வேறு வேறாக தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கிழக்குப்பகுதியிலும் வடக்குப் பகுதியிலும் தமிழ் மக்களினது தனிப்பட்ட காணிகளும், அவர்களின் பிரதேசமும் பாதுகாப்பு வலயம் என்று பிரகடப்படுத்தப்பட்டு அரசாங்கம் திட்டமிட்டு பறித்துவருகிறது. அதற்கு கூறப்படும் காரணம் "தேசியப்பாதுகாப்பு" என்பதாகும். அத்துடன் அப்பகுதிகளில் இராணுவ ஆதிக்கம் நிலைநாட்டப்படுகிறது.

சம்பூர் பாதுகாப்பு வலயப்பிரகடனத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்ற போதும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க பாராளுமன்றத்தில் பேசும்போது எக்காரணம் கொண்டும் சம்பூர் மூதூர் கிழக்கு பிரதேச உயர் பாதுகாப்பு வலயத்திட்டத்தை கைவிடப் போவதில்லை என்று திட்ட வட்டமாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாதுகாப்பு வலயத்திட்டங்கள் வடக்கு கிழக்கில் இன ஒதுக்கல் நிகழ்ச்சி நிரலாக முன்னெடுக்கப்படுகிறது. இவை தற்போது எழுத்தில் மட்டுமே இருக்கும் 2002 ஆண்டு. புலிகள் இயக்கமும் அன்றைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்ஹவிற்குமிடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முற்றிலும் முரணானதாகும். வடக்கு கிழக்கிற்கு வெளியில் பல இடங்களில் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இது அரசின் யுத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலாகும். யுத்தம் என்றபேரில் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகளினால் மக்களின் இயல்பு வாழ்வும் ஜனநாயகமும் சுதந்திரமும் உட்பட மனித உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. அவசரகாலச்சட்ட ஏற்பாடுகளினால் சாதாரண அன்றாட வாழ்வுரிமைகளும் மறுக்கப்படுகின்றன.

முதலாளித்துவ ஆட்சியில் இராணுவமயமாதலும் பொலிஸ் அதிகாரமும் ஒன்றிணைந்தே இருக்கும். அவை அப்பட்டமாக வெளிப்படும்போது மட்டுமே மக்களால் தெரிந்து கொள்ள முடிகிறது. இன்று இலங்கையில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் உயர்பாதுகாப்பு வலயப் பிரகடனங்கள் அப்பட்டமாகவே மக்களுக்கு புரியவைப்பதாக அமைந்துள்ளன.

தேசிய பாதுகாப்பு, பயங்கரவாதம், யுத்தம் போன்ற முழக்கங்களுடன் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒரு போதும் வாபஸ் பெறப்படுவதில்லை. அவை தற்காலிகமாக மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டாலும் அவை நிரந்தரமாகிவிடுகின்றன. இவை இன்று தமிழர்களுக்கு நாளை முஸ்லீம்களுக்கு அடுத்தநாள் மலைய மக்களுக்கு என விஸ்தரிப்புச் செய்யப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

பாதுகாப்பு பிரச்சினைகள் என்று கூறப்பட்டபோதும் உண்மையில் இவை பேரினவாத முதலாளித்துவ அரசியல் பிரச்சினையே ஆகும். அதனை மக்களின் சரியான அரசியல் நடவடிக்கைகளினூடாகவே எதிர்கொள்ள முடியும் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

# பூமி வெப்பமடைதலால் இலங்கை எதிர்கொள்ளும் அபாயங்கள்

சிறீ

உலகம் எதிர் நோக்கும் அபாயகரமான பிரச்சினைகளில் ஒன்று பூமி வெப்படைந்து வருவதாகும். இதனால் இயற்கையில் மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. இப் புவி வெப்படைதல் இருபதாம் நூற்றாண்டில் தான் அதிகரித்து வந்துள்ளது. இக்காலப்பகுதியில் மிகப் பெரும் கைத்தொழிற் சாலைகளில் இருந்து பச்சை வீட்டு வாயுக்கள், காபரீரோட்சைட், மீதேன் வாயுக்கள் போன்றவற்றின் வெளியேற்றம் இப் புவி வெப்படைதலை வேகப்படுத்தி வந்துள்ளன. இதனால் பூமிக்கு அண்மித்ததாகவுள்ள வாயுப் பகுதியும் சமுத்திரங்களும் அண்மைய தசாப்தங்களாக வெப்பமடைந்து வந்துள்ளன. இதன் வளர்ச்சி வீதம் மேலும் அதிகரித்துச் செல்லலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்து உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் வருகி ன்றனர். இப் பூமி வெப்படைவதால் பனிப்பிரதேசங்கள் வேகமாக உருகி வருகின்றன. இதனால் கடல் மட்டம் உயருகின்றன. அதே வேளை வளி மண்டலத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கடும் புயல், வெள்ளப் பெருக்கு, வெப்ப அதிகரிப்பு, வறட்சி, கடல் கொந்தளிப்பு, கரையோர மண் அரிப்பு என்பன இடம் பெறுகின்றன. மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாத திடீர் அனர்த்தங்கள் உலகம் பூராவும் இடம் பெறுகின்றன. இவற்றை வெறுமனே இயற்கையின் சீற்றம் என எவரும் அமைதி கொள்ள முடியாது. அத்துடன் தடுக்க முடியாதவை என்ற மூடத்தனத்துடனும் இருந்து விட முடியாது. பெரும் தொழிற்சாலைகளைக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய முதலாளித்துவகைத்தொழில் நாடுகளே இப்புவி வெப்படைதலுக்கு பொறுப்பு தாரிகள் ஆவர். அவர்கள் தங்களுடைய நாடுகளில் மட்டுமன்றி இன்றைய பின் தங்கிய மூன்றாம் உலக நாடுகளிலும் பெரும் தொழிற்சாலைகளை நடாத்தி வருகிறார்கள். லாபம் பெருலாபம் என்ற வெறித்தனத்தால் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தை உருவாக்கி உலகை வெப்பமடைய வைத்து வருகிறார்கள். இதனைக் கட்டுப்படுத்த பல மாநாடுகள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் அமெரிக்கா இப் புவி வெப்பமடைதல் பிரச்சினையை கணக்கில் கொள்ளவில்லை. ஏனெனில் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு பாதிப்பு வந்து விடும் என்பதாலேயேயாகும்.

இப்புவி வெப்பமடைதலால் இலங்கை கடுமையான பாதிப்புகளை எதிர்நோக்கி நிற்கின்றது. அண்மைய ஆய்வில் நுவரேலியாவின் வெப்ப நிலை இரண்டு பாகையால் அதிகரித்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் இடம் பெற்று வரும் பெரு மழை வெள்ளப் பெருக்கு புயல் மண்சரிவுகள் இக்கால மாற்றத்தின் வெளிப்பாடுகள் என்பதில் ஐயமில்லை. அதேவேளை வரட்சியும் ஏற்படுகிறது.

விவசாயம் கடுமையான பாதிப்புகளைக் கண்டு வருகிறது. வெப்பமடைதல் அதிகரிப்பால் பருவ காலங்களில் மாற்றமும் சூழல் மாசடைதலும் விவசாயத்தைப் பாதிக்கின்றன. புதிய புதிய கிருமிகள் உருவாகி பயிர்களை நாசம் செய்வதுடன் வேகமாகப் பரவுகின்றன. எதிர் பார்த்த அறுவடையில் வீழ்ச்சிகள் ஏற்படுகின்றன.

கடல்மட்ட உயர்வால் கரையோர மண் அரிப்புகள் ஏற்படுகின்றன. இலங்கையின் நாலாபுறமும் நடைபெறும் இந் நிகழ்வால் சில பிரதேசங்கள் படிப்படியாக நீரில் மூழ்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளன. யாழ்ப்பாண தீபகற்பம் மிகப் பெரிய அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது. ஆய்வாளர்களின் கணிப்பின் படி யாழ் குடாநாடு 2100ல் நீரில் அமிழக் கூடியதாகவே இருக்கும் என்றே கூறப்படுகிறது. எந்தெந்தப் பிரதேசங்களுக்கு அபாயம் என்பது முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவில்லை.

விவசாயம் போன்று புவி வெப்பமடைவதால் மீன் உற்பதியிலும் மீன்பிடித் தொழிலிலும் கடும் பாதிப்புகள் ஏற்படவே செய்யும் என விஞ்ஞான ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். பின் தங்கிய நாடுகளில் ஒன்றாகிய எமது விவசாய நாடான இலங்கை இப் புவி வெப்பமடைதல் அபாயத்தின் விளைவுகளை எதிர் கொள்ள ஆரம்பித்து விட்டது என்பதையே ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இவற்றுக்கு எதிரான தற்காப்பு முன்னேற்பாடுகளை அரசாங்கம் எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தும் திட்டங்களைக் கொண்டுள்ளது என்பதே பிரச்சினையாகும். யுத்தத்தை தீவிரப்படுத்தி மனிதர்களைக் கொன்று குவிப்பதுடன் சூழலை மாசடையச் செய்து மேன்மேலும் புவி வெப்பமடைதலுக்குப் பங்களிப்புச் செய்வதிலேயே அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் மும்மரமாக உள்ளனர். நாட்டையும் மக்களையும் எதிர்காலத்தையும் பற்றிய துளியளவும் அக்கறையற்றவர்களின் கைகளிலேயே ஆட்சி அதிகாரம் இருந்து வருகிறது என்பதை மக்கள் அறிய முடியாத அவலச் சூழலிலேயே இருந்து வருகின்றனர். புவி வெப்பமடைதலையும் அதன் பாதிப்பிலிருந்து இலங்கையைப் பாதுகாக்கவும் புத்த பெருமான் மீண்டும் ஒரு முறை இங்கு வருவார் என்று கூறினால் அதனை நம்பும் நிலையிலேயே சிங்கள மக்களில் பெரும்பாலானோர் உள்ளனர். அவ்வாறே தமிழர்களும் கடவுள் கைவிடமாட்டார் என்றே அப்பாவித்தனமாக நம்புகின்ற நிலையே காணப்படுகின்றது.

இவற்றுக்குப் பதிலாக விஞ்ஞானத்தையும் சமூக விஞ்ஞானத்தையும் நம்பும் போக்கு தாழ் நிலையிலேயே இருந்து வருகின்றது. பூமி வெப்பமடைவதற்கு காரணமான ஏகாதிபத்திய சக்திகளையும் அவர்களது லாப வேட்டைகளையும் எதிர்த்துப் போராட உலக மக்களுடன் இலங்கை மக்களும் கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர் வெளியேற்றப்பட்டமை தொடக்கமா ? முடிவா ?



மோகன்

ஜூன் மாதம் முதல் வாரத்தில் கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டதிலுங் கொடுமையானவை அதுபற்றித் தரப்பட்ட அரசாங்கத் தரப்பு விளக்கங்கள். ஒன்றுக்கு ஒன்று முரணாக இருந்த போதும் அவை யாவுமே பேரினவாதத்தின் மிகக் குரூரமான வடிவமான இனத் துவேஷத்தின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டவையே. வழமையாகவே பேரினவாதத்தின் சமாதான விரோதக் குரலாக ஒலிக்கும் பிரதமர் தமிழர்கள் வெளியேற்றப்பட்டதற்கு மன்னிப்புக் கோரினார் என்றால் அது அரசுக்கு வெளியிலிருந்து வந்த நிர்ப்பந்தங்களின் விளைவானதே. அந்த மன்னிப்புக் கோரலிற் கூடப் பொலிசார் எந்தச் சந்தேக நபரையும் பிடித்து அடைத்து வைக்கும் அதிகாரம் இருக்கும் போது இப்படிச் செய்திருக்க வேண்டியதில்லை என்ற அடிப்படையில் இருந்ததே ஒழியத் தெற்கில் தமிழர் படுத்தப்படும் பாடு பற்றி ஏந்த விதமான கவலையையும் அது வெளிப்படுத்தவில்லை.

அரசாங்கத் தரப்பில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டதைப் பற்றிய கவலை எதையும் விட அதன் விளைவுகள் பற்றிய கவலையே கூடுதலாகத் தெரிந்தது என்பதை இப்போது பிரதமர் மன்னிப்புக் கேட்டது சரியா இல்லையா என்ற திசையில் விவாதம் திரும்பியிருப்பதிலிருந்து தெரியலாம். சனாதிபதிக்குத் தமிழ் மக்களை லொட்ஜ்களிலிருந்து வெளியேற்றுகிற திட்டம் அவர்கள் வெளியேற்றப்படும் வரை தெரியாது என்றும் கொழும்பிலிருந்து அவர்களை வெளியேற்றியதற்கும் அவருக்கும் ஒரு தொடர்புமில்லை என்று நாமெல்லோரும் நம்ப வேண்டும் என்று அவரது சில “இடதுசாரி” நண்பர்கள் விரும்புகின்றனர். சனாதிபதிக்குத் தெரியாமலே பொலிஸ், ராணுவம் ஆகியவற்றுள் சில தீய சக்திகள் சதி செய்வதாகவும் ஜலண்ட் ஏட்டில் ஜூன் மாதம் ஒரு கட்டுரை வந்திருந்தது. இந்த அவலங்களிடையே நமக்குச் சிரிப்பு அவசியமென்றோ என்னவோ நமது சனாதிபதியை வெனசுவேலா சனாதிபதியுடன் ஒப்பிடப்பட்டிருந்தது.




சிங்கள மக்களும் முஸ்லீம்களும் தமது மிக வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியது இன்னமும் அமைதியான முறையில் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்க்கும் வாய்ப்பு உண்டென்பதை வலியுறுத்தியது. இதன் பின்னணியில் பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயக்காவின் மன்னிப்புக் கோரலை யும் ஜே.வி.பியின் கண்டனத்தையும் பார்ப்பது தகும். எனினும் தமிழர்களை வெளியேற்றியது பற்றிப் பொலிஸ் மேலிடத்தில் எந்த விதமான மனவருத்தமும் இருப்பதாகக் கூறுவது கடினம். பாதுகாப்பு அமைச்சிலிலும் பாதுகாப்பு ஆலோசகர்கள் நடுவிலும் தமிழர்களை வெளியேற்று வதில் தவறு இல்லை என்ற கண்ணோட்டமே இன்றும் வலுவாக உள்ளது. ஹெல உறுமயவின் நிலைப்பாடும் அவ்விதமானதாகவே தெரிகிறது.

எனவே பேரினவாதிகளிடையே தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை எவ்வளவு தூரம் கொண்டு போகலாம் என்பதில் கருத்து முரண்பாடு உண்டு. ஆனால் அது தேசிய இனப் பிரச்சனையின் தீர்வு பற்றிய வேறுபட்ட அணுகுமுறைகளின் விளைவானது என்று சொல்வது கடினம். யூ. என்.பி கொழும்பில் உள்ள தமிழ் வாக்காளர் ஆதரவுத் தளத்தை மனதிற் கொண்டே தனது நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பதில் எமக்கு ஐயம் வேண்டாம்.

அமெரிக்காவின் கண்டனம் பிரதமரின் மன்னிப்புக் கேராலுடன் அடங்கி விட்டது. கிழக்குமாகாணத்தில் லட்சக்கணக்கானோரின் இடப் பெயர்வு பற்றிக் கவலை படாத அமெரிக்கா இந்தச் சம்பவம் பற்றி அக்கறை காட்டியவுடன் வசதிபடைத்த கொழும்புத் தமிழர்கள் சிலர் குளிர்ந்து போயிருக்க இயலும். ஆனால் அமெரிக்கா இந்த ஆட்சி கவிழுகிற நிலை ஒன்று வரும் வரை எவ்வகையிலும் இலங்கை அரசாங்கத்துடன் தனது உறவைக் கெடுத்துக் கொள்கிற விதமாக எதையும் செய்யப் போவதில்லை. காதுங்காதும் வைத்தாற் போல முக்கியமான ராணுவ உடன்படிக்கைகள் இலங்கையுடன் ஒப்பமிடப்பட்டுள்ளன. இறுதியாக ஏற்பட்ட உடன்படிக்கையின் போது பேசாமலிருந்த ஜே.வி.பி இப்போது எதிர்ப்பதாக நாடகமாடுகிறது. இந்தியாவின் மவுனம் இப்போதைக்கென்றாலும் அமெரிக்காவுடன் தென்னாசிய மேலாதிக்கத்தைப் பகிர ஆயத்தம் என்ற நிலைப்பாட்டையே அடையாளப்படுத்துகிறது.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் இலங்கை அரசை எச்சரித்ததாகப் பூரித்தும் போன தமிழ் அரசியல் ஆய்வாளர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் இந்தியா இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கப் போவதையிட்டு அதிர்ந்து போயுள்ளனர். இந்திய மேலாதிக்கவாதிகளுடன் கால் நூற்றாண்டுக்கால நேரடி அனுபவம் இருந்தும் தமிழ் அரசியல் தலைவர்கட்கு இந்திய நோக்கங்களோ கருணாநிதி வகையறாக்களின் கபடமோ விளங்கவில்லை என்றால் என்ன செய்வது? மன்மோகன் சிங் தமிழ்த் தலைவர்களை மூன்று முறை காக்க வைத்து முடிவில் கொஞ்ச நேரம் பேசி மகிழ்வித்துப் படமும் எடுத்த போது தொடங்கிய கொண்டாட்டம் இப்போதுடன் முற்றாக முடிவுக்கு வருமா? வராது! கொடு மைக்காரக் கணவனுக்கு விசுவாசமாக இருக்கிற அடிமைப்புத்தியுள்ள மனைவி கூட எங்கள் தலைவர்கள் செய்வது போல திரும்பவும் திரும்பவும் காலில் விழுவது சுயமரியாதை எனக் கருதமாட்டாள்.




நன்றி - டெய்லி மிரர் 09-06-2007

தமிழகத்தில் ஏன் விடுதிகளிலிருந்து தமிழர் வெளியேற்றம் பற் றியோ கொழும்பிலிருந்து வெளியேற்றியது பற்றியோ கடும் எதிர்ப்பு நிகழவில்லை? எதிர்ப்புக்களை ஏற்பாடு செய்கிறவர்கட்கு மேலிடங்களிலிருந்து உத்தரவு வந்ததா? அல்லது நூறு பேர் இறக்கும் போது தான் தமிழ் நெஞ்சங்கள் இரத்த பாசத்தாற் கொதிக்குமா? சாதாரண சிங்கள முஸ்லீம் நெஞ்சங்கள் பல கொதித்ததைப் பற்றி ஏன் நாம் போதியளவு சிலாகித்துப் பேசுவதில்லை? தமிழ் சிங்கள முஸ்லீம் நிலைப்பாட்டு வக்கிரங்களுக்கு அப்பால் செல்ல முடியாத குறுகிய கண்ணோட்டங்கள் இறுகிப் போயிருப்பதுதான் காரணமாகும்.

இந்திய மேலாதிக்க அரசியல் பற்றியும் தமிழக “வோட்டுப் பொறுக்கி” அரசியல் கட்சித் தலைமைகட்கும் டில்லி தர்பாருக்கும் உள்ள நெருக்கமான வர்க்க பாசம் பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். அல்லது திரும்பத் திரும்ப ஏமாறுகிற தவறையே செய்யுமாறு தமிழ் மக்கள் அவர்களது. சந்தர்ப்பவாதத் தலைவர்களாலும் பொறுப்புணவற்ற சில ஊடகவியலாளர்களலும் எல்லாமறிந்த தோரணையில் பக்திகளில் இரத்தத்தோடு சேர்த்து வீரமும் வீணீரும் வழிய வழிய எழுதுகிற சில நிபுணர்களாலும் தொடர்ந்து ஏமாற்றப்படுவர். தமிழ் மக்கள் ஒரு விடயத்தை மிகத் தெளிவாக உணர வேண்டும். அவர்களது விடுதலையும் உரிமைகளும் எந்த அந்நியரும் வென்று தரப் போகிற விடயங்களல்ல. அவ்வாறு அந்நியரை வரவழைக்கிற எந்த முயற்சிக்கும் துணை போகிற தமிழ்த் தலைவர்கள் செய்வது அப்பட்டமான துரோகச் செயல் என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம்.

இன்றைய நெருக்கடியான சூழலைப் பயன்படுத்தி ஐ.நா. படைகளை வரவழைக்கிற ஆலோசனைக்குத் தமிழ்த் தலைவர்கள் ஆதரவும் ஊக்குவிப்பும் வழங்குவதைப் பார்க்கும் போது அவர்கள் எந்த உலகில் வாழுகின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஐ. நா அமைதிப் படைகள் போன எந்த நாட்டில் அமைதி காக்கப்பட்டுள்ளது? ஐ.நா. அமைதிப் படைகள் மூலம் ஒடுக்கப்பட்ட எந்தத் தேசிய இனத்துக்கு ஆறுதல் கிடைத்துள்ளது? ஐ. நா அமைதிப்படைகள் மூலம் எந்த விடுதலைப் போராட்டத்திற்கு நியாயங்கிடைத்துள்ளது? நாங்கள் நிதானமாக ஆராய வேண்டிய கேள்வி இது. ஐ.நா. என்பது இன்று முன்னெப்போதையும் விட அமெரிக்க மேலாதிக்கத்தினதும் ஊடுருவலினதும் கருவி. அது 1987ல் வந்த இந்தியப் படைகளை விடவும் ஆபத்தானதாயிருக்கலாம்.

நாம் கொழும்பு நடவடிக்கைகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் மாவிலாறு பகுதியை உள்ளடக்கிய உயர்பாதுகாப்பு வலயம் அரசாங்க வார்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இந் நேரம் தமிழர்களை மீளக் குடியமர்த்துவது பற்றிப் பேசப்பட்டது. எனவே நடக்கப் போவது என்ன? அரச படைகள் வடக்கிற் போலக் கிழக்கின் பகுதிகளிலும் முடிந்தால் மேற்குக் கரையின் வடக்கிலும் விரைவிலேயே உயர் பாதுகாப்பு வலயங்களை நிறுவித் தமிழரை நிரந்தரமாகவே வெளியேற்றலாம். அதன்பின்பு ஐ.நா. படைகள் வந்து கள நிலவரத்தில் மாற்றமில்லாமல் அமைதி பேணலாம். நமக்குத் தேவையானது அது தானா?

இந்த நாடு சர்வதிகார ஆட்சி ஒன்றை நோக்கிச் சறுக்கிக் கொண்டு போகிறது. அந்த ஆட்சியை அடையாளப்படுத்துகிற முகத்தில் மீசை உண்டா இல்லையா என்பதோ தொப்பி உண்டா இல்லையா என்பதோ உடை தேசிய ஆடையா, சீருடையா என்பதோ ஏகாதிபத்தியத்திற்கு முக்கியமில்லை. அவர்கள் வேண்டுகிற “ஸ்திரத்தன்மை” பீரங்கிக் குழாய்களாற் பேணப்பட்டாலும் அவர்கட்கு அது பற்றிக் கவலையில்லை. அவ்வாறே நமக்கும் அவை பெரிய வேறுபாடகளல்ல. நமக்கு வேண்டியது சனநாயக நடைமுறை. அமைதி நியாயமான தீர்வு. எந்த ஊழல் மிக்க ஆட்சியையும் விட ராணுவ ஆட்சி மோசமானது என்பதே பாக்கிஸ்தான் பங்களாதேஷ் இன்னும் பல நாடுகள் கூறும் பாடம்.

மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பொறுப்பேற்க ஆயத்தமாக்கப்படாவிட்டால் மக்களின் பேரால் மக்கள் விரோத சக்திகள் அதிகாரத்தை மேலும் இறுகப் பிடிப்பது தவிர்க்க இயலாதது. நாட்டின் சட்டமும் ஒழுங்கும் குலைந்திருப்பது அதற்கு வசதியாகவே உள்ளது. எனவே பெருகிவரும் சட்ட விரோதச் செயல்கட்கு எதிராக மக்கள் இன, மத, சாதி வேறுபாடில்லாமல் அணிதிரள வேண்டும். இது கொழும்பில் மட்டுமல்ல வடக்கு கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடக்க வேண்டியது.

கொழும்பிலிருந்து தமிழரை வெளியேற்றுவதற்கு எதிரான பொது சன எதிர்ப்பு ஒரு நல்ல தொடக்கப்புள்ளி. அதை என். ஜி. ஓக்கள் திசைதிருப்பு முன்பு சரியான அரசியற் பாதையில் வளர்த்தெடுப்பது சனநாயக முற்போக்குச் சக்திகளது உடனடியான முக்கியம் வாய்ந்த பணி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# 60 வருட பாராளுமன்ற ஆட்சியும் ஆளும் வர்க்கத் தலைமைகளும்

## அன்றைய கொலனிய அடிமை விசுவாசிகள் இன்றைய ஏகாதிபத்திய அடிவருடிகள்

## உயர் வர்க்க சாதியக் குடும்பங்களே ஆட்சி அதிகாரத் தலைமையில் உள்ளன

இலங்கை இன்று எரிமலையின் உச்சியில் இருந்து வருவது போன்ற ஒரு நிலையில் தான் காணப்படுகின்றது. முழுமையானதொரு யுத்தத்தை நோக்கிய நிலைமைகள் குமுறிக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே வடக்கு கிழக்கிலும் அதற்கு அப்பாலும் இரத்தமும் கண்ணீரும் ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது, உயிரிழப்புகள் இடப்பெயர்வுகள் உச்ச நிலையைத் தொட்டு நிற்கின்றன. மனித உரிமை மீறல்களும் ஜனநாயக மறுப்புகளும் உலக அளவில் எதிரொலிகளை ஏற்படுத்தும் அளவிற்கு மோசமான. வழிகளில் இடம் பெற்று வருகின்றன. அதேவேளை பொருளாதாரச் சீரழிவுகளும் நெருக்கடிகளும் நாளாந்தம் வளர்ந்து செல்கின்றன. பொருட்களின் விலைகள் அதிகரிப்பும் சேவைக் கட்டண உயர்வுகளும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பை தாங்க முடியாத சுமைகளாக மாற்றியுள்ளன. இவற்றால் நாட்டின் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் உட்பட அரசாங்க தனியார்துறை ஊழியர்கள் வரையான தொண்ணூறு வீதமான மக்கள் பல்வேறு வகை நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிற்கும் மோசமான நிலையே காணப்படுகின்றது.

நாட்டின் அரசியல் பொருளாதார சமூகத் தளங்களிலே காணப்படும் மேற்படி பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் தீர்வுகள் எவை என்பது பிரதான கேள்வியாக எழுந்து நிற்கின்றது. அனைத்து மக்களின் வாழ்க்கை நிலை, தேசிய இனங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், நாட்டின் எதிர் காலம் என்பன பற்றிச் சிந்திக்கும் அரசியல் சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு சூழலிலேயே இருந்து வருகிறார்கள்.

இந்நிலையிலே இலங்கையின் விசேட சூழலுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ப மாற்றுச் சிந்தனைகளும் அவற்றின் மூலமான தெளிவான அரசியல் கொள்கைகளும் அவற்றை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நடைமுறைகளும் தேவைப்படுகின்றன. அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டுத் தளங்கள் ஒவ்வொன்றிலும் அத்தகைய புதிய சிந்தனைகள் செலுத்தப்படுவது அவசியமாகின்றது.

அவ்வாறு நோக்கும் போது இலங்கையின் அரசியல் தளத்திலே இடம் பெற்று வந்த மாற்றங்களும் வளர்ச்சிகளும் பற்றிய வரலாற்று வழியிலான அவதானிப்பையும் ஆய்வினையும் கொண்டிருப்பது முக்கியமானதாகும். அத்தகைய கண்ணோட்டம் நாட்டின் பொருளாதார சமூக பண்பாட்டுத் தங்களோடு வர்க்க அரசியல் கொண்டுள்ள பிணைப்புகளையும் உறவுகளையும் கண்டு கொள்வதாகவும் அமைதல் வேண்டும். ஏனெனில் இன்று நாம் பாதகமான விளைவுகளாகவும் மோசமான நெருக்கடிகளாகவும் இரத்தம் வழிந்தோடும் அவலங்களாகவும் அனுபவித்து வரும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்குமான காரணங்களைக் கண்டு கொள்ள வேண்டியுள்ளது. அவற்றை காண்பதற்கு வரலாற்றுக் கண்ணோட்டம் சமூக விஞ்ஞான அடிப்படையில் அமைந்திருப்பது ஒரு முன் நிபந்தனையாகிறது. அது மாக்சிச உலகக் கண்ணோட்டம் தழுவிய ஒன்று என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

இன்று மாக்சிச உலக நோக்கிலான வர்க்கப் பார்வை என்பதும் வர்க்கப் போராட்ட அரசியல் என்பதும் காலம் கடந்தவை என்று கூறி வருவது சில அறிவுஜீவிகள் என்போரது நாகரீகமாகக் காணப்படுகின்றது. அதிலும் ஒரு காலத்தில் தம்மை மாக்சிச வாதிகளாகக் காட்டி சமூக கல்வி பண்பாட்டுத்தளங்களில் உயர்வு கண்டவர்கள் இப்போது தம்மை பின்நவீனத்துவ வாதிகள் எனக் கூறி அப்பட்டமான மார்க்சிச விரோதக் கருத்துக்களின் பரப்புரையாளர்களாகி நிற்கின்றமையையும் காண முடிகின்றது.

ஆனால் வர்க்கக் கண்ணோட்டத்தின் ஊடாக வரலாற்று வளர்ச்சியையும் அரசியல் பொருளாதார சமூக பண்புாட்டு அம்சங்களையும் அணுகி நிற்பது என்பது சமூக அறிவியல் சார்ந்த அடிப்படையைக் கொண்டதாகும். இன்று இன முரண்பாடும் இன ஒடுக்கு முறையும் முன்னெழுந்து பிரதான இடத்தில் இருந்து வருகின்றது என்பது மறுக்கவியலாத யதார்த்தமாகும். அதேவேளை வர்க்க முரண்பாடும் வர்க்க ஒடுக்குமுறையும் சமூக அசைவியக்கத்தின் அடிப்படையாகவும் உந்து விசையாகவும் இருப்பதை எவ்வகையிலும் யாராலும் நிராகரித்து விட முடியாது.

அந்த வகையில் இலங்கையின் அரசியல் வரலாற்றின் வளர்ச்சியைப் பின்னோக்கிப் பார்ப்பதாயினும் சரி இன்றைய அரசியலைக் காண்பதாயினும் சரி வர்க்கம் என்ற நிலையினைத் தவிர்த்துப் பார்க்க இயலாது. இது சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத்தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் தொடர்ந்து நிலைத்து வரும் ஒன்றாகும். சொத்துடைய வர்க்கம்– சொத்துக்கள் அற்ற வர்க்கம், சுரண்டும் வர்க்கம்– சுரண்டப்படும் வர்க்கம், ஆளும் வர்க்கம்– ஆளப்படும் வர்க்கம் என்ற ஏற்றத்தாழ்வான நிலை நீடித்து வரும் ஒன்றாகும். இத்தகைய வர்க்க நிலை என்பது இலகுவில் அழிக்கப்பட முடியாத ஒன்றாகும். இது பற்றி தோழர் மாஓசேதுங் கூறும் போது "ஒவ்வொருவரிடமும் அவரவர்க்குரிய வர்க்க முத்திரை இருக்கவே செய்யும்" என்றார். அண்மையில் வெளிவந்த ஒரு கட்டுரையில் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த குடும்பங்கள் பற்றி எழுதப்பட்டிருந்தது. அதாவது குடும்ப அரசியல் எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும் நீடித்து வந்தது என்பதையும் அவர்கள் பின்பற்றிய அரசியல் பண்பாடு பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இவ் இரண்டு ஆளும் கட்சிகளின் தலைமைகள் தத்தமது குடும்ப அரசியலாக இலங்கையின் அரசியலை முன்னெடுத்து வருவதற்கு அடிப்படையாக அமைந்த வர்க்க அரசியல் நிலைப்பாட்டைப் பற்றி அக்கட்டுரை ஒரு வரிதானும் தொட்டுக் காட்டவில்லை. அவ்வாறே இவ் அரசியல் தலைமைத்துவக் குடும்பங்கள் கொண்டிருந்த உயர் சாதிய மேட்டுக்குடி அந்தஸ்து பற்றியும் குறிப்பிடவில்லை. அத்துடன் பௌத்த மத ஆதிக்கம் பற்றியும் சொல்லப்படவில்லை. எனினும் இலங்கையின் கொலனித்துவ கால அரசியலிலும் அதன் தொடர்ச்சியாகப் பின் வந்த முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் தலைமைத்துவங்களிலும் வர்க்கம் இனம், சாதி, மதம் என்பன ஆதிக்கம் செலுத்தி வந்த வரலாற்று நடைமுறைகளைக் காண்பது முக்கியமானதாகும். இன்று ஜனநாயகம், மக்கள் யுகம், சுதந்திரமான தேர்தல், பாராளுமன்றத்திற்கு எவரும் வரலாம் என்றெல்லாம் அலங்கார வார்த்தைகள் கொண்டு பேசப்படுகின்றது. ஆனால் அரசியலில், அரசாங்கத்தில், பாராளுமன்ற முதலாளித்துவ ஜனநாயத்தில் ஒருவர் முதன்மையான தலைமை இடத்திற்கு வரவேண்டுமாயின் வர்க்கம் இனம் சாதி மதம் இவ் நான்கிலும் "உயர்ந்த" இடத்தைக் கொண்ட ஒருவராக இருக்க வேண்டும் என்பது இலங்கை அரசியலில் ஒரு எழுதா விதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரே ஒரு தடவை அதுவும் குறுகிய மூன்று வருடங்களுக்கு மட்டுமே சிங்கள உயர்சாதியான கொவிகம சாதியினரல்லாத "குறைந்த சாதியினர்" எனக் கூறப்படும் ஆர். பிரேமதாசவினால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடிந்தது. வெகுஜன கவர்ச்சி அரசியல் ஆளுமையும் குறிப்பிட்டளவிற்கு மக்கள் சேவையும் கொண்டிருந்த ஆர். பிரேமதாசாவின் பதவிக் காலத்தை சீரணிக்க முடியாத சிங்கள உயர்வர்க்க உயர் சாதிய மேட்டுக்குடியினர் அக்கட்டத்தில் தவியாய்த் தவித்துக் கொண்டதையும் வரலாற்றில் காண முடிந்தது. இதனை தவிர்த்துப் பார்த்தால் இலங்கை அரசியலின் ஆளும் வர்க்கத் தலைமைகள் யாவும் வர்க்க இன சாதி மத அம்சங்களில் நிலப்பிரபுத்துவத்தின் தொடர்ச்சி கொண்டனவாகவே இருந்து வருவதைக் காணமுடியும்.

இலங்கை நாலரை நூற்றாண்டுகள் ஐரோப்பிய கொலனித்துவத்தின் கீழ் அகப்பட்டிருந்தது. அதில் பிரித்தானியர்களிடம் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகள் வரை இருந்து வந்தது. எனவே கொலனித்துவ ஆதிக்கப் பிடி இறுகி நீடித்து வந்த சூழலில் பலவகைப்பட்ட அடிமைத்தனங்களும் ஊட்டி வளர்க்கப்பட்டன. அந்த எஜமானிய அடிமைத்தன கருத்தியல் நிலப்பிரபுத்துவக்காலத்தின் நீட்சியாக நிலை நிறுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் கொலனித்துவ வாதிகள் இங்கிருந்த நிலப்பிரபுத்துவ அமைப்பிலும் உறவிலும் பெருமளவு மாற்றங்களைச் செய்ய விரும்பவில்லை. மத்திய மலைப் பிரதேசங்களின் நிலங்களை அபகரித்து பெருந்தோட்ட தேயிலை ரப்பர் உற்பத்தியை செய்தனரே தவிர அதற்கு அப்பாலான நிலப்பிரபுத்தவ சொத்துடைமை உறவுகளில் பெருமளவிலான மாற்றங் களைக் கொண்டு வரவில் லை. ஏனெனில் கொலனிய வாதிகளுக்கு இந் நாட்டின் நிலவுடைமைவர்க்க சக்திகள் நட்பு ரீதியிலும் நிர்வாக சேவை அடிப்படையிலும் தேவைப்பட்டனர். ஆதலால் நிலப்பிரபுத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தோர் அவர்களின் நிர்வாகப் பதவிகள் பெற்று உள்ளூர் அதிகாரிகளாகி மக்களை அடக்கி ஆள்வோ ராக நிலைத்தனர். இதனை நிலப்பிரபுத்தவ ஆதிக்கத்தின் தொடர்ச்சியாகவே காண முடியும். சொத்துடைமையின் இருப்பும் தொடர்ச்சியும் பேணப்பட்டு புதிய வளர்ச்சிப் படிகளைப் பெறவும் இத்தகையோரால் முடிந்தது. இவர்களில் ஒரு பிரிவி னர் சிங்கள மக்கள் மத்தியில் உயர்சாதியினரான கொவிகம சாதிப் பிரிவைச் சேர்ந்தவர் களாகவும் இருந்தனர்.

**சி. கா. செந்திவேல்**
*பொதுச் செயலாளர் புதிய- ஜனநாயக கட்சி*

மேலும் இவர்கள் கிறிஸ்தவ மதம் தழுவி ஆங்கிலக் கல்வி பெற்று தமது ஆதிக்க வர்க்க வளர்ச்சிகளை மென்மேலும் தக்க வைத்தும் வந்தனர். சேனநாயக்கா, பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தன, விக்கிரமசிங்க போன்ற சிங்கள அரசியல் தலைமைத்துவக் குடும்பங்களின் தந்தை, பேரன், பூட்டன், பாட்டன்மார் என் போரது பெயர்கள் யாவும் கிறிஸ்தவ, ஆங்கிலேயர்களது பெயர்களாக இருப்பதை உற்று நோக்கின் அவர்களின் கொல னிய விசுவாசம் சார்ந்த வர்க்க- மதப் பின்புலத்தைக் கண்டு கொள்ளலாம்.

இதனால் இலங்கையின் ஆளும் வர்க்க அதிகார சக்திகளாக இருந்து வரும் அரசியல் தலைமைத்துவ குடும்பங்கள் நிலப்பிரபுத்துவ வழிவந்த கொலனித்துவ சேவை புரிந்த முதலாளித்துவ வளர்ச்சி கண்ட குடும்பங்களே எனக் காணலாம். இவர்களது இன்றைய முதலாளித்துவ நிலைப்பாடும் ஏகாதிபத்திய பாதம் தாங்கும் போக்கும் தொடருகின்ற அதேவேளை நிலப்பிரபுத்துவ கருத்தியலில் மூழ்கியவர்களாகவே இருந்து வருகின்றனர். இவர்கள் மலைநாட்டு சிங்களவராயினும் கீழ் நாட்டு சிங்களவராயினும் நிலப்பிரபுத்துவ காலத்தின் தொடர்ச் சியான உயர் வர்க்க- சாதிய "வளவுச்" சிந்தனையிலிருந்து விடுபடாதவர்களாகவே இருந்து வருகின்றார்கள். இத்தகைய குடும்பங்களில் இருந்து தான் சிங்கள இனத்தின் மத்தியிலான முதலாளித்துவ வளர்ச்சி ஏற்பட்டது. அத் தகைய வளர்ச்சி தரகு முதலாளித்துவமாகவும் தேசிய முதலாளித்துவமாகவும் பின் பெரு முதலாளித்துவமாகவும் முன் சென்றது. இவ் வளர்சிப் போக்கில் கொவிகம அல்லாத சாதிகளான துராவ, கரவா, சலாகம சாதிகளின் உயர்மட்டத்தினர் முதலாளிகளாக உருவாகினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பிருந்த வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்தோராவர். எனினும் சாதி அடிப்படையில் கொவிகம பெரும்பான்மை இவர்களைத் தாழ்ந்தோராகவே கருதியது. மேநிலையடைந்த சில கரையோரச் சாதியினர் திருமணத் தொடர்புகள் மூலம் தமது சாதி அடையாளத்தை மாற்றி உயர்த்திக் கொண்டதாகவும் கூறப்படுவதும் நோக்குதற்குரிய



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவம் பேரினவாதம் மூன்றும் இணைந்ததே "ஜனநாயக" ஆட்சி

தாகும். எவ்வாறாயினும் இம் முதலா ளித்துவ வளர்ச்சி நிலப்பிரபுத்துவக் கருத்தியலையும் சிந்தனை நடைமுறைகளையும் பெருமளவில் புறந்தள்ளாத வகையில் அவற்றை உள்வாங்கியே முன்சென்றது. இத்தகைய நிலையானது சமூகத்தில் ஜனநாயகப்படுத்தலை பரந்தளவில் முன்னெடுப்பதற்குத் தடையாகவே இருந்து வந்தது. பாராளுமன்ற ஜனநாயகமும் தேர்தல் முறைமையும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் முக மூடியாக இருந்ததே தவிர அதன் மூலம் மக்கள் மத்தியில் பரந்த ஜனநாயக நடைமுறைகள் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. அதற்குப் பதிலாக முன்பு குறிப்பிட்ட ஆண்டபரம்பரையில் வந்த மேட்டுக்குடி உயர் வர்க்க- சாதியக் குடும்பங்கள் பாராளுமன்ற ஜனநாயகத்திலும் தத்தமது ஆதிக்கத்தை வலுப்படுத்தி நிலைநிறுத்திக் கொண்ட நிகழ்வே நடந்தேறியது.

இலங்கையில் முதலாளித்துவப் பாராளு மன்ற ஆட்சி முறை 1947ல் சோல்பரி அரசியலமைப்பினால் அறிமுகப்படுத்தப் பட்டது. முதலாவது பாராளுமன்றத்திற்குப் பொதுத் தேர்தலும் நடாத்தப்பட்டு அதன் ஊடாக கொலனித்துவ வாதிகள் தாம் வைத்திருந்த ஆட்சி அதிகாரத்தை கைமாற்றிக் கொடுத்தனர். இத்தகைய அதிகாரக் கைமாற்றத்தைப் பெற்றவர்கள் ஏலவே குறிப்பிட்ட இலங்கையின் உயர்வர்க்க உயர் சாதிய சிங்கள அரசியல் ஆதிக்க குடும்பங்களேயாவர். இவர்கள் தம்மை பௌத்த மதக் காவலர்களாகவும் மாற்றிக் கொண்டவர்கள். இத்தகையவர்கள் தான் இலங்கையின் சுதந்திரத்தை 1948ல் தமதாக்கிக் கொண்டார்கள். அச் சுதந்திரம் இந் நாட்டின் சாதாரண உழைக்கும் மக்கள் எவருக்கும் உரிய சுதந்திரமாக இருக்கவில்லை. இச் சிங்கள பௌத்த மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தோடு பாராளுமன்ற ஆட்சி முறை அறிமுகப்படுத் தப்படுவதற்கு முன்பிருந்தே தமிழர் நிலப்பிரபுத்துவ வழி வந்த உயர் வர்க்க உயர் சாதிய மேட்டுக்குடியினர் ஐக்கியம் பூண்டிருந்தனர். கொலனித்துவ வாதிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக் கூறில் உருவாக்கிய அரச நிர்வாகத்தில் கல்வியும் சொத்துடை மையும் கொண்ட உயர்சாதி சைவ வேளாளர்களை நியமித்து அவர்களுக்கு "சேர்" உட்பட பலவகையான பட்டங்கள் பதவிகளையும் வழங்கியிருந்தனர். இவர்களே தலைநகரில் தமிழர் பிரதிநிதிகள் என்றும் தமிழர் பிரதேசங்களில் தமிழ்த் தலைவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.



பிரித்தானியர்க ளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு அமைய இவ் மேட்டுக் குடித் தமிழர்கள் அன்றைய ஆட்சி நிர்வாகத்தில் நம்பிக்கைக்குரிய அடிமை விசுவாசிகளாகச் சேவை புரிந்து வந்ததுடன் தமது உயர் வர்க்க சாதிய நிலைகளை வலுப்படுத்தியும் கொண்ட னர். தமிழர்களுடைய அரசியல் வரலாறு என்பது இத்தகையவர்களை மையப்படுத்தியே எழுதப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி முறை 1947ல் ஏற்படுத்தப்பட்டபோது மேட்டுக்குடிச் சிங்கள பௌத்த ஆளும் வர்க்கத்தோடு தமிழ் மேட்டுக்குடி நிலப்பிரபுத்துவ வர்க்க- உயர்சாதிய ஐக்கியம் மேலும் உறுதியாக அமைந்தது. முதலாவது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் தமிழ்ச் சைவவேளாள மேட்டுக்குடிக் கனவான்கள் அமைச்சர்களாகவும் அதி உயர் நிர்வாகிகளாகவும் பதவி வகித்தனர். பின்பு பாராளுமன்றத்தில் சைவ கிறிஸ்தவ வேளாளத் தலைமை வந்த போதிலும் கூட மேற் குறிப்பிட்ட சிங்கள- தமிழ் உயர் வர்க்க ஐக்கியம் குலையவில்லை. இன்றைய பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தின் மத்தியிலும் கூட இம் மேட்டுக்குடி வர்க்க ஐக்கியம் உள்ளார்ந்த ரீதியில் நீடித்துச் செல்லும் ஒன்றாகவே காணப்படுகின்றமை நோக்க வேண்டிய அம்சமாகும்.

இலங்கையில் சோல்பரி அரசியலமைப்பு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி முறையானது 1947முதல்- 2007வரை அறுபது வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது. 1972ல் புதிய அரசியல் அமைப்பு என்றும் பின் 1978ல் மற்றொரு அரசியல் அமைப்பு என்றும் இலங்கையின் ஆளும் வர்க்கத்தினரால் வரையப்பட்டு நடைமுறையாக்கம் பெற்றது. ஆனால் அவற்றில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் வகுத்தளித்துச் சென்ற அரசியலமைப்பின் எல்லைகளைத் தாண்டாதவாறே அமைந்திருந்தன. காரணம் சிங்கள பௌத்த ஆளும் வர்க்க சக்திகள் தமது வர்க்கத் தேவைகளின் பொருட்டும் ஏகாதிபத்திய சக்திகளின் விருப்பங்களுக்கு ஏற்பவும் தான் அரசியலமைப்பை வரைந்தார்களே அன்றி ஏகப் பெரும்பான்மையான சாதாரண உழைக்கும் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மற்றும் சிறுபான்மை சமூக மக்கள் சார்பானதாகவோ அன்றி அவர்களுக்கு சமத்துவமும் நம்பிக்கையும் தரக்கூடியதாகவோ அவ் அரசில் யாப்பு வரைந்து நிறைவேற்றப்படவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகளையும் அபிலாஷைகளையும் அடிப்படை வாழ்வுரிமைகளையும் நிறைவு செய்யக் கூடியதான ஒரு அரசியலமைப்பு உண்மையான

**1947ல் சோல்பரி
1972ல் சிறிமாவோ
1978ல் ஜே.ஆர்.
உருவாக்கிய
அரசியல்மைப்புகள்
உழைக்கும்
மக்களுக்கும் தேசிய
இனங்களுக்கும்
எவற்றையும் வழங்க
வில்லை**

ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பது அறுபது வருடகால முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி முறை எடுத்துக் காட்டும் உண்மைகளாகும்.

இலங்கை அதன் பரப்பளவில் சிறிய நாடு ஆயினும் அதன் மக்கள் தொகையினருக்கு வாழ்வும் வளர்ச்சியும் வழங்கக் கூடிய நீர் நிலம் உள்ளிட்ட வளங்களை உடைய ஒரு நாடாகும். விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட இந்நாட்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவைக் காண முடியும். ஆனால் ஏற்கனவே நிலப்பிரபுத்துவக் காலம் முதல் வளம் மிக்க நிலங்களையும் நீர்ப்பயன்படுத்தல்களையும் நிலப்பிரபுத்துவ வழிவந்த உயர் வர்க்க உயர் சாதியக் குடும்பங்கள் தமதாக்கி உடைமையாக் கிக் கொண்டன. அந்நிலங்களில் சாதாரண விவசாயி கள் கூலி குத்தகை விவ சாயிகளாகவும் நிலமற்ற வர்களாகவும் இருந்தே வந்தனர். எழுபதுகளில் கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம் நிலமற்ற மக்களுக்குப் பெரு நன்மை தருவதாக அமையவில்லை. நில உச்ச வரம்பு 50 ஏக்கராகவே வகுக்கப்பட்டது. அதில் பல குறுக்கு வழிகள் மூலம் வளமுள்ள பயன் தரும் நிலங்கள் தொடர்ந்தும் நிலவுடைமைக் குடும்பங்களின் கைகளிலேயே இருந்தன. அப்படி இருந்தும் கூட 1977ல் ஜே.ஆர். ஜெயவர்த்தன பதவி க்கு வந்த பின் நில உச்ச வரம்பு 100 ஏக்கராக மாற்றப்பட்டு மேலும் நிலவுடைமையாளர்கள் பாதுகாக்கப் பட்டதுடன் இழந்த நிலங்களும் அவர்களால் மீட்கப்பட்ட நிலை உருவா க்கப்பட்டது. இது சொத்துடைய சிங்கள மேட்டுக்குடியினரின் நிலம் மீதான ஆதிக்கத்தின் தன்மையை வெளிக்காட்டி நின்றது.

இன்னொரு புறம் 1950கள் முதலாக நீர் நில வளங்கள் குறைந்த தூரப்பிரதேசங்களில் உள்ள அரச காட்டு நிலங்கள் பகிர்ந்து வழங்கப்பட்டன. நீர்விநியோகமும் ஏனைய அடிப்படை வசதிகளுமற்ற அந் நிலங்களில் ஏழை மக்கள் விவசாயிகள் என்ற பெயரில் இருத்தப்பட்டனர். இவ்வாறு நிலமற்ற சிங்கள மக்களுக்கு நிலம் வழங்குவதாகக் கூறித் தமிழர்களினதும் முஸ்லீம்களினதும் பாரம்பரிய பிரதேசங்களான கிழக்கிலும் வடக்கிலும் பேரினவாத உள்நோக்கங்களுடனான திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்தினர். இதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் விழுத்தும் பேரினவாத ஆளும் வர்க்கத் திட்டங்களை அரங்கேற்றினர். இங்கே அவதானிப்பிற்குரிய முக்கிய விடயம் யாதெனில் பௌத்த சிங்கள நிலவுடைமை வழிவந்த உயர் மேட்டுக்குடி ஆளும் வர்க்க குடும்பங்களுக்கும் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் சிங்கள மக்களுக்கிடையிலான வர்க்க வேறுபாட்டு அம்சமாகும். இவ் அடிப்படையான வர்க்க வேறுபாடானது ஆளும் வர்க்க ஆளப்படும் வர்க்க நிலைப்பாடாக தமிழர்கள் முஸ்லீம்கள் மலையகத்தமிழர் எனச் சகல சிறுபான்மைத் தேசிய இனங்கள் மத்தியிலும் நிலைத்த வையாக இருந்து வருகின்றன.

எனவே அரசியலில் குடும்ப ஆதிக்கம் என்பதன் அடிப்படைக் கூறுகளிடையே சொத்து சுகம் சுரண்டல் ஆகியவற்றை உள்ளடக்கிய வர்க்கமும் தென்னாசியச் சூழலில் காணப்படும் நிலப்பிரபுத்துவ வழிவந்த உயர் சாதிய குடும்ப அந்தஸ்தும் முக்கியமானவைகளாகும். முக்கியமாக இந்தியா உள்ளிட்ட சார்க் எனப்படும் நாடுகளில் இடம் பெற்று வரும் ஆட்சி அதிகார பீடங்களில் மேற் கூறியவற்றைத் தெளிவாக அடையாளம் காண இயலும்.

இலங்கையில் அறுபதுகளின் ஆரம்பத்தில் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெயருடன் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வர முடிந்தமை அவரது அரசியல் சேவையோ தொடர்ச்சியோ காரணமல்ல. அவ்வாறே 1994ல் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அவரது மகள் சந்திரிகா வரமுடிந்தமை அவர் முன்வைத்த மக்கள் சார்பு கொள்கை வாக்குறுதிகள் மட்டும் காரணம் அல்ல. யாவற்றிலும் அடிப்படையாக தந்தைக்கும் தாய்க்கும் பின் மகளுக்கும் இருந்து வந்த ஆண்ட பரம்ப ரையின் உயர் வர்க்க சாதியக் குடும்பப் பின்னணி என்பதை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது. அவ்வாறே டி. எஸ். சேனநாயக்காவும் அதன் பின் அவரது மகன் டட்லி சேனநா யக்காவும் அடுத்து சேர். ஜோன் கொத்தலாவலவும் அதிகாரத்திற்கு வர முடிந்தமைக்கு மேற் கூறப்பட்டதை யொத்த கார ணங்களே அடிப்படையானவைகளாகும். அதன் பின் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவிக்கு வரவும் பிரேமதாசாவின் குறுகிய கால இடைவெளியை அடுத்து ஜே.ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலும் அதிகாரத்திலும் இருந்து கொள்வதற்கும் அதே அடிப்படைகள் தான் இருந்து வருகின்றன. இன்றைய ஐக் கிய தேசியக் கட்சியின் உள்ளக நெருக்கடியில் ரணில் நின்று பிடிப்பதற்கும் அவருடன் கூடவே சேனநாயக்க குடும்ப அரசியல் வாரிசாக உள்ள ருக்மன் சேனநாயக்கா போன்றோர் இருந்து வருவதும் ஏதோ ஜனநாயக விழுமியங்களின் உயர்ந்த நடவடிக்கைகளால் அல்ல என்பது அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்படுவது அவசியமாகும்.

இத்தகைய வர்க்க- சாதிய மேட்டுக்குடி குடும்பங்களின் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் கிராமங்கள் வரை கொண்டு சென்று நிலை நிறுத்துவதில் பௌத்த மத பீடங்களின் பங்கும் பணியும் முக்கியமானதாகும். அத்துடன் அதே பௌத்த மத பீடத் தலைமைகளின் ஆசிகள் மட்டுமன்றி அவர்களின் விருப்பு வெறுப்புகளும் ஆட்சி அதிகாரக் குடும்பங்களால் உள்வாங்கிக் கொள்ளப்படுவது தவிர்க்க முடியாத நியதியாக இருந்து வருவதையும் காணமுடியும்.

நாட்டில் நவீன தொழில் நுட்பத்தின் வரவும் முதலாளித்துக் கூறுகளின் வளர்ச்சிகளும் பற்றி நிறையப் பேசப்படுகின்றது. குறிப்பாக இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதல் சகல ஆளும் வர்க்கத் தலைமைகளாலும் அரசாங்கங்களினாலும் வரவேற்கப்படுகின்றன. ஆனால் இவை அனைத்தையும் மீறிய நிலப்பிரபுத்துவ அமைப்பினது கருத்தியலும் சிந்தனை நடைமுறைகளும் கிராமங்கள் நிறைந்த எமது பின்தங்கிய விவசாய நாட்டில் ஆதிக்கம் பெற்றவையாக நீடித்து நிற்கின்றன. ஆளும் வர்க்க குடும்பங்களிடம் எந்தளவுக்கு ஆண்டபரம்பரை ஆதிக்கப் போக்கும் திமிர்த்தனங்களும் இருந்து வருகின்றனவோ அந்தளவிற்கு மக்கள் மத்தியில் நிலவுடைமை வழிவந்த அடிமைச் சிந்தனைப் போக்குகளும் நடைமுறைகளும் இருந்து வருகின்றன. இந் நிலை தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக மக்கள் அனைவரிடத்திலும் வெவ்வேறு அளவுகளில் இருந்து வருவதை மறுக்க முடியாது. இந் நிலை ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் தொட்டு உள்ளூராட்சித் தேர்தல்கள் வரை ஆளும் வர்க்க கட்சிகளால் நன்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இத்தகைய நிலையைக் குறிப்பிட்டளவு தூரத்திற்கு எதிர்த்து நின்றவர்கள் அன்றைய இடதுசாரிகளாக இருந்தனர். இருப்பினும் அவர்களால் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்கு அப்பால் தமது இடதுசாரிக் கொள்கைகளில் உறுதியாகக் கால் ஊன்றி நிற்க முடியவில்லை. அதற்கான பிரதான காரணம் அவர்களது வர்க்க ஊற்று மூலமேயாகும். வசதி வாய்ப்புகள் கொண்ட உயர் வர்க்க சாதிய குடும்பங்களில் இருந்து வந்த இடதுசாரித் தலைமைகள் 40, 50 பதுகளில் மிகவும் முற்போக்கான சில சந்தர்ப்பங்களில் புரட்சிகரமான நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தனர். சமூக மாற்றம் சோஷலிசம் அவற்றுக்கான போராட்டம் பற்றிப் பேசிவந்த அத் தலைமைகள் தமது உயர்வர்க்க மூலத்தின் முத்திரைக்கு அமையத் தம்மை வெளிபடுத்த ஆரம்பித்தனர். அறுபதுகளில் பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாத சேற்றில் முழுமையாக இறங்கிக் கொண்டனர். அதனால் தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும் உழைக்கும் மக்களிடமிருந்தும் அந்நியப்பட்டு வந்த அவர்கள் ஆளும் வர்க்க சக்திகளுக்குப் பின்னால் சென்று தமது சுயம் யாவற்றையும் இழந்தவர்களாகிச் சீரழிந்து கொண்டனர். இத்தகையவர்கள் முன்னைய சந்திரிகா அம்மையாரின் ஆட்சியிலும் இன்றைய மகிந்த சிந்தனை ஆட்சியிலும் யாவற்றுக்கும் தலையாட்டும் பொம்மைகள் போன்று இருந்து வருகின்ற போக்கையே காண முடிகின்றது.

இவையாவும் நமக்கு எவ்வித படிப்பினைகளை முன்வைக்கின்றது என்பதே சிந்தனைக்குரியதாகவுள்ளது. இவற்றையிட்டு ஆரோக்கியமான அரசியல் விவாதங்கள் முன்னெடுக்கப்படுவது அவசியமானதாகும். அதன் மூலமே ஆளும் வர்க்க அரசியலுக்கு மாற்று அரசியலாக உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்ட அரசியலை முன்னெடுக்க முடியும். அத்தகைய வர்க்க அரசியலால் தான் நாடும் மக்களும் தேசிய இனங்களும் எதிர் நோக்கி நிற்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பாதையில் முன்னேற முடியும். இலங்கையின் வர்க்கங்கள் பற்றிய ஆய்வும் வர்க்கப் போராட்ட அரசியலும் மாக்சிச லெனினிச வழி நின்று முன்னெடுக்கப்படுவது அவசியமானதாகும். அதற்கான வழிகளில் சிந்திப்பதும் விவாதிப்பதும் செயல்படுவதும் இன்றைய தேவையாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மத்திய வங்கியின் அறிக்கையும் பொருளதார வளர்ச்சியும்

ஞானகரன்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அரசினால் நியமிக்கப்பட்ட நபர். இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றி வெளியிடப்படும் புள்ளி விபரங்கள் அரசாங்கத்தின் சாதனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஆளுனர் அவ்வப்போது கருத்துக் கூறி வருகிறார். பொருளாதார வளர்ச்சிபற்றிக் கூறும் போது விவசாயம்– கைத்தொழில்– சேவை என்பவற்றின் வளர்ச்சியைக் கொண்டே கணிக்கப்படுகிறது. அண்மைக் காலங்களில் சேவைத்துறை– பெரிய அளவில் தொலைத் தொடர்பின் வளர்ச்சியாகவே காணப்பட்டு வருகின்றதை அவதானிக்கலாம்.

கைத்தொழில் துறையைப் பொறுத்த மட்டில் சென்ற வருடத்தில் மாத்திரம் பல நூற்றுக் கணக்கான ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதை ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் கைத்தொழில்துறையில் அரசின் பொறுப்பில் இருந்த யாவும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதனால் நாட்டிற்கும் மக்களுக்கும் உழைப்பில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கும் பயன் ஏதும் இல்லை.

விவசாயத்துறை பல வருடங்களாக பெரும் பின்னடைவுகளை சந்தித்து வருகிறது. கடந்தவருடத்தில் விவசாயம் ஒரு வீத வளர்ச்சியை மட்டுமே பெற்றது என அறிக்கை கூறுகிறது. தெங்கு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் பல்லாயிரக் கணக்கான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இன்று ஒரு தேங்காயின் விலை கொழும்பில் 20 முதல் 25 ரூபாவாகவுள்ளது. இது எதனைக் குறிக்கிறது.

இந்தியாவுடன் செய்து கொண்ட இந்தியாவுக்கு சாதகமான வர்த்தக உடன்படிக்கையின் படி தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் பாதிக்கப்பட்டுள்ளனர். வேறு வகைகளில் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வியாபாரிகள் பிழைத்துக் கொள்கிறார்கள் தேங்காய் எண்ணெய்க்கு மாற்று எண்ணெய் இறக்குமதி செய்பவர்கள் தேங்காய் எண்ணெய் பயன்படுத்தினால் கொலஸ்ரோல் வரும் என்று பிரச்சாரம் செய்து தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவதிலிருந்து மக்களை தவிர்த்துக் கொள்ள முயன்று வருகின்றனர். இது பல்தேசிய நிறுவனங்களின் திட்டமிட்ட பிரசாரம் என்றும் கூறப்படுகிறது.

தேயிலை ஏற்றுமதியில் பெறுமதி கூடிவிட்டதாக நிபுணர்கள் கதைவிடுகிறார்கள். இலங்கையின் பணவீக்கம் இருபது வீதமளவில் உள்ளதாக மதிப்பிடுகிறார்கள். பல வருடங்களுக்கு முன் 99 ரூபாவாகவிருந்த அமெரிக்க டொலர் பெறுமதி இன்று 111 ரூபாவாக மாற்றம் கண்டுள்ளது. இது இலங்கையின் நாணயப்பெறுமதி வீழ்ச்சியைக் காட்டுகிறது.

விவசாயத்திற்கு உந்துதல் கொடுக்கும் பொருட்டு உரத்திற்கு மானியம் வழங்கப்படுவதாக அரசு கூறுகின்றபோதும் அந்த மானியம் உரிய முறையில் விவசாயிகளைச் சென்றடையவில்லை. ஊழல் மூலம் இடையில் உள்ள அதிகாரிகளும் பணக்காரப் பெருச்சாளிகளும் உர விநியோகத்தில் பணம் சம்பாதித்து வருகின்றனர். உற்பத்தி செய்யப்பட்ட நெல் உரிய முறையில் களஞ்சியப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் பெரும் நெருக்கடியில் உள்ளனர். நெல்லுக்கு ஆகக் கூடிய கொள்விலை ரூபா 16–50 குறிக்கப்பட்ட போதும் விவசாயிகள் அந்தப் பயனைப் பெற முடியாதுள்ளது. விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் உரியமுறையில் நெல் கொள்வனவு செய்வதில்லை. இதனால் கடன் பட்ட விவசாயிகள் தனியாருக்கு ரூபா10, 12, 13, ரூபாய்களுக்கு நெல்லை விற்று நஷ்டமடைகின்றனர். தமது நெல் உற்பத்திக்கான கடனை அடைக்க முடியாது பலர் தற்கொலை செய்துள்ளனர். ஆனால் ஒரு கி. அரிசி சந்தையில் 40ரூபா முதல் 50ரூபாவரை விற்கப்படுகிறது. இந்த இடைக் கொள்ளை லாபம் தனிமுதலாளிகளுக்கு சென்றடைகிறது. வடமத்திய, வடமேல் மாகாணங்களில் பெரும் நெல்குற்றும் ஆலை முதலாளிகளக அரசாங்க எதிர்க்கட்சி எம். பீக்கள் அமைச்சர்கள் இருந்து வருவது ஒன் றும் இரகசியம் இல்லை. உரத்திற்கு மானியம் வழங்கப்பட்டு வருவதாக அரசாங்கம் பெரும் பிரச்சாரம் செய்கின்ற போதும் விவசாயிகள் மிக மோசமான வாழ்க்கை நடத்துகின்றனர். விவசாயிகள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் விலை மாதத்திற்கொரு தடவை அதிகரிக்கப்பட்டு வருகிறது. உலகச் சந்தை விலை அதிகரிப்பு என்ற ஒரு காரணத்தை மட்டும் காட்டி எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது. டீசல் பெற்றோல் மண்ணெண்ணெய் என்பவற்றில் மண் எண்ணெய்யானது சாதாரண ஏழை மக்களின் பாவனைக்கான எரிபொருளாக உள்ளது.

விவசாயிகளுக்கும் சாதாரண பொதுமக்களுக்கும் மானியம் வழங்க மறுக்கும் அரசு மின்சார சபைக்கு டீசலை மானிய விலையில் வழங்கி வருவது இப்போது தெரிய வந்துள்ளது. பொது மக்களுக்கு 67 ரூபாவாக விற்கப்படும் டீசல் மின்சார சபைக்கு 55 ரூபாவாக வழங்கப்பட்டு வருகிறது. அதை அதே விலையில் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அமைச்சர் பௌவுசி திட்டவட்டமாக மறுத்து விட்டார். மின்சார சபை பலகோடி ரூபாய் மின்சாரத்தை படையினருக்கும் அரச நிறுவனங்களுக்கும் கடனாக கொடுத்து வருகிறது. அதனால் மின்சார சபை பாரிய நிதி நெருக்கடியில் உள்ளது. இதன் காரணமாக மின்சார சபை தனது தேவைகளுக்கு அவசியமான பணத்தை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறும் போது பெருமளவு வட்டி செலுத்த வேண்டியுள்ளது. இதுவே மின்சார சபையின் நெருக்கடிக்குக் காரணம். ஆனால் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி மக்கள் மீது சுமையாக்கிக் கொள்ளும் போது மின்சாரசபை நட்டத்தில் இயங்குவதாகக் கூறிக் கொள்கிறது. ஏன் எப்படி நஷ்டம் வருகிறது என்பதை மூடி மறைக்கிறார்கள். அதைப் போலவே பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் கடனை மீளப் பெறாத நிலையில் வங்கிகளிடமிருந்து கடனைப்பெற்று அவற்றிற்கு பெருவட்டியைச் செலுத்துகின்றது. பெற்றோல் டீசல் மண்ணெண்ணெய் விலை



தொடர்ச்சி 11ம் பக்கம்

# சுதந்திர வர்த்தக வலயங்களில் இளம் பெண்களின் அவலம்

அஞ்சலா

1980களில் ஜே. ஆரின் ஆட்சியில் சுதந்திர வர்த்தக வலயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உலகமயமாதலின் முதல் நடவடிக்கையாக அமைந்தன இந்த வலயங்கள். முதலீடுகள், தொழில்நுட்பங்கள் வரும் என்றும் அதன் மூலம் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்றும் ஆசை வார்த்தைகள் ஊட்டப்பட்டன. இந்த சுதந்திர வர்த்தக வலயங்களில் அந்நியக் கம்பனிகள் வந்து அமர்ந்து கொண்டன.

இவற்றில் வேலை செய்ய இளம் பெண்கள் கூடுதலாக உள்வாங்கப்பட்டனர். குறைந்த சம்பளத்தில் கூடிய வேலை வாங்கும் முறை பலவழிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கு தொழிற் சங்கம் அமைக்கும் சட்டரீதியான உரிமை மறுக்கப்பட்டது. இக் கம்பனிகளில் வேலை செய்வதற்கு கொழும்புக்கு வெளியே தூரக் கிராமங்களில் இருந்து இளம் பெண்கள் வர ஆரம்பித்தனர். இவர்கள் கிராமிய ஏழை விவசாயிகளின் ஏனைய சிறு தொழில் செய்வோரின் பிள்ளைகள் ஆவர். குறைந்த வருமானத்திலாவது வேலை செய்து கொள்ளலாம் தமது குடும்பத் துன்பங்களைக் குறைக்கலாம் என்ற நம்பிக்கையிலேயே இவ் இளம் பெண்கள் வேலை பெற முன் வந்தனர்.

அத்துடன் நகரங்களில் வேலை பெற்றுக் கொள்ளும் கவர்ச்சிகளும் இவர்களை வலை வீசி இழுத்தன. ஆனால் இந்த இளம் பெண்களின் எதிர்பார்ப்புகள் நம்பிக்கைகள் யாவும் சில மாதங்களில் சிதற ஆரம்பித்தன. தொழிற்சாலைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் விபரிக்க முடியாத துன்பங்களையும் கெடுபிடிகளையும் அனுபவிக்கும் சூழலுக்குள் தள்ளப்பட்டனர். வேலையை விட்டுச் செல்லமுடியாமலும் தம்மைச் சூழ்ந்துள்ள அவலங்களுக்கு முகம் கொடுக்க முடியாமலும் சிரழிந்த வாழ்வுக்குள் அல்லற்பட்டே வருகின்றனர்.

இவ் இளம் பெண்களை தொழிற்சாலைக்கு வெளியே பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கும் போக்கு பல வழிகளிலும் தொடருகின்றன. கடன் கொடுக்கும் கடைக்காரர்கள் தொடக்கம் பணம் மாறிக் கொடுக்கும் பரோபகாரிகள் போல் நடிப்பவர்கள் வரை இவ் இளம் பெண்களை ஏமாற்றி பாலியல் வல்லுறவுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்கி வருகின்றனர். வேறும் சில தரகர்கள் கட்டுநாயக்கா சீதுவை, பியகம போன்ற சுதந்திர வர்த்தக வலயப் பெண்களை ஆசை வார்த்தை கூறிக் கொழும்பு நகருக்கு அழைத்து வரும் தரகர்களாகி விபச்சாரத்திற்குள் தள்ளி விடுகின்றனர்.

வேறு சிலர் இவ் இளம் பெண்களை வெளி நாடுகளுக்கு குறைந்த செலவில் வேலைக்கு அனுப்புவதாகக் கூறி அவர்களிடம் உள்ள சிறு சேமிப்புப் பணத்தையும் அல்லது கடன் பட்டவற்றையும் அபகரித்து தலைமறைவாகி விடுகின்றனர். சில கயவர்கள் இவர்களைத் திருமணம் செய்வதாகக் கூறி



ஏமாற்றி தமது இச்சைகளைத் தீர்த்த பின் கைவிட்டு மறைந்துள்ளனர்

மேலும் இவ் இளம் பெண்கள் தங்குவதற்கு விடுதிகள் ஏற்படுத்திக் கொடுப்போர் செய்யும் கொடுமை சொல்லும் தரமன்று. சீதுவையில் மட்டும் இவ்வாறான 73 விடுதிகள் உள்ளன. '8x8' நீள அகலம் கொண்ட அறைகளில் 5 பெண்கள் தங்க வேண்டும். சமைப்பதாயினும் அதற்குள்ளேயாகும். இரண்டு மாடி கொண்ட மற்றொரு விடுதியில் நூறு பெண்களும் 50 ஆண்களும் தங்குகின்றனர். அங்கு ஒரே ஒரு சமயல் அறையும் 18 குளியல் அறைகளுமே உள்ளன. மற்றொரு இடத்தில் 50 பெண்களுக்கு நான்கு குளியல் அறைகள் மட்டுமே உண்டு.

இவ்வாறு சுகாதார அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தான் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் நிலை நீடிக்கிறது. சில தொழிற்சாலைகளில் பன்னிரண்டு மணி நேர வேலை செய்தால் மட்டுமே இலவச உணவும் தேனீரும் வழங்கப்படுகிறது. அத்துடன் வேலையை மணித்தியாலய அடிப்படையில் அன்றி "கோட்டா" முறையில் பகிர்ந்து கொடுத்து சம்பளம் கூடக் கிடைக்கும் என்ற நப்பாசை ஊட்டப்பட்டு ஏமாற்றி வேலை வாங்கப்படுகிறது.

உலகமயமாதலின் கீழ் கிராமங்களும் விவசாயமும் பாழடிக்கப்பட்டு வருகிறது. அதேவேளை சுதந்திர வர்த்தக வலயங்களில் வேலை வாய்ப்பு எனக் கூறி பல்தேசியக் கம்பனிகளின் மோசமான உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதில் முக்கியமாகப் பெண்களின் உழைப்பு சுறையாடப்படுவதுடன் அவர்கள் பாலியல் ரீதியிலான பல் வகைச் சீரழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

உலகமயமாதல் பற்றி ஆகா ஓகோ எனப் புழுகும் சில பேர்வழிகள் சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிலாளர்கள் குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் படும் அவலங்கள் பற்றி என்ன கூறுவார்கள். பெண்ணியம் பேசும் என். ஜீ. ஓ சீமாட்டிகள் வர்க்கம் என்பது இப்போது இல்லை, சுரண்டல் இல்லை, ஆண் ஆதிக்கம் மட்டுமே உண்டு கூறி வருகிறார்கள். அவர்கள் ஒரு முறை இந்த வர்த்தக வலயங்களுக்குச் சென்றால் வர்க்கத்தையும் சுரண்டலையும் ஆணாதிக்கத்தையும் ஒன்று சேரக் காணமுடியும். அவர்கள் அப்படிச் செல்லமாட்டார்கள் ஏனெனில் அவர்களது என். ஜீ. ஓக்களுக்கு பணக்கட்டுகள் அனுப்புவோர் இந்த சுதந்திர வர்த்தக வலயங்களின் கம்பனிகளின் சொந்தக்காரர்களான அந்நிய முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளேயாவர். எனவே தொழிலாளர்கள் ஆண்களாயினும் பெண்களாயினும் வர்க்க சுரண்டலையும் ஆணாதிக்க பாலியல் வக்கிரங்களையும் வர்க்க அடிப்படையில் அணி திரண்டு போராடுவதன் மூலமே முறியடிக்க முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 14

பேராசிரியர் சி.சிவசேகரம்

## தெய்வங்களுடன் உறவாடுதல்

நாமறியும் பெருங் கடவுட் கொள்கைகள் வரலாற்றுப் போக்கில் விருத்தியானவை தாம். நெடுங்காலமாகவே தனி ஒரு கடவுளை நம்பிய சமூகங்கள் இருந்துள்ளன. ஆனால் எல்லா மனிதருக்குமான ஒரு கடவுள் என்ற நிலைப்பாடு நீண்ட காலத்தின் பின்னரே வந்தடையப் பட்டது. அதே போக்கிற் கடவுள் இல்லாத மதங்களும் ஏற்பட்டன. கடவுள் பற்றிய கொள்கை எதுவும் இயல்பாகவோ எவரதும் ஞானப் பார்வை மூலமோ வந்ததல்ல. நாமறிந்த எல்லாக் கடவுளருக் கும் வந்த கதையுண்டு. அக் கடவுளரை முந்திய கடவுளர்க் கும் அவ்வாறே கதைகள் உண்டு.

கடவுட் கொள்கைகள் சில விடயங்கள் பற்றிய வசதியான விளங்கட்கு உதவுகின்றன. தனி மனித நம்பிக்கைகளாக உள்ளவில் எந்தக் கடவுட் கொள்கையாலும் பிறர்க்குக் கேடில்லை. எனினுங் கடவுளும் வர்க்க சமூகமும் என்று வரும் போது கடவுளுக்குக் கட்சி பேதம் கற்பிக்கப்பட்டுவிடுகிறது. கடவுள் ஒரு தரப்பினருக்குக் கூடிய பரிவுடனும் இன்னொரு தரப்பினருக்குக் குறைந்த பரிவுடனோ வேண்டாதளவு கடுமையுடனோ நடந்து கொள்ளுகிறார். இது தனியொரு கடவுளுக்குள்ள சிக்கல். ஒரு பகுதியினர் நன்றி கூறிப் போற்ற இன்னொரு பகுதியினர் மன்றாடுகிற அவலத்தின் நடுவே மதகுருமார் கடவுளின் சார்பாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிச் சமாளிக்கிறார்கள்.

இந்து சமூகங்கள் எனப்படும் சாதியச் சமூகங்களில் ஒரு கட வுட் கொள்கையும் பல கடவுட் கொள்கைகளும் சமாந்தரமாக உள்ளன. அந்த ஒரு கடவுள் கூடப் பலவாறாக வரையறுக்கப்படுவதும் அதே கடவுளின் அம்சங்களாகப் பல வேறு கடவுளரும் இடத்துக்கிடம் ஒவ்வொரு விதமாக அடையாளங்காட்ட ப்படுவதும் இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும் பகுதியில் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளவை. பார்ப்பன வர்ணா சிரமத்தைக் கைவிடாமல் நாட்டார் தெய் வங்களை உள்வாங்குவது இந்து சமயம் என்ற கட்டமைப்பை விஸ்தரிக்க முற்பட்டவர்கட்கு இயலுமாயிருந்தாலும், சாதியம் சமூகத்தைத் தொடர்ந்தும் பிளவுபடுத்திய நிலைமைகளின் கீழ்க் கடவுளர்களும் தமக்குரிய சாதிய அடையாளங்கட்குட் சிறைப்பட்டே இருந்தனர். ஒவ்வொரு சமூகப்பிரிவும் தனக்குரிய கடவுளருடன் உறவாடுகிற முறையும் மற்றச் சமூகங்களது நடைமுறையினின்று வேறுபட்டே அமைந்தது. சமூகப் பிரிவுகளிடையிலான ஊடாட்டங்களால் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதும் சில அடிப்படையான பண்புகள் தொடர்ந்தும் நிலைத்து வந்தன்ளன.

கல்வி, தொழில், லாபம் தருகிற துறைகளில் இறங்கிப் பொருள் ஈட்டுவது போன்று சமூகத்தில் உயர்நிலை எய்துகிற ஒருவர் முன் இரண்டு தெரிவுகள் உள்ளன. தனது சாதி அடையாளத்தை மறைப்பதோ மாற்றிக் கொள்வதோ தொலைப்பதோ ஒன்று. தனது சமூகத்தின் தொடர்பைப் பேணும் நோக்கில் அந்த அடையாளத்தி னூட் தொடர்ந்தும் இருப்பது இன்னொன்று. ஒரு குறிப்பிட்ட சமூகமோ அதன் கணிசமான ஒரு பிரிவோ சமுதாயத்தில் ஏற்படுகிற மாற்றங்களின் விளைவாக எழுச்சி பெற்று மேநிலையாக்கம் பெறுவது. பின்னைய மேநிலையாக்கம் மனிதருக்கும் கடவுளுக்குமிடையில் உள்ள உறவில் ஒரு சிக்கலை ஏற்படுத்துகிறது. மேநிலையாக்கம் பெற்ற சாதிப்பிரிவினரைச் சரிசமமாக ஏற்க இயலாது உயர்சாதியினது சாதிய உணர்வு தடுத்தாலும் அவர்களை வெளி வெளியாகவே தாழ்ந்தோர் என்று புறந்தள்ள இயலாதளவுக்குப் பல வேறு சமூககாரணங்கள் தடையாக எழுந்து நிற்கின்றன. வட இலங்கையிற் சாதியத்திற்கெதிரான போராட்டங்களின் விளை வாக இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கிறிஸ்துவத்துக்கு மதம் மாறி மேநிலையாக்கம் நிகழ்ந்தது. தென்னிலங்கையில் தொழிலும் கல்வியும் சில சாதியினது மேநிலை யாக்கத்திற்கு உத வியது. எனினும் இன்று வரை உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியின் சமூக நடைமுறைகளை ஏற்புடையனவாகக் கொள்ள ஆயத்தமாக இல்லை. குறிப்பாகக் கட வுளரையும் வழிபாட்டு முறைகளையும் பொறுத்த வரை இந்தப் பாகுபாடு வலுவானது.

ஒரு சமூகப்பிரிவாக மேநிலையாக்கம் பெறுகிற தாழ்த்தப்பட்ட சமூகம் இங்கு ஒரு சிக்கலை எதிர் நோக்குகிறது. தங்களுடைய தொழிலின் இழிவிலிருந்து விடுதலை பெற முடிந்தது. வறுமைப்பட்ட நிலையிலிருந்து விடுதலை பெற முடிந்தது. சாதிய அடக்குமுறையிலிருந்து விடுதலை பெற முடிந்தது. ஆனாலும் சாதி என்ற அடையாளத்திலிருந்து விடுதலை பெற முடியாமலுள்ளது.

ஈ.வெ.ரா அவர்கள் சுட்டிக் காட்டியது போல, பெருமையுடன் இது தான் என் சாதி என்று ஒரு தாழ்த்தப்பட்டவர் சொல்ல இயலுமான போது தான் சாதி ஏற்றத் தாழ்வு ஒழியும். இது வரையிலான போராட்டங்கள் ஒடுக்குமுறையை முறியடித் தாலும் ஏற்றத்தாழ்வு பற்றிய சிந்தனைகளை இன்னும் அழிக் கவில்லை. அது மனித சமத்துவத்துக்கான ஒரு நீண்டகாலச் சமூகப் போராட்டத்தின் மூலமே நடக்கக் கூடியது. அதுவரை சாதியால் தாழ்த்தப்பட்ட நிலையைத் தவிர்க்க வேண்டுமா யின் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் தமது சாதி அடையா ளத்தை மழுப்ப அல்லது மறைக்க வேண்டி நேருகிறது.

இந்துத்துவத்தின் சாதியம் மனிதருடன் நின்று விடுவ தில்லை. தெய்வங்களையும் தாக்குகிறது. தாழ்த்தப்பட்டோரின் தெய்வங்கள் சிறு தெய்வங்கள் என்றும் துர்த்தேவ தைகள் என்றும் விலக்கி வைக்கப்படுகின்றன. சில தெய்வங்கள் சாதிய மேநிலையாக்கம் பெறுகின்றன. அப் போது அவற்றின் அடையாளங்களும் பேர்களுங் கூடச் சிறிது மாற்றம் பெறலாம். சில தெய்வங்கள் பற்றிப் பயம் உள்ள தனால் அவை கூடிய மரியாதையுடன் கவனிக்கப் படலாம்.

சாதியமைப்பின் கீழ் மேநிலையாக்கம் பெற்றவர்களில் சமூக நோக்கு இல்லாதவர்களும் சமூக நீதிக்கான போராட்டக் குணம் இல்லாதவர்களும் தமது தனிப்பட்ட மேநிலை யாக்கத்தை விட வேறு எதையும் பற்றிக் கவலைப்படுவதில்லை. உயர் சாதியினருடன் சமத்துவத்தை நாடுகின்ற நோக்கில் தம்மை இழிவாகக் காட்டக்கூடியது என்று அஞ் சும் எதையும் அவர்கள் கைவிட ஆயத்தமாகவே இருப்பர்.

அதன் விளைவாகத் தாங்கள் வழிபடுகிற தெய்வங்களைக் கைவிட்டு உயர்சாதியினரின் தெய்வங்களை நாடுகிறார்கள். தங்கள் கோயில்களின் தன்மையை மாற்றிப் பிராமணச் சடங்குகளை அறிமுகப்படுத்துகிறார்கள். அவர்களுடன் நெருங்கி உறவாடிய தெய்வங்களின் இடம் அவர்களிடமி ருந்து பிரிக்கப்பட்ட ஒரு தெய்வத்திடம் போய்ச் சேருகிறது. அவர்கள் தமது தெய்வங்களுடன் பேசிய சொந்த மொழியின் இடம் அவர்களுக்கு விளங்காத ஒரு மொழியிடம் பறிபோ கிறது. அவர் களுடைய அன்றாட வாழ்வுக்கு நெருக்கமாயிரு ந்த சடங்குகள் அவர்களுக்கு எது விதமான உறவோ பொரு ளோ அற்ற சடங் குகளிடம் இழக்கப்படுகின்றன. இது விடுத லையா, எனக்கு இது ஒரு புதிய விலங்கிடலாகவே தெரி கிறது.

சிறு தெய்வ வழிபாடுகளில் உள்ள நல்ல பண்புகளை அடையாளங்காண்பதும் அவற்றின் அடிப்படையிலிருந்து அதிகம் விலகாத எளிய, பண்பான வழிபாட்டு முறைகளை நாம் விருத்தி செய்ய இயலாதா? குறிப்பாகத் தாய்மொழியில் வழிபாடும் பூசைகளும் பிற சடங்குகளும் செய்வித்தல், இறை நம்பிக்கையுள்ளவரும் நல்ல சமூக நடத்தையுள்ளவருமான எவரையுங் கொண்டு கோவிற் சடங்கு பூசைகளைச் செய்வித்தல் போன்றவை சாதிய அடக்குமுறைக்குக் காரணமாயிந்த சிந்தனைகளை மறுப்பன வாகவும் சாதி வேறுபாடற்ற ஒரு புதிய இந்து சமயத்துக்கு வழிகா ட்டுகிற வையாகவும் அமையலாம்.

**எல்லாக் கடவுளருக்கும் வந்த கதையுண்டு அதற்கு முந்திய கடவுளருக்கும் கதைகள் உண்டு**

சித்தர்களின் பாடல்கள், சாதிய மறுப்பாளர்களான ஞானியர்களது சிந்தனைகள் என்பன வழிபாட்டின் ஒரு பகுதியாக லாம். சடங்குகள் எளிமைப்படுத்தப்பட்ட பிராமணப் பூசகர் அற்ற கன்னட வீர சைவ மரபிலிருந்தும் நல்ல விடயங்களைக் கற்கலாம். சாதித் தாழ் நிலையிலிருந்து விடுதலை பெற்று எழு கிற சமூகம் சாதியத்தின் சுவடே இல்லாத ஒரு கோவில் வழி பாட்டுமுறையை உருவாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இதை அவர்களின் சிந்தனையின் விடுதலைக்கு விடுக்க ப்பட்ட ஒரு சவாலாகக் கருதவேண்டும்.

---

### மத்திய வங்கியின்

10ம் பக்க தொடர்ச்சி

அதிகரிப்புக்கு இலகுவாகவே உலகச் சந்தையைக் காட்டிக் கொள்கின்றனர். முப்படைகளுக்கு வழங்கப்படும் எரி பொருட் கடன் பல மில்லியன்கள் என்றே கூறப்படுகின்றது. இவற்றுடன் ஊழல் மோசடி மறுபுறம். யாவும் மக்களிடமே அறவிடப்படுகிறது. இவர்களுக்கு கடன் வழங்கும் வங்கிகளும் பெரிய சிக்கலில் உள்ளன. இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் அரசினால் தொடரும் யுத்தமேயாகும். யுத்தத்திற்கு கோடிக் கணக்கில் தினமும் செலவிடப்படுகிறது. யுத்தத்திற்கான செலவை சகல வழிகளாலும் மகிந்த சிந்தனை அரசாங்கம் மக்களின் தலையில் சுமத்தியே வருகிறது.

உலக வங்கியும் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளும் பின் தங்கிய நாடுகளில் மானியம் வழங்கப்படுவதை நிறுத்துமாறு அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்துவருகின்றன. அமெரிக்கா- ஐரோப்பிய யூனியன்- யப்பான் என்பன தத்தம் நாடுகளின் விவசாயிகளுக்கு பாரிய அளவில் மானியம் வழங்குகின்றன. ஒரு பசுமாட்டிற்கு ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில் இந்த நாடுகள் மானியம் வழங்குகின்றன. அமெரிக்கா வருடந்தோறும் தமது விவசாயிகளுக்கு முப்பதாயிரம் கோடி (30,000) டொலர் மானியம் வழங்குகிறது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

நமது மக்களின் நலன் சார்ந்த நேர்மையான அரசாங்கமே ஏகப்பெரும்பான்மையான மக்களின் நலனுக்கான நடவடிக்கைகளை எடுக்கும். ஆனால் அன்னிய ஏகபோக முதலாளிகளின் நலனுக்காக செயற்படும் இந்த அரசாங்கம் தொழிலாளர்களின்-விவசாயிகளின் நலனுக்காக எதனையும் செய்யாது. மக்கள் எழுச்சியில் கிளர்ச்சியில் ஈடுபடாதவரை மாறி மாறி வரும் அரசாங்கங்களின் கீழ் மக்களும் நாடும் அல்லற்பட்டு மேன்மேலும் மோசமான பொருளாதார பிரச்சினைகளுக்கும் வாழ்க்கை நெருக்கடிகளுக்கும் ஆளாக வேண்டியே இருக்கும்.

---

### ஜே.வி.பி யின் அடுத்த

5ம் பக்க தொடர்ச்சி

இனச் சுத்திகரிப்பு எண்ணத்தை தமது தொடர்ச்சியான பிரச்சாரம் மூலமாக பாதுகாப்புத்தரப்பினருக்கு எடுத்து கொடுத்ததில் ஜே.வி.பி தனது பங்களிப்பை மறுத்து விட முடியாது. இது போன்றன தான் ராணுவ ஒடுக்குமுறையினதும் மனித உரிமை மீறல்களினதும் எதிர்விளைவுகள் என்பதை இப்போதாவது ஜே. வி. பி உணர்ந்து கொள்ளுமா? அல்லது உள்ளூர திருப்தி கொள்கிறதா?

ஜே.வி.பி ஒரு இடதுசாரிக் கட்சி அல்ல. அது இடதுசாரி வேட மணிந்த சிறுமுதலாளித்துவத் தலைமையால் வழிநடத்தப்படும் பேரினவாத பாராளுமன்ற சந்தர்ப்பவாதக் கட்சியேயாகும். பழைய இடதுசாரிகள் மீது நம்பிக்கையிழந்த தென்னிலங்கையின் இடதுசாரி ஆதரவு மக்கள் மத்தியிலிருந்து ஜே.வி.பி. க்கு ஒரு தளம்கிடைத்தது உண்மையே. குறிப்பாக இளம் தலைமுறையினர் மிகுந்த நம்பிக்கையோடு ஜே.வி.பிக்கு பின்னால் அணிதிரண்டனர். ஆனால் அந்த நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புக ளும் இன்று குலைந்து போயுள்ளன. ஜே.வி.பி மீதான அதிரு ப்தியும் கண்டனங்களும் வலுவடைந்து வருகின்றன. அதன் அணிகளில் கருத்து வேறுபாடுகள் வெளியேறுதல் ஒதுங்கிக் கொள்ளல் என இடம் பெற்று வருகின்றன என்பது உண்மையாகும்.

ஆதலால் ஐ.தே. கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றுக்கு மாற்று அணி அல்லது மூன்றாவது சக்தி ஜே.வி.பி என்ற தோற்றம் அரசியல் ரீதியில் கலைந்து வருகின்றது. அதன் பாராளுமன்ற சுகபோக வாழ்வு வட்டத்திலிருந்து வெளியேற முடியாது என்பதை அது நிரூபித்துள்ளது. எனவே "பூசாரியாய் இருக்கும் வரை வெறுமனே மணியை கிலுக்கிக் கொண்டிருக்க வேண்டியது தான்" என்பதற்கிணங்க அவ்வப்போது குரல் வைப்பதற்கு அப்பால் ஜே.வி.பியிடம் மக்கள் உருப்படியாக எதனையும் எதிர்பார்க்க இயலாது.

இருப்பினும் விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்பது போன்று அரசாங்கத்திற்கு எதிராகப் போராட வருமாறு மக்களுக்கும் அரசியல் சக்திகளுக்கும் ஜே.வி.பி அழைப்பு விடுத்துள்ளது. நாட்டை மீட்கவும் மக்களைப் பாதுகாக்கவும் இன்றைய ஆட் சியால் முடியாது எனப் பிரகடனம் செய்துள்ளது. ஐ.தே. கட்சி தவிர்ந்த அரசியல் சக்திகளுக்கே அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இது ஜே.வி.பி நாடகத்தின் மற்றோரு கட்டம் என்றே கொள்ள வேண்டும். நேர்மையான அரசியல் சக்திகள் ஜே.வி.பி யின் சுயரூபத்தை புரிந்து கொள்ளவே செய்யும்.

எனவே மூன்றாவது அரசியல் சக்தி எழுவதற்கான ஒரு தளம் இன்று வெற்றிடமாக இருந்து வருகிறது. அதனை இட்டு நிரப்பக் கூடிய நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் வரலாற்றின் தேவையாகக் காலம் கடந்தாயினும் எழுந்தே தீரும். அதற்கான முன் முயற்சிகள் செய்ய ப்படுவது அவசியமானதாகும்.

---

### பலஸ்தீனம்

13 ம் பக்க தொடர்ச்சி

ண்டுகள் வரை கொடுத்து பலப்படுத்தியும் வைத்துள்ளது. இன்று பலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள அவல நிலை சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒவ்வொரு நாட்டின் நேர்மையான விடுதலை அமைப்புகளுக்கும் ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களுக்கும் ஒரு சமகால அனுபவமும் படிப்பதற்குரிய பல விடயங்களைத் தருவதாகவும் உள்ளது.

இத்தகைய கேடு கெட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் சியோனிச இஸ்ரேலையும் நம்பி அல்லது முன்னுதாரணமாகக் கொண்டு அல்லது உதவிகளைப் பெற்று சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வெற்றி கொள்ளலாம் என்பது நடக்கக் கூடிய காரியமல்ல. அது மட்டுமன்றி அத்தகைய அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் எமது மக்களின் இரத்தத்திலும் கொலைகளிலும் அகதி வாழ்விலும் தமது தமது தேவைகள் நலன்களை ஈட்டிக் கொள்ள முனைந்து கொள்வர் என்பதையே பாலஸ்தீனத்தில் தோன்றியுள்ள இன்றைய இன்றைய நிலை நமக்கு உணர் த்துகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கருணாநிதிக்கு அன்று தமிழ் மொழி இன்று கனிமொழி

**சண்முகம்**

தமிழகத்தின் முதலமைச்சர் முத்துவேலர் கருணாநிதி தன்னுடைய பெற்றோர் தனக்கு கருணாநிதி என்று பெயர் வைத்தன் அர்த்தம் கருணையும் நிதியும் சேர்ந்து இருக்க வேண்டும் என்பதாக இருக்கலாம். ஆனால் என்னிடம் கருணை மட்டுமே உள்ளது நிதி இல்லை என்று கூறி இருக்கிறார். ஆனால் உண்மை என்னவெனில் அவரிடம் கருணை ஏதும் கிடையாது நிதி தாரளமாக இருக்கிறது. தேர்தல் வேட்பு மனுவில் காட்டிய கணக்கில் தனதும் மனைவியினதும் சொத்தின் பெறுமதியே 26 கோடி எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்கும் அப்பால் பல கோடிகள் இருப்பது பலருக்குத் தெரியாது.

கருணாநிதி தனது 14வது வயதில் பள்ளிக்கூடத்தை விட்டு ஓடி வந்து பெரியாரின் திராவிட இயக்கத்தில் இணைந்தவர். அதன் வளர்ச்சியோடு சேர்ந்து தன்னை வளர்த்துக் கொண்டவர். பெரியாரை விட்டு விலகி தி. மு. க வை அரசியல் கட்சியாக மாற்றியதிலும் அதிகாரத்தை நோக்கிச் சென்றதிலும் கருணாநிதியின் உள்நோக்கங்களுக்கும் குள்ள நரித்தனங்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. தி.மு.க வில் தன்னுடைய தலைமையை உறுதிப்படுத்தி முழுக் கட்டுப் பாட்டையும் தானே கொண்டிருப்பதில் போட்டியாளர்களை அவ்வப்போது முறியடித்து வந்தவர். எம்.ஜி ஆரை மட்டும் கருணாநிதியால் கட்டுப்படுத்தவோ வெற்றி கொள்ளவோ முடியவில்லை.

தமிழக மக்களை தனது பேச்சுத் திறனாலும் சினிமா வசனங்களாலும் கவர்ந்தவர்களில் கருணாநிதி முதன்மையானவர். அதேவேளை காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப அரசியல் சந்தர்ப்பவாதம் புரிந்து குள்ள நரித்தனத்துடன் அதிகாரத்திலும் இருந்து வருபவர். திராவிட இயக்கக் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு பா.ஜ.க. வுடனும் காங்கிரசுடனும் அவ்வப்போது அதிகாரத்தில் பங்கு கொண்டு தனது நிலையைத் தமிழகத்தில் நிலை பெறச் செய்தவர். அவருக்கு இப்போது வயது 84 ஆகியுள்ளது. இருப்பினும் தனக்குப் பின்பு தனது குடும்ப வாரிசுகள் தமிழகத்தின் ஆட்சி அதிகார பீடத்தில் நிலைத்து நீடிக்க வேண்டும் என்பதற்காகச் சிந்தித்து செயலாற்றி வருகிறார்.

கருணாநிதிக்கு ஒரு மனைவி ஒரு துணைவி. இருவருக்குமபிறந்த பிள்ளைகளில் எல்லோரையும் கோடீஸ்வரராக்கிவிட்டார். மதுரை வீரன் மு.க. அழகிரி அங்கு முடிசூடாமன்னன். சென்னையை மையமாக வைத்து மற்றொரு மகன் மு.க.



ஸ்டாலினுக்கு தமிழகத்தின் தலைமைப் பதவியைக் கொடுக்க ஏகப்பட்ட முன் முயற்சிகள். பிள்ளைகளிடை யே அதிகாரத்திலும் சொத்து சுகங்களிலும் பிணக்கு ஏற்படக் கூடாது என்பதற்கான இறுதிக் கால வேலைகளில் தள்ளாத வயதிலும் டெல்கிக்கும் சென்னைக்கும் விமானம் ஏறி இறங்கி வருகிறார். டெல்கி செல்வதும் சோனியாவைச் சந்திப்பதும் பிர தமருக்கு பொன் னாடை போர்த்து வதும் தமிழகத்தி ற்கோ தமிழ் மக்களுக்காகவோ அல்ல. மகள் கனிமொழிக்கு அமைச்சர் பதவி வேண்டித் தான் என்று பேசப்படுகிறது. தனது குடும்ப வாரிசுகளின் அதிகாரக் கதிரைகளுக்கு விரோதமாக வரக் கூடிய சகலரையும் ஓரங்கட்டுவதில் மிக மும்மரமாகி உள்ளார். கருணாநிதி அதன்படியே அண்மையில் தயாநிதிமாறன் மத்திய அமைச்சர் பதவியில் இருந்து துரத்தப்பட்டார். தூக்கி வீசப் பட்டவர் பேரனாயினும் தனது பிள்கைளுக்கு மாறாக வர முடியாது என்பதை "கலைஞர்" காட்டிவிட்டார்.


அதன் தொடர்ச்சியாக தனது மகள் கனிமொழியை மத்திக்கு கொண்டு சென்றும் விட்டுள்ளார். அடுத்து அவரை மத்திய அமைச்சராக்கவும் உள்ளார். தமிழ்மொழி வளர்ந்ததோ இல்லையோ கனிமொழி சகல சௌபாக்கியங்களுடனும் வளர்க்கப்பட்டு விட்டார். கண்ணகிக்கு சிலை எடுத்து பெண் குலத்திற்கே பெருமை சேர்த்த நான் கனிமொழிக்கு அந்தஸ்து அளித்து ஏன் புகழ் சேர்க்கக் கூடாது என அடுக்கு வசனம் பேசுவார் கருணாநிதி உடன் பிறப்புகளுக்கு உருக்கமான கடிதமும் வரைந்து கொள்வார். அவரது பக்தர்களும் கண் மூடித் தலையாட்டுவர். ஆனால் தமிழகத்து பெண்களின் நிலைதான் பரிதாபம்.

தமிழக மக்கள் ஈ.வேராவின் சீர்திருத்தக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு திராவிட அரசியலால் மாற்றங்கள் வரும் என நம்பியவர்கள். ஆனால் அண்ணாத்துரை முதல் கருணாநிதி வரையான தி.மு.க தலைவர்களாலும் எம்.ஜி.ஆர் முதல் ஜெயலலிதா வரையான அ.இ.அ.தி.மு. கவினாலும் ஏமாற்றப்பட்டவர்கள். பகுத்தறிவுக்கும் அதன் நடைமுறைகளுக்கும் அப்பால் சினிமா மோகவும் மத மூட நம்பிக்கைகளும் தான் திராவிட இயக்க அரசியலால் வளர்ந்ததே தவிர மக்களது அடிப்படை வாழ்க்கை நிலைமை பெரிதாக மாற்றமடையவில்லை. அதே வேளை திராவிட இயக்கத் தலைவர்கள் தம்மை வளப்படுத்தி லட்சாதிபதிகளாக கோடீஸ்வரர்களாக மாற்றிக் கொண்டு விட்டனர். இவை திராவிடத் தேசியம் பின் தமிழ்த் தேசியம் பேசி மக்களை மயக்கி ஏமாற்றியதன் மூலமே சாத்தியமாகியது.

தமிழக மக்கள் சினிமா, மதம், வாக்குப் பெட்டி அரசியல் கடந்து புரட்சிகர வெகுஜன அரசியல் பாதையில் அணிதிரள வேண்டிய கால கட்டம் வேகமாக வளர்ந்து வருகின்றது. கருணாநிதியின் தலைமையில் அமெரிக்காவின் உலகமயமாதலுக்கு தமிழகத்தை தாரைவார்த்து மறுகாலனியாதிக் இடம் பெற தமிழக உழைக்கும் மக்கள் இடமளிக்காத அரசியல் போராட்டங்கள் இன்று அவசியமாகி உள்ளன. இவ்வாறான போராட்டங்கள் எழும் போது கருணாநிதியின் வாரிசுகள் மக்கள் பக்கம் நிற்க மாட்டார்கள். அப்பன் வழியில் நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் பக்கம் நின்று அவர்களுக்கு சேவை செய்வர் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

# யப்பானிய விசேட தூதர் அகாசி வருகிறார் போகிறார் உண்மை என்ன?

**அருணன்**



இலங்கைக்கான யப்பானிய விசேச தூதுவர் அகாஷி அண்மையில் நான்கு நாள் அரசு முறைப்பயணம் மேற்கொண்டு இலங்கை வந்து போனார். அவரது மேற்படி பயணம் அண்மைய வருடங்களில் 14 வது தடவையானதாகும். ஒவ்வொரு முறைப் பயணத்தைப் பற்றியும் ஊடகங்கள் பெரும் குரலில் கூவிக் கொள்வது வழக்கம். யப்பானிய விஷேச தூதர் வருகிறார். ஜனாதிபதியைச் சந்திக்கிறார். வன்னிக்குப் போகிறார். யாழ்ப்பாணமும் செல்ல இருக்கிறார். ஏதோ திட்டத்துடன் வருகிறார் எனத் தலைப்புச் செய்திகள் முழங்கும். குறிப்பிட்டபடி வந்ததும் சந்திப்புக்கள் இடம் பெற்றதும் உண்மைதான். ஆனால் பேச்சுவார்த்தையும் அரசியல் தீர்வும் ஒரு அங்குலம் தானும் முன்னே செல்லவில்லை. காரணம் கண்டு கொள்வது அதிக சிரமம் அல்ல.

யப்பானிய விசேட தூதுவர் வருவது போவது உண்மை தான். ஆனால் அவரது உண்மையான நோக்கும் போக்கும் இலங்கையில் இனப்பிரச்சினை பற்றிய அக்கறை அல்ல. யப்பானிய பொருளதார நலன்கள் இங்கு பாதிக்கப்படாது இருப்பதை உறுதி செய்து கொள்வதுடன் மேலும் விரிவுபடுத்தி பலப்படுத்துவதேயாகும். யப்பான் ஒரு பெரும் பொருளாதார வல்லரசாகத் திகழ்ந்து வருகின்றது. அத்துடன் அமெரிக்காவின் நெருங்கிய முதலாளித்துவ ஏகாதிபத்தியக் கூட்டாளியாகவும் இருந்து வருகின்றது. உலகின் இன்றைய பல்தேசியக் கம்பனிகளில் யப்பானிய முதலீடுகளும் பங்குகளும் பாரியனவாகும்.

இலங்கையைப் பொறுத்த வரை யப்பானிய முதலீடுகள் கணிசமானவையாக உள்ளன. அண்மைய உதாராணம் மேல் கொத்மலைத் திட்டத்தில் யப்பானிய முதலீடு செய்யப்பட்டுள்ளமையாகும். அத்துடன் இலங்கை யப்பானின் முக்கிய சந்தையாக இருந்தும் வருகின்றது. மறுசீரமைக்கப்பட்ட வாகனங்கள் விற்பனை செய்யப்படுவது இங்குதான் அதிகம். அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் விலை போவதும் இங்குதான் இடம் பெறுகின்றன. அத்துடன் எலத்திரனியல் பொருட்கள் யாவும் "ஒறிஜினல் யப்பான்" என்று பரப்பப்படும் வர்த்தக மாயைகளுடன் வியாபார வர்த்தகம் இங்கு ஓகோ என இடம் பெற்று வருகின்றது. தொலைக்காட்சி, வானொலி, படப்பிடிப்பு கருவிகள், ஒலிபரப்புக் சாதனங்கள் யாவற்றிலும் யப்பானியப் பொருட்களே தரமானவை என்ற விளம்பரங்களுடன் தாராளமாக விற்பனை செய்யப்படுகிறது. இதனால் நாளாந்தம் நமது நாட்டுப் பணம் கோடிகோடியாக யப்பான் சென்றடைகிறது.

அவ்வாறு சுளை சுளையாக வர்த்தகக் கொள்கை மூலம் உறுஞ்சப்படும் பணத்தில் ஒரு பகுதி ஜப்பானின் பெருந்தன்மை மிக்க உதவியாகவும் கடனாகவும் எமக்கு வழங்கப்படுகின்றது. அவற்றின் ஒரு பகுதிக்கு யப்பானிய யந்திரங்கள் உபகரணங்கள் வாங்கப்பட்டே ஆக வேண்டும் என்பது முதலாளித்துவ நிபந்தனை. ஜே.ஆர். ஆட்சிக் காலத்தில் இல ங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு நிலையத்தை இலவசமாகக் கொடுத்து தென்னாசியாவிலேயே முதன்முதலாக வர்ணத் தொலைக்காட்சியை அறிமுகம் செய்தது யப்பான். இதற்காக ஜே. ஆர் பெரும் நன்றியை அன்று தெரிவித்தார். ஆனால் இத்தனை வருடங்களில் யப்பானிய தொலைக்காட்சிப் பெட்டிகள் பல லட்சக்கணக்கில் விற்பனை செய்து பெருலாபம் சம்பாதித்துக் கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுக்குரிய உதிரிப் பாகங்கள் விற்பனையாகின்றன. இந்த வியாபாரம் வர்த்தகம் இலங்கையில் அமோகமாக இன்றும் நடைபெறுகின்றன. இதன் மூலம் இலங்கையின் விவசாயம் கைத்தொழில்கள் தேசிய பொருளாதாரமாக வளர்ந்ததா? என எவரும் கேள்வி எழுப்புவதில்லை.

அவ்வாறே தற்போதைய பாராளுமன்றக் கட்டிடத்தையும் யப்பானே கட்டிக் கொடுத்தது. இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பேரவாவினால் அது கட்டிக் கொடுக்கப்படவில்லை. இலங்கையின் உழைக்கும் மக்களையும் தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்குவதற்கும் மக்களை ஏமாற்றும் கள்வர்கள் பதுங்கியிருக்கும் ஒரு வசதியான குகையாக அது இருக்க வேண்டும் என்பதற்காகவே வழங்கப்பட்டது. இத்தகையது தான் யப்பானின் உதவிகள். மேலும் அகாஷி அடிக்கடி இங்கு வருவது இந்திய சீன வர்த்தகம் வியாபாரம் இலங்கையில் அதிகரித்து வருகின்றமையை கண்காணித்துக் கொள்வதற்காகவேயாகும். ஆசியாவில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் எதிர்பார்க்காத அளவுக்கு மேலே சென்று கொண்டிருக்கிறது. இலங்கையுடனான சீனாவின் நட்பு நீண்டகாலமாக நல்ல நிலையில் இருந்தும் உள்ளன. அவ்வாறே இந்தியாவின் வர்த்தகம் இலங்கையில் முன்பை விடப் பல மடங்கு அதிகரித்தும் வருகின்றன. எனவே இம் மும்முனை வர்த்தப் போட்டியில் யப்பான் தனது இலங்கைச் சந்தையை இழக்காதவாறு பார்த்துக் கொள்வது அவசியமாகின்றது.

மேலும் இலங்கையில் சமாதான சூழல் வந்தால் எந்தெந்த துறைகளில் புகுந்து கொள்ளலாம் என யப்பானிடம் திட்டங்கள் உள்ளன. ஏற்கனவே புகையிரத சேவையை தனது கைக்குள் போட்டுக் கொள்ள முயன்றது, வடக்கு கிழக்கின் காட்டு வளங்களையும் கடல் வளங்களையும் தமது கைகளுக்குள் எடுத்துக் கொள்ள யப்பானிய முதலாளிகள் காத்து நிற்கின்றனர். இவர்களின் ஏகப் பிரதிநிதியாகவே அகாஷி வந்து போகிறார் என்ற உண்மை மறைக்கப்பட்டே வருகின்றது. யப்பான் பொருளாதார வல்லரசு மட்டுமன்றி எதிர் காலத்தில் ராணுவ வல்லரசாகவும் மாறப்போகின்றது என்பது இரகசியமல்ல. எனவே தான் சர்வதேச சமூகம் என்ற பெயரில் அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுடன் கைகோர்த்து இலங்கையில் யப்பான் தனது பொருளாதார வர்த்தக வியாபார நலன்களைப் பாதுகாத்து விரிவுபடுத்தி வருகின்றது. இதற்கு ஒரு முகமூடியே சமாதானப் பேச்சிற்கு யப்பான் முன்னிற்கிறது என்ற தோற்றமாகும். அகாஷி அத்தோற்றத்தின் பிரதிநிதியாகும். அதனை உரியவாறு விளங்கிக் கொள்ளாது தமிழ் மக்களது உரிமைகளுக்காக யப் பான் பரிந்து பேசும் என யாரும் எதிர்பார்க்க முடியாது. அகாஷி அண்மைய தனது கடைசிப் பயணத்தில் கூறிய கரு த்துக்கள் கவனத்திற்குரியதாகும். "யப்பான் இலங்கைக் கான எந்த உதவிகளையும் நிறுத்தாது. ஏனெனில் அவை மக்களுக்கு உரிய உதவிகளாகும். கிழக்கில் மீள் குடியேற்றம் மிக நல்ல முறையில் இடம் பெறுகின்றன. அதனை நான் நேரில் சென்று பார்த்துள்ளேன்." இதனைத் தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள மறுத்தால் அது அரசியல் அறிவீனமாக மட்டுமே இருக்க முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பலஸ்தீனத்தின் இன்றைய அவலநிலை
# எமக்கு உணர்த்தும் பாடம் என்ன?

பாலஸ்தீன மக்களை அவர்களது சொந்த தாயக பூமியில் இருந்து விரட்டி அதனை இஸ்ரேலின் நிலங்களாக மாற்றுவதே அமெரிக்க– பிரித்தானிய– இஸ்ரேல் சியோனிசத்தின் அடிப்படைத்திட்டமாகும். கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மத்திய கிழக்கிலே இடம் பெற்று வரும் போராட்டத்தினதும் போரினதும் இரத்தப் பெருக்கினதும் அகதி வாழ்வினதும் மையப் புள்ளி அதுவேயாகும். பலஸ்தீன மக்களது வீரம் செறிந்த போராட்டத்தை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பா லும் அதற்கு உதவி நிற்கும் அமெரிக்க மேற்குலக சக்திகளாலும் முறியடிக்க முடியவி ல்லை.

அறுபதுகளில் மிகப் பெரும் போராட்டத் தலைமை சக்தியாகத் திகழ்ந்த யஸீர் அரபாத் தலைமையிலான ஃபதா இயக்கம் காலப் போக்கில் அமெரிக்க இஸ்ரேலியக் கூட்டுச் சதிக்குப் பலியாகி சமாதானம் என்ற போலித் தமான ஏமாற்று வலைக்குள் வீழ்ந்து விட் டது. பலஸ்தீன அதிகாரசபை என்பதை நிறுவி அதன் ஜனாதிபதி பதவி என்பதையும் உருவாக்கி பொலீஸ் படை வைத்திருப் பதற்கு மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகா ரம் வழங்கப்பட்டது. ஆனால் பலஸ்தீன நாட்டிற்கான எல்லைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. ஜெருசலம் பலஸ்தீனத்தின் தலைநகரம் என்பது ஏற்கப்படவில்லை. லெபனான் சிரியா ஜோர்டானில் அகதிகளாக வாழ்ந்து வரும் லட்சக் கணக்கான பலஸ்தீன மக்கள் மீள வரவழைக்கப்படவில்லை. ஐ.நா சபையில் பலஸ்தீனம் ஒரு பார்வையாளர் அந்தஸ்திலும் உலக நாடுகளில் தனது ராஜதந்திர தொடர்பு காரியாலயங்களை வைத்திரு ந்த போதிலும் பாலஸ்தீன நாடு இறமையும் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் உள்ள ஒரு நாடாக அங்கீகரிக்கப்படவி ல்லை.

அதேவேளை இஸ்ரேல் தொடர்ந்தும் பலஸ்தீனத்தின் நிலங்களை அபகரிப்பதும் யூதக் குடியேற்றங்களை நிறுவி வருவதும் தொடர்ந்து கொண்டே வருகின்றது. பலஸ்தீன மக்களின் போராட்டத்தையும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் தொடர்ந்து மறுத்து குண்டு வீச்சுகளிலும் தாக்குதல்களிலும் ஈடுபட்டே வந்துள்ளது. இச் சியோனிச இஸ்ரேலிய இன அழிப்பிற்கும் ஆக்கிரமிப்பிற்கும் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் கடந்த காலம் முழுவதும் ஆதரவும் அரவணைப்பும் வழங்கியே வந்துள்ளனர்.

இந்தச் சதிக்கும் ஆக்கிரமிப்பிற்கும் அவர்களது நயவஞ்சகம் மிக்க சமாதான நாடகத்திற்கும் பாலஸ்தீன அதிகாரசபை ஏற்கனவே பலியாகிக் கொண்டது. ஜனாதிபதியான அரபாத்தும் அதன் தற்போதைய மகமூட் அப்பாசும் பதவி அதிகாரம் மட்டும் இருந்தால் போதுமானது பலஸ்தீன இலட்சியம் எப்படி ஆனாலும் பரவாயில்லை என்றளவிலேயே இருந்து வந்தனர். ஆனால் ஒவ்வொரு பாலஸ்தீனிய ஆணும் பெண்ணும் சிறுவனும் சிறுமியும் இளைஞனும் யுவதியும் இழந்த தமது மண்ணை மீட்டெடுக்கும் உறுதிப்பாட்டிலிருந்து விலகவில்லை.



அதன் காரணமாகவே 2006 ஜனவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஃபதா இயக்கத்தை நிராகரித்த பலஸ்தீன மக்கள் பெரும்பான்மை பலத்துடன் ஹமாஸ் இயக்கத்தை வெற்றி பெறச் செய்தனர். அரசாங்கத்தை அமைத்த ஹமாஸ் பலஸ்தீன அடிப்படை இலட்சியத்தை உயர்த்தி நின்றதுடன் ஊழலற்ற மக்களுக்கான ஆட்சியை தரவல்லதாகவும் அமைந்தது. அமெரிக்க இஸ்ரேலிய கூட்டுச் சதிக்கு அடிபணிந்து போவதை ஹமாஸ் நிராகரித்தது. இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும் என்பதை மறுத்ததால் ஹமாசை ஓரங்கட்டவும் ஒழித்துவிடவும் அமெரிக்கா முன்னின்றது.

பாலஸ்தீனத்தில் தற்போது மேற்குக்கரைப் பிரதேசம் ஃபதா இயக்கத்திடமும் காஸாப் பகுதி ஹமாஸின் கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றன. ஜனாதிபதி அப்பாஸ் தனது கையாள் ஒருவரை பிரதமராக்கியுள்ளார். இவர்களுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஆதரவு தெரிவித்துள்ளன. அதேவேளை காஸாவின் கட்டுப்பாட்டை மக்களின் ஆதரவோடு வைத்துள்ள ஹமாஸ் இயக்கம் தொடர்ந்தும் இஸ்மாயில் ஹானியாவை பிரதமராகக் கொண்டு நிர்வாகத்தை நடாத்தி வருவதாக அறிவித்துள்ளது.

ஒரே முகமாக இஸ்ரேலிய சியோனிச ஆக்கிரமிப்பை எதிர்த்து சுதந்திர பலஸ்தீனத்திற்காகப் போராடி வெற்றி பெறவேண்டிய பலஸ்தீன மக்களையும் அதன் போராட்ட இயக்கங்களையும் பிளவு படுத்தி சகோதரப் படுகொலைகளையும் ஒருவரை ஒருவர் அழித்தொழிப்பதையும் அமெரிக்கா மிகவும் கச்சிதமாக நடாத்தி வந்துள்ளது. அதேவேளை இஸ்ரேலுக்கு பணம் பொருள் ஆயுதங்கள் தொடக்கம் அணுக்கு

தொடர்ச்சி 11ம் பக்கம்

# ஸ்பெயினின் பாஸ்க் மக்களின் உரிமைப் போரில் முடிவுக்கு வந்த நிரந்தர யுத்த நிறுத்தம்

## ஒரு ஐரோப்பிய அனுபவம்

ஏகலைவா

கடந்த வருடம் மார்ச் மாதம் 14ம் திகதி ஸ்பெயினின் பாஸ்க் (Basque) இன மக்களின் உரிமைக்காகவும் தனி நாட்டுக்காகவும் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போராடி வந்த ஈட்டா (ETA) அமைப்பு நிரந்தர யுத்த நிறுத்தத்தை அறிவித்தோடு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து பாஸ்க் மக்களின் உரிமைக்காக போராடப்போவதாக அறிவித்தது. கடந்த யூன் 5ம் திகதி ஈட்டா அமைப்பு தாங்கள் அறிவித்திருக்கின்ற நிரந்தர யுத்த நிறுத்தத்தில் இருந்து விலகிக் கொள்வதாகவும் பாஸ்க் மக்களின் உரிமைகளுக்காகவும் தனிநாட்டுக்காகவும் எல்லா வழிகளிலும் போராடப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இதன் மூலம் 15 மாதங்களாக ஈட்டாவால் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. ஈட்டா அமைப்பால் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்ட செய்திக்குறிப்பின் சாரம் வருமாறு:

“தேசிய விடுதலைக்கான பாஸ்க் சோசலிச புரட்சிகர அமைப்பான ஈட்டா, பாஸ்க் மக்களுக்கு சொல்லும் செய்தி. எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. ஈட்டா அமைப்பு சகல வழிகளிலும் பாஸ்க் தனிநாட்டுக்காக போராடியே தீரவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அரசியல் சமூக மாற்றங்களுக்கான பல்லாயிரக்கணக்கான குரல்கள் எமக்கு கேட்கின்றன தனிநாட்டுக்கு ஆதரவாகவும் பல்லாயிரக்கணக்கான குரல்கள் கேட்கின்றன. பாஸ்க் மக்களின் சுயநிர்ணயத்தை வேண்டி நிற்போரின் குரல்கள் இவை. தனி நாட்டுக்கான போராட்டத்தில் மிக முக்கிய மான கட்டத்தில் நாங்கள் எல்லோரும் நிற்கின்றோம். இந்த போராட்டத்தின் இறுதிக் கட்டம் பாஸ்க் எனப்படும் சுதந்திரத் தனி நாடே. இந்த நிலையை அடைவதற்கு எங்களுக்குரிய ஏழு நிலப்பரப்புக்களையும் உள்ளடக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் அவசியம். இதன் மூலமே ஒளிமயமான பாஸ்க் தனிநாட்டை எம்மால் உருவாக்க முடியும். தனிநாட்டை உருவாக்குவதற்கான பணி பாஸ்க் மக்களாகிய எமது கைகளிலேயே தங்கியுள்ளது. எமது சமூகத்தின் எதிர்காலமே எமது கைகளில். எமது முகமூடிகள் உடைந்தன, முகமூடிகளைத் திறந்துவிட்டு ஜனநாயக வழியில் போராட நாம் முனைந்தோம். ஆனால் ஸப்பட்டீறோவின் (ஸ்பெயினின் பிரதமர்) குணவியல்பு பாஸிஸமாக மாறி எமக்கும் எமது மக்களுக்கும் எந்தவொரு உரிமைகளும் இல்லாத ஒரு நிலையை உருவாக்கியது. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பணமும் முதலாளித்துவ நட்பும் தான். எம்மைப் போன்ற சாதாரண மக்களின் அடிப்படைத் தேவைகள் எல்லாம் அவர்களுக்கு புரிவதில்லை. ஜனநாயக வழியில் போராட முன்வந்து முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நேரத்தில் எல்லாம் அவர்கள் எம்மிடம் பொய்யுரைத்தார்கள். கபட வழியில் எம்மைத் தீர்த்துக்கட்ட முயற்சித்தார்கள். அவர்களது நிதித்தேவைகளுக்கு மட்டுமே பாஸ்க் என்ற இனக் குழுவும் பிரதேசமும் அவசியம். அதைத் தவிர எம்மைப் போன்ற சாதாரண மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட அவர்களுக்கு முக்கியமானதாக தெரியவில்லை. நாங்கள் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் வாழ விரும்புகிறோம். எமது மக்களின் அமைதியையும் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டே நாம் நிரந்தர யுத்தநிறுத்தத்தை அறிவித்தோம். பாஸ்க் பிரஜைகளாகிய எங்களுக்கு ஜனநாயகமோ உரிமையோ சுதந்திரமோ இருக்க வில்லை. நாங்கள் யுத்தநிறுத்தத்தை அறிவித்த பின்னர் ஈட்டா உறுப்பினர்களுக்கும் ஈட்டா ஆதரவாளர்களுக்கும் எதிரான வன் முறைகள் அதிகரித்தன. எம்மில் பலர் காணாமல் போயினர். பலர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் கைதுசெய்யப்பட்டனர். ஈட்டா ஆதரவாளராக இருக்கின்ற ஒவ்வொருவரையும் பயங்கரவாதியாகப் பார்க்கிறது ஸப்பட்டீறோவின் அரசாங்கம். ஸ்பெயினினது நீதிமன்றம் பல்லாயிரக்கணக்கான பாஸ்க் மக்களை தேர்தலில் வாக்களிப்பதில் இருந்து விலக்கி வைத்தது. ஜனநாயக நடைமுறையின் அடிப்படைத்தூணான தேர்தலில் இருந்தே எமது மக்கள் ஒதுக்கப்பட்டார்கள். தனக்கு வேண்டிய பாஸ்க் அரசாங்கத்தை உருவாக்கும் பொருட்டு ஸ்பெயின் அரசாங்கம் செல்லுபடியில்லாத ஒரு தேர்தலை நடாத்தியது.

எமது யுத்த நிறுத்த அறிவிப்புக்கு கைதுகள் மூலமும் சித்திரவதைகள் மூலமும் கொலைகள் மூலமும் பதிலளித்தது ஸ்பெயின் அரசாங்கம். சமாதான முன்னெடுப்புக்களை செயற்படுத்தக் கூடிய குறைந்த பட்ச ஜனநாயக நடைமுறைகள் கூட இங்கேயில்லை. எமது மக்களுக்கான பாதுகாப்பையும் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்த வேண்டிய அடிப்படையான கடமை எமக்கிருக்கிறது. சுயநிர்ணயமும் எமக்குரித்தான பிரதேசமும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் இதை எதிர்பார்த்து காத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான பாஸ்க் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை எமக்கிருக்கிறது. எமது மக்களையும் எமது பாஸ்க் நாட்டையும் ஆயுதங்கள் கொண்டு தாக்குவோரை ஆயுதங்களால் திருப்பித்தாக்கி எமது தற்பாதுகாப்பை உறுதிசெய்வோம் என சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். பொய்யான ஊழல் நிறைந்த ஜனநாயக முறைக்கு எதிராக புரட்சி செய்யுமாறு அனைத்து பிரஜைகளையும் நாங்கள் வேண்டுகிறோம். ஒற்றுமையாகவும் நேர்மையாகவும் தாங்கள் வாழும் இடத்தில் உங்களால் முடியுமான வகையில் பாஸ்க் தனிநாட்டுக்காக புரட்சி செய்யும்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இறுதியாக பாஸ்க் தனிநாட்டுக்காக எல்லா வழிகளிலும் போராடுவதற்காக நாங்கள் அறிவித்திருந்த நிரந்தர யுத்தநிறுத்தத்திலிருந்து விலகிக் கொள்கிறோம்.

சமாதான செயல்முறையானது எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணமல் போனதற்கு எதிர்க்கட்சியானது தொடர்ந்து தெரிவித்து வந்த கருத்துக்களும், சமாதான செயற்பாடுகளுக்கு காட்டிய எதிர்ப்பும் ஒருவிதத்தில் காரணம். இந்நிலையில் சில விடயங்கள் அவதானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியவை. 1. ஈட்டா யுத்தநிறுத்தத்தை தன்னிச்சியாகவே அறிவித்தது. அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை அறிவிக்கவில்லை. ஈட்டாவினருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழி எதனையும் அரசாங்கம் வழங்கவில்லை. 2. ஈட்டா யுத்த நிறுத்தத்தை ‘நிரந்தர’யுத்த நிறுத்தமாக அறிவித்ததனால் ஈட்டா பலம் இழந்து செய்வதறியாத நிலையிலேயே நிரந்தர யுத்த நிறுத்தத்தை அறிவிப்பதாக பலரும் கருதினர். 3. பலம் இழந்த நிலையில் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தமாக கருதப்பட்டமையால் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் யாரும் அதிகம் அக்கறை காட்டவில்லை. 4. யுத்த நிறுத்த காலப்பகுதியில் பாஸ்க் பிரதேசத்தில் எவ்விதமான முன்னேற்றகரமான செயற்பாடுகள் எவையும் ஸ்பானிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. 5. ஈட்டா யுத்தநிறுத்தத்திலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தவுடன் அதை மீள்பரிசீலனை செய்யுமாறு ஐ.நா செயலாளர் நாயகம், மேற்குலக நாடுகளின் தலைவர்கள் எனப் பலரும் கோரியிருந்தனர். ஆனால் யுத்தநிறுத்தம் நடைமுறையிலிருந்த போது சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு யாரும் ஸ்பானிய அரசாங்கத்தை வலியுறுத்தவில்லை. 6. கடந்த 15 மாதங்களில் யுத்தநிறுத்தம் குறித்தோ சமாதானச் செயற்பாடுகள் குறித்தோ எந்தவொரு செய்தியும் வெளியாகவில்லை. சர்வதேசம் இந்த சமாதான செயற்பாடுகள் குறித்து எவ்வித கவனமும் எடுக்கவில்லை. 7. யுத்த நிறுத்த காலப்பகுதியில் ஈட்டா ஆதரவாளர்களும் செயற்பாட்டாளர்களும் ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, கனடா ஆகிய நாடுகளில் கைதுசெய்யப்பட்டனர். இச்செயற்பாடானது ஈட்டாவுடனான சமாதான முனைப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே மேற்கோள்ளப்பட்டவை என்பது தெளிவு. அதேபோல ஒரு ஜனநாயக ரீதியிலான பாஸ்க் மக்களுக்கு உரிமைகளை வழ ங்குவதற்கு ஸ்பெயின் மட்டுமல்ல ஏனைய மேற்குலக நாடுகளும் தயாராக இல்லை என்பதும் புலனாகிறது. ஈட்டா யுத்தநிறுத் தத்திலிருந்து விலகிக் கொண்டதைத் தொடர்ந்து ஸ்பானிய அரசாங்கம் ஈட்டா வினது அரசியல் தலைவர் ஆன ஆர்னல்டோ ஒட்டேகி (Arneldo Ortegi) என்பவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. பாஸ்க் இன மக்களுக்கு எதிராக காவல் துறையினரின் கொடூரமான அடக்குமுறைகளை கட்ட விழ்த்து விட்டுள்ளது ஸ்பானிய அரசாங்கம். இதன் மூலம் ஈட்டா எடுத்துள்ள முடிவானது சரியானது என்ற ஒரு நிலைப்பாட்டை ஸ்பானிய அரசாங்கமே உருவாக்கிவிட்டது. ஆக மொத்தத்தில் மக்களுக்கான மக்கள் போராட்டம் என்பது சமாதான சகவாழ்விலோ பாராளுமன்ற ஜனநாயக முறையிலோ முன்னெடுக்கப்படும் போது தோல்வியையே சந்திக்கும் என்பதற்கு ஈட்டாவினது அண்மைய தீர்மானம் நல்லதொரு உதாரணம். எனவே மக்கள் போராட்டம் என்பது முழுமக்களையும் ஒன்று திரட்டி போராடுவதன் மூலமே சாத்தியமாகும். எந்தவொரு அரசாங்கமும் மேற் குலகும் சுயநிர்ணயத்தையோ அல்லது சிறு பான்மையினரது உரிமைகளையோ அங்கீக ரிக்க தயாரில்லை என்பது ஈட்டாவின் போராட்டம் சொல்லித் தரும் நல்ல தொருபாடம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஊடக சுதந்திரமும் ஊடகவியலாளர் படுகொலைகளும்




**நமன்**

சர்வாதிகாரப் போக்குகள் தலைதூக்கி பாசிச நடைமுறைகளாக வளர்ச்சியடையும் போது ஊடக சுதந்திரம் துப்பாக்கிகளின் இலக்குகளுக்கு உள்ளாகிறது. ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தல் கைது தடுத்து வைப்பு தாக்குதல்கள் கொலைகள் என்பனவற்றுக்கு ஆளாக்கப்படுவர். இது உலகில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருபவை. கருத்துச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் கூட்டம் கூடும் சுதந்திரம் என அரசியல் யாப்பில் எழுதப்பட்டிருக்கும் அதேவேளையிலேயே அவற்றுக்கு எதிரான துப்பாக்கி வெறித்தனங்கள் இடம்பெறும்.

இலங்கை இதற்கு விதிவிலக்கல்ல. இன்று மட்டுமன்றி கடந்த கால் நூற்றாண்டு கால போராட்டங்களின் மத்தியில் ஊடக சுதந்திரம் நசுக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு வந்துள்ளனர். அண்மைக் கால ஆண்டுகளில் வடக்கு கிழக்கின் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் உயிர் உடைமை அச்சுறுத்தல்கள் மத்தியிலேயே பணியாற்றி வருகின்றனர். நாடறிந்த திறமை மிக்க பல ஊடகவியலாளர்கள் திட்டமிட்டே கொல்லப்பட்டனர். இந் நிலை கடந்த ஒன்றரை வருடங்களில் உச்ச நிலைக்குச் சென்றுள்ளது. இக்காலப் பகுதியில் ஊடகவியலாளர்கள் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார். இருவர் கடத்தப்பட்டுள்ளனர். நான்கு பேர் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ஆறு பேர் தடுப்புக் காவலில் உள்ளனர். இவர்களில் அதிகமானோர் தமிழ் ஊடகவியலாளர் என்பது கவனத்திற்குரியதாகும். இவற்றுக்கு யார் பொறுப்பு என்று கேட்டால் பதிலிறுக்க வேண்டிய அரசாங்கம் மௌனமும் இழுத்தடிப்பும் செய்து வருகின்றது. இவ் ஊடகவியலாளர் கொலைகளில் உதயன்- சுடரொளி பத்திரிகைகளில் பணிபுரிந்த ஊடகவியலாளர்கள் ஊழியர்கள் ஆறுபேர் அடுத்தடுத்த தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். அண்மையில் அப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என். வித்தியாதரனைத் தேடி அவரது கொழும்பு இல்லத்திற்கு வெள்ளை வான் சென்று விசாரித்துத் திரும்பி உள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் வடக்கு கிழக்கிலும் கொழும்பிலும் அச்சுறுத்தல்கள் மத்தியில் எந்நேரமும் பீதியுடனேயே பணி புரிந்து வருகின்றனர். உண்மை எழுதினால் உதை கிடைக்கும் என்பதை விட உயிர் எடுப்போம் என்ற நிலையில் அடையாளம் காட்டாத துப்பாக்கிகளின் மத்தியிலேயே ஊடகவியலாளர்கள் நாட்களைக் கழித்து வருகிறார்கள். சில நாட்கள் முன்பு தினக்குரல் ஊடகவியலாளர் கே.பி. மோகன் ஜனாதிபதி செயலகத்திற்கு அண்மையாக உள்ள சந்தியில் விமானப் படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு உயிராபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இன்று தமிழ் ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி சிங்கள முஸ்லீம் ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தப்பட்ட வண்ணமே உள்ளனர். அண்மையில் ஒரு இளம் சிங்கள ஊடகவியலாளர் தனது அடையாள அட்டையைக் காண்பித்த பின்பும் படை யினரால் மோசமாகத் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் பல நாட்கள் சிகிச்சை பெற்றார். ஒரு ஆங்கில நாளிதழின் ஆசிரியர் பெண் என்றும் பார்க்காது உயர் மட்டத்தால் மோச மாக அச்சுறுத்தப்பட்டு இழிவான வார்த்தைகளால் திட்டித் தீர்க்கப்பட்டார். ஏற்கனவே சிங்கள பத்திரிகையில் பணிபுரிந்த முனுசாமி பரமேஸ்வரி ஆறுமாதங்கள் பொய்க் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டார். மேலும் மூன்று சிங்களப் பத்திரிகையாளர்கள் "சிங்களப் புலிகள்" என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கோட்டையில் ஆர்ப்பாட்டம் செய்த ஊடகவியலாளர்கள்




இவையாவும் அவசரகாலச் சட்டத்தின் மூலம் பயங்கரவாத தடைச் சட்ட விதிகளின் கீழேயே இடம் பெறுகின்றன. இச் சட்டங்களில் பொலீஸ் ராணுவத்திற்கு எல்லையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை அரசியல் எதிரிகளையும் அரசாங்க எதிர்ப்பாளர்களையும் வேட்டையாடப் பயன்படுத்தப்படுகின்றன.

இங்கே உள்ள முரண்நகை என்னவென்றால் இதுவரை ஊடக தணிக்கை பிரகடனம் செய்யப்படவில்லை என்பதாகும். ஆனால் தணிக்கை காலம் கருத்துக்கள் போன்றே எழுதப்பட வேண்டும். அதாவது நீங்களே சுய தணிக்கை செய்து எழுதுங்கள் என்றே அரசாங்கம் அச்சுறுத்தும் வகையில் திசை காட்டுகிறது. இது யுத்த நிறுத்த உடன்படிக்கை இருக்க யுத்தம் நடைபெறுவது போன்றதா கும். இதற்காகவே ஊடகங்களின் ஆசிரியர்கள் அடிக்கடி அழைக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றனர். அதனை மீறுவோர் அச்சுறுத்தப்படவும் கடத்தப்படவும் இறுதியில் கொல்லப்படவுமான சூழல் தான் நிலவுகின்றது.

ஊடகங்களும் ஊடகவியலளர்களும் மிக ஆபத்தான கால கட்டத்தில் தான் வாழ்ந்து வரவேண்டியுள்ளது. அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து ஊடக சுதந்திரம், ஊடகவியலாளர் பாதுகாப்பு, நாட்டின் நிலவரம் போன்றவற்றை நேரில் அவதானிப்புகள் நடாத்திய ஐந்து சர்வதேச ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் இலங்கையின் ஊடக சுதந்திர நிலை பற்றி எடுத்துக் கூறி உள்ளனர். குறிப்பாக அவர்களது கவனம் வடக்கு கிழக்கில் பதிந்திருந்ததை வெளிப்படுத்தியதுடன் அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர். அவர்களது முன்மொழிதலில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பற்ற அச்ச சூழல் மாற்றப்பட வேண்டும் எனவும் அதற்கு அவசரகாலச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் இத் தருணத்தில் சிங்கள தமிழ் முஸ்லீம் எனப் பிளவுபட்டு நிற்காது அண்மைக்கால ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் போன்று இறுகக் கை கோர்த்து ஊடக சுதந்திரத்திற்கும் ஊடகவியலாளர் பாதுகாப்பிற்கும் குரல் கொடுத்து நீதி நியாயத்தின் பக்கம் நிற்பது அவசியம். அதன் மூலமே ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாக்க முடியும்.

# இந்திய ராணுவம் இலங்கைக்குள் புகுந்த 20 வது வருட கால நினைவு

1987ம் ஆண்டு யூலை 29ம் திகதி முற்பகலிலே கொழும்பில் இலங்கை- இந் திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் அவ் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். கையொப்பமிட்ட அடுத்த மணித்தியாலத்திற்குள் இந்திய ராணுவம் கடலாலும் வானத்தாலும் இலங்கையின் வடக்குகிழக்கில் தரை இறங்கிக் கொண்டது. ஒரு சில நாட்களுக்குள் இலங்கையின் முப்பது சதவீத நிலப்பரப்பான வடக்குகிழக்கில் ஒரு லட்சம் இந்தியப்படைகள் சகல ஆயுதங்கள் வாகனங்கள் தளபாடங்களுடன் பரவி நின்றது. பலாலி திருகோணமலை மட்டக்களப்பு விமான நிலையங்கள், திருகோணமலை காங்கேசன்துறை மன்னார். பருத்தித்துறை துறைமுகங்கள் அவர்களது முழுக் கட்டுப்பாட்டிலும் கொண்டுவரப்பட்டன. விசா அனுமதியின்றி இந்திய ராணுவ விருப்பப்படி எவரும் வந்து போகக் கூடியதாக இருந்தது. சாராம்சத்தில் ஆக்கிரமிப்புப் படையான இந்திய ராணுவத்திற்கு அவ் வேளை வழங்கப்பட்ட பெயர் "இந்திய அமைதி காக்கும் படை" (IPKF) என்பதாகும். இப்படை எவ்வாறு வடக்கு கிழக்கில் அமைதி காத்து நின்றது என்பதை வடக்கு கிழக்கு மக்கள் நன்கு அறிவர்.

முதலிலே வடக்கு கிழக்கின் சகல பகுதிகளிலும் நிலை கொண்ட அந்த அமைதிப்படை அவ் ஆண்டு ஒக்ரோபர் 10ம் திகதி தொடங்கிய தாக்குதல் மூலம் தனது ஆக்கிரமிப்புச் சுயரூபத்தை தமிழ் மக்களுக்கு வெளிக்காட்டிக் கொண்டது. ஜே.ஆருக்கும் அவரது பேரினவாத அரசாங்கத்திற்கும் பாடம் படிப்பிக்க வந்த "எமது தாய் நாட்டுப்படை" எனக் கூறி மகரதோறணங்கள் கட்டி கும்பம் வைத்து மாலைபோட்டு வரவேற்ற தமிழ் மக்களின் மீது அப்படை ஆவேசமாகப் பாய்ந்தது. புலிகளுக்குப் பாடம் புகட்டுவதாகக் கூறிப் போர் தொடுத்தது. பாதிக்கப்பட்டு பலியானவர்கள் அப்பாவித் தமிழ் மக்களாகவே இருந்தனர். பாலியல் வல்லுறவுச் செயல்கள் உட்பட சொல்லொண்ணா அடாவடித்தனங்கள் புரிந்த அவ் அமைதிப்படையை மக்கள் வெறுத்து போதும்! போதும்! போனால் போதுமானது என்று கூறுமளவிற்கு வந்தனர். அதேவேளை இத்தகைய ஆக்கிரமிப்பையும் அடாவடித்தன ராணுவ நடவடிக்கையையும் நியாயப்படுத்தி ஆதரித்தோரும் அவ் வேளை இருந்தனர் என்பதையும் குறிப் பிட வேண்டும்.

அவ் அமைதிப்படையால் புலிகளை அழிக்க முடியாது போனது மட்டுமன்றி இனப்பிரச்சினைக்கு முன்வைத்த தீர்வை நடைமுறைப் படுத்தவும் முடியவில்லை. இலங்கை இந் திய ஒப்பந்தத்தின் மூலமான தீர்வை தமிழ் மக்களில் பெரும்பான்மையோரும் சிங்கள மக்களும் முஸ்லீம் மக்களும் நியாயமான தீர்வாக ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. இந்தியாவால் இலங்கையை நிர்ப்பந்தித்து இணங்க வைத்த அவ் ஒப்பந்தமும் தீர்வும் அமைதியையும் இயல்பு வாழ்வையும் கொண்டு வருவதற்குப் பதிலாக இயக்கங்களுக்கிடையிலான மோதல்களையும் தோற்றுவித்து ஊக்கமடைய வைத்தது. இதனால் வடக்கு கிழக்கில் புதிய கொலைக்களம் திறக்கப்பட்டது. தமிழீழ விடுதலையின் பெயரால் பல்லாயிரக்கணக்கானோர் குறிப்பாக இளைஞர் யுவதிகள் கொன்றழிக்கப்பட்டனர். நரித்தனம் மிக்க கடும் பிற்போக்கு வாதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா அக மகிழ்ந்து தனது தந்திரோபாயத்தின் மதி நுட்பத்தை வியந்து தன்னைத் தானே பாராட்டிக் கொண்டார். இந்திய ராணுவமும் புலிகளும் மோதிக் கொண்ட போது ஜே.ஆர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.


எவ்வாறாயினும் அன்றைய இலங்கை இந்திய ஒப்பந்தமும் இந்தியப் படைகளின் படையெடுப்பும் அதன் கீழான மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வும் பயனற்ற முயற்சிகளாகிக் கொண்டன. அன்று இலங்கையில் இந்தியாவிற்கு ஏற்பட்ட எதிர்மறையான அனுபவங்களும் பட்டறிவும் தான் இன்று வரை அத்தகைய தொரு "பாடம் புகட்டும்" செயலில் மீண்டும் ஒரு முறை இறங்கிக் கொள்ளத் தயக்கம் காட்டி நிற்பதற்கான ஒரு காரணமும் ஆகும்.

அதற்காக இலங்கை விவகாரத்தில் இந்தியா கைகழுவிக் கொண்ட நிலையில் இருப்பதாக யாரும் தப்புக் கணக்குப் போட்டு விடமுடியாது. ஏனெனில் தனது பிராந்திய மேலாதிக்கத்தை ஒரு போதும் அது கைவிட்டு விட மாட்டாது. இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும் மேலாதிக்க விரும்பிகளும் சும்மா பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. அவர்கள் புதிய உத்திகளையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொள்ளவே செய்வர். இந்தியாவின் தலையிடி என்னவெனில் விட்டுக்கொடுக்க மறுக்கும் புலிகளையும் இணங்கி வர மறுக்கும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளையும் ஒரே நேரத்தில் மடக்கி தனது காலடிக்கு கொண்டுவர எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்பதேயாகும். அதற்காகவே நீளக் கயிற்றில் விட்டுப் பிடிக்கும் கொள்கையை இந்தியா இதுவரை பின்பற்றி வந்தது. ஆனால் அண்மைக்காலப் பேச்சுக்களும் சைகைகளும் புதிய வகைத் தலையீட்டுக்கு தயாராகி வருவதையே வெளிப்படுத்துகின்றது.

எவ்வாறாயினும் இந்தியா நமக்கு அயலில் உள்ள நெருங்கிய பாரம்பரிய நட்புடைய பெரிய நாடு என்ற யதார்த்தம் இலகுவில் மறக்கக் கூடியதொன்றல்ல. அதன் காரண மாக இலங்கையின் இனப்பிரச்சினையில் நேர்மையாகவும் பக்க சார்பின்றியும் நியாயமான தீர்வுக்கு உதவுவது அதன் கடமையாகும். ஆனால் மேலாதிக்க உள் நோக்கத்துடன் பிராந்திய "பெரியண்ணன்" ஆதிக்கத்துடன் தனது லாப நட்டத்திற்கு எமது பிரச்சினையைக் கையாள முற்படக் கூடாது என்பதே ஏற்கக் கூடிய கருத்தாகும். அத்தகைய ஒரு முயற்சியை தற்போதைய இந்திய ஆளும் அதிகாரவர்க்கம் செய்யுமா என்பது மிக முக்கியமான கேள்வியாகும். இந்திய சார்பானவர்கள் ஆம் எனப் பதிலளிப்பர். ஆனால் இந்திய பிராந்திய மேலாதிக்கத்தைப் புரிந்து கொண்டோர் அது நியாயமாக நடந்து கொள்ளமாட்டாது என உறுதிபடக் கூறுவர். இவ் இரண்டாவது கூற்றுக்கு வரலாற்றுச் சாட்சியமே 20 வருடங்களுக்கு முன்பு இடம் பெற்ற இந்திய அமைதிகாக்கும் படையின் படையெடுப்பாகும்.

இவ் வரலாற்றுத் துரய அனுபவம் நினைவு கூறப்படும் இவ்வேளையில் நம்மிடையே மீண்டும் ஒரு தலையீடு வரவேண்டும் என அப்பாவித்தனமாக எதிர் பார்க்கின்றனர். இத்தகையோரில் ஒரு பிரிவினர் இந்தியக் கடவுளரே கிருபை புரிய வேண்டும் என விரும்புகின்றனர். மற்றொரு பிரிவினர் வெள்ளையர்கள் மீட்பர்களாக வந்தால் தமது விருப்பங்கள் நிறைவேற்றிவிடும் என நப்பாசை கொண்டுள்ளனர். யார் வந்தாலும் அந்நியத்தலையீடு எவருக்கும் விமோசனமோ விடுதலையோ தரும் ஒன்றல்ல என்பதே வரலாற்றுப் பட்டறிவாகும்.

# "பெரியார்" திரைப்படம்



"பெரியார்" திரைப்படம் பற்றிக் கொஞ்சம் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயங்களில் ஒன்று மணியம்மையார் பாத்திரத்தில் குஷ்பு நடிக்கக் கூடாது என்று திராவிட இயக்க வட்டாரங்கட்குள் இருந்து எழுந்த எதிர்ப்பு. தமிழ்ப் பெண்களின் கற்புப் பற்றி ஓராண்டுக்கு முன்னர் குஷ்பு சொன்னவை தமிழர் பண்பாட்டை அவமதிப்பதாக இருந்தது என்பது அவர்களது வாதம். ஆனால் குஷ்பு சொன்னது ஒரு தகவல் மட்டுமே. பெரியாரின் கருத்துக்கள் எல்லாப் பண்பாடுகளிலும் பெண் பற்றி இருந்து வந்த படிமத்தையே மறுப்பதாக இருந்தது என்று பார்க்கும் போது குஷ்புவை விட அதிகமான தகுதியுடைய ஒரு சினிமா நடிகையை என்னால் நினைக்க முடியவில்லை.

இன்னொரு விடயம் பெரியார் படத்துக்கு இளையராஜா இசையமைக்க மறுத்தது. யாருடைய போராட்டங்களால் இன்று பார்ப்பன இசையுலகின் ஆதிக்கச் சக்திகளுக்கு முன் சரியாசனம் பெற்றிருக்கிறார் என்பதை மறந்து தனது புதிய "இந்து" அடையாளத்துள் தன்னை இழந்து நிதானங் கெட்டுப்போயுள்ள ஒருவராகத் தனது மறுப்பு மூலம் இளையராஜா தன்னை அடையாளங்காட்டித் தாழ்ந்து போய் நிற்கிறார்.

இன்றைய தமிழகம் பெரியார் காண விரும்பிய தமிழகமல்ல. அவர் வளர்த்து விட்ட பகுத்தறிவுத் தலைமுறை அதிகாரத்தில் உள் ளது. ஆனால் பெரியாரின் கொள் கைகளை ஒவ்வொன்றாகக் கைகழுவி விட்டுத் தான் பதவிகளில் தங்களை அமர்த்திக் கொண்டுள்ளனர். பார்ப்பனிய இந்துத்துவத்துடன் ஒவ்வொரு திராவிட அரசியற் கட்சியும் செய்துள்ள சமரசங் களை எண்ணும் போது பெரியார் தனது அரசியல் வாரிசுளான அண் ணாதுரை முதலாக நெடுஞ்செழி யன், அன்பழகன் உட்படக் கருணாநிதி வரை ஒவ்வொருவரையும் சரியாக எடை போட்டதால் தான் அவர்களை நம்பாமல் தனது முதுமைக் காலத்தில் மணியம்மாரை மணமுடித்துத் தனது பணிகளைத் தொடருமாறு அவருக்குப் பொறுப்பை அளித்தார்.

"பெரியார்" திரைப்படத்தில் இந்த உண்மைகளையெல்லாம் சொல்லுவதற்கு நேரம் போதாது என்பது போகத் திரைப்படத்தின் தயாரிப்பிலும் வெளியீட்டிலும் பிரச்சனை கள் ஏற்பட்டிருக்கும். எனவே தி.மு.க. தலைமையின் மனம் நோகாதபடி சில விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. எனினும் பெரியாரைக் கொச்சப்படுத்தாமல் தி.மு.க அமைக்கப் பிரிந்து சென்றவர்கள் பற்றிய அவரது அவ நம்பிக்கையை அழுத்தாவிட்டாலும் மழுப்பாமல் சொல்லவிட்டிருக்கிறார்கள்.

திரைப்படத்தின் அழுத்தம் தவிர்க்க இயலாமலே பெரியார் என்கிற தனிமனிதரைப் புரிந்து கொள்கிற நோக்கிற்குள் நின்று விடுகிறது. பெரியாரின் அரசியல் பற்றிய கவனம் அதனாற் கணிசமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் பெரியாரின் வாழ்வின் 'இருண்ட பக்கங்கள்' என்று சிலராற் பெரிதுபடுத்திப் பெரியாரைக் "கொச்சைப்படுத்துகிற" விடயங்களிற் கூட ஒளிவுமறைவில்லாதவர் அவர். எனவே அதை மிகவும் பண்பான முறையிற் படத்திற் காட்டியுள்ளது மெச்சத்தக்கது. அதே விதமாகவே பெரியாருக்கு எதிரான பலவேறு அரசியல் துரோகங்களும் சாடையாகவே காட்டப்படுள்ளன. திராவிட இயக்கத்தின் வரலாற்றை ஓரளவுக்கு அறிந்தவர்கட்கு அவற்றை அடையாளங்கான இயலும். மற்றப்படி எல்லா விடயங்களையும் மிகைப்படுத்தியே காண்பித்துப் பழக்கப்பட்ட ஒரு தமிழ் சினிமாச் சூழலின் பலரும் எளிதாகவே இவற்றைத் தவற விட இயலும்.

வீட்டின் பழைவாதச் சூழலுக்கு எதிரான அவருடைய குறும்புத் தனமான உபாயங்களும் வீட்டை விட்டு விரட்டப்பட்ட பின்பான 'துறவு' வாழ்க்கையின் சித்தரிப்பில் சாதியத்தினதும் மதஞ்சார்ந்த மூடத்தனங்களதும் கொடுமை நகைச்சுவையுடன் ஆனாலுங்கனதியாகவே வழங்கப்பட்டுள்ளது. மூடநம்பிக்கைகள் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் எதிரான கொடுமைகள் பற்றிய ஆழ்ந்த கவலையும் அவற்றுக்கு எதிரான போராட்டமுமே பெரியாரின் சமூக வாழ்வின் முக்கியமான அடையாளங்கள் என்ற வகையில் பெரியார் சிறந்த முறையில் நம் கண் முன் நிறுத்தப்பட்டுள்ளார். அதைவிடத் தனிப்பட்ட குரோதமற்ற அவரைக் காட்டுவதில் உள்ள கவனம் குறிப்பிடத்தக்கது.

பெரியார் சோவியத் யூனியனுக்குப் போகு முன்பு கம்யூனிசம் பற்றிய ஆழ்ந்த ஈடுபாடற்று இருந்தாலும் கம்யூனிசம் பற்றி நல்லெண்ணமுடையவராகவே இருந்தார். சோவியத் யூனியனுக்குச் சென்று திரும்பிய பின்பு அவருடைய கொள்கைகளில் கம்யூனிஸப் பாதிப்பு மிகவும் வலுவாயிருந்தது. அதைப் பாவித்துப் பகுத்தறிவு இயக்கத்தைத் தடைசெய்யும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டமை பற்றி அறிந்து கம்யூனிசத்தை தள்ளி வைத்து இயக்கத்தைக் காப்பாற்றிய பெரியார் ஏன் அந்தச் சூழ்நிலை மாறி பின்பு கம்யூனிசத்துக்கு மீளவில்லை என்ற கேள்விக்கு யாரும் திருப்திகரமான பதிலை இதுவரை தரவில்லை. திரைப்படத்திலும் அது தவிர்க்கப்பட்டுள்ளதில் வியப்பில்லை. ஸ்றாலினுடன் அவருடைய சந்திப்பு இயலாமற்போன தற்கான காரணம் என்று கூறப்படுவது பற்றிப் பெரியார் ஸ்றாலினுடனோ சோவியத் யூனியனுடனோ மனத் தாங்கலை வெளிப்படுத் தாத போது அது திரைப்படத்தில் வழங்கப்பட்டுள்ள முறை சில சந்தேகங்களை எழுப்புகிறது.

ஒரு திரைப்படம் என்கிற வகையில் தமிழ் சினிமாவுக்குள் தவிர்க்க இயலாத மசாலத் தனங்களைத் தவிர்த்தால் "பெரியார்" ஒரு ஆவணப்படமா கப் பெட்டிக்குள் முடங்கிப் போயிருக்கும். எனினும் கவனமாக இடந் தெரிந்து அளவோடு ஆடல் பாடல் காட்சிகளை வழங்கியுள்ளமை பாராட்ட த்தக்கது. காட்சிகள் ஒவ்வொன்றும் மிகுந்த கவனத்துடன் காலச் சூழல் பற்றிய கருத்துடன் எடுக்க ப்பட்டுள்ளன. ஒப்பனை குறிப்பாகப் பெரியாருக்கானது, மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளது பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும்.

நடிப்பைப் பொறுத்தளவில் தமிழகத்தில் சிறந்த நடிகர்களுள் ஒருவர் என்று சொல்லக்கூடியளவுக்கு சத்தியராஜ் பெரியார் பாத்திரத்தை மிகவும் கச்சிதமாகவும் அதற்குரிய மரியாதையுடனும் வெளிப்படுத்தியுள்ளார். சிறிய பாத்திரம் பெரிய பாத்திரம் என்ற வேறுபாடில்லாமல் எல்லாருமே தத்தமது பாத்திரங்களை மதித்துச் சிறப்பாக வழங்கியுள்ளனர். கதை பெரியாரின் வாழ்வின் வெட்டு முகங்களின் தொகுதியாக ஒழுங்காகவும் தொய்வுபடாது சுவைபட நகர்த்திச் செல்லப்பட்டுள்ளமைக்கும் இயக்குநர் முதலாகப் படத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டுதல் தகும்.

தமிழ் சினிமாவின் நலிவுக்குக் காரணம் திறமைகட்கான குறைபாடல்ல என்பதை நமக்கு நினைவூட்டுகிற ஒரு சித்திரம் "பெரியார்".

–சிவா–



பெரியார் சோவியத் யூனியனுக்கு சென்ற காட்சி

## அமைதி வரும் போது

-புவனம்-

அவர்கள் வழங்கவுள்ள அமைதி வரும் போது  
கட்டாந் தரைகளும் முள்ளிக்காடுகளும், தாங்கள்  
வயல்களாக இருந்த ஒரு காலத்தை மறந்திருக்கக் கூடும்.  
உக்கிச் சரிந்த நீண்ட மரத் துண்டுகளுக்குத், தமது  
நீண்ட கடற்பயணங்களின் மங்கிய நினைவுகள் மிஞ்சியிருக்க கூடும்  
கரும் பாசி படர்ந்த குட்டிச் சுவர்கட்குத்  
தங்களுக்கு மேலே ஒரு கூரையும் அதன் கீழே  
மனித நடமாட்டமும்  
பாடசாலைப் பிள்ளைகளின் கூச்சலும்  
பூசைகளும் தொழுகைகளும் செபங்களும் பிராத்தனைகளும்  
நோயாளிகளின் முனகல்களும் தாதிமாரின் காலடி ஓசையும்  
கனவுகளில் வந்து வந்து போகவுங் கூடும்.

அவர்கள் வழங்கவுள்ள அமைதி வரும் போது  
மனிதர் கூடாரங்களில் வாழவும்  
பார வாகனங்களிலிருந்து தண்ணீர் கறக்கவும்  
பிளாஸ்றிக் பெட்டிகளில் மட்டுமே உணவைக் காணவும்  
கூடாரங்கட்கு வெளியே சென்ற குழந்தைகள் மீளும் வரை  
காத்திருப்பதையே தமது பொழுது போக்காய்க் கொள்ளவும்  
உயிரோடு இருப்பதற்காகப் படைமுகாங்களில் வசிப்போருக்கும்  
உழைக்காமலே உண்ணவும் உடுக்கவும் கற்பித்தற்காக  
என். ஜி ஒக்கட்கும்  
தங்களுக்கு இந்த வாழ்வை வழங்கியதற்காக நடந்து முடிந்த  
போருக்கும்  
எல்லாவற்றையும் இயலுமாக்கியதற்காக ஒரு அந்நியத் தேவுக்கும்  
என்றென்றும் நன்றியுடன் இருக்கவும்  
பழக்கப்பட்டிருக்கக் கூடும்.

அவர்கள் வழங்கவுள்ள அமைதி வரும் போது  
படை முகாங்களின் மதில்கள் பருத்து நெடுத்திருக்கவும்  
படைமுகாங்களைச் சூழக் கண்காணிப்புக் கோபுரங்கள்  
எந்நேரமுங் காவலிருக்கவும்  
அந்நியர் ஆணைகளின் படி அலுவல்கள் நடைபெறவுங் கூடும்.

அவர்கள் வழங்கவுள்ள அமைதி வரும்போது  
எவரும் கவிதைகளைப் படிக்காமலும்  
எவரும் பாடல்களை இசைக்காமலும்  
எவரும் கதைகளைப் பரிமாறாமலும்  
ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பும் அமைதியைக்  
குலைத்துவிடலாம் என்பதால்  
மனிதர் மௌனங்களிலேயே உரையாடவும் பழகிவிடக் கூடும்.

ஆனாலும், அவர்கள் வழங்கவுள்ள அமைதி வரும் போது  
அவர்களது ஒவ்வொரு உடல் அசைவும் அவர்களை மிரட்டவும்  
அவர்களது சுவாசத்தின் ஒலி அவர்களது தூக்கத்தைக்  
கெடுக்கவும்  
அவர்களது நிழல்கள் அவர்களை அச்சுறுத்தி நடுங்கச் செய்யவும்  
அவர்கள் வழங்கவுள்ள அமைதி  
அவர்களையே விழுங்கி விடவுங் கூடும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

யூலை 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

## புரட்சிகர வாழ்த்துக்கள்

புதிய ~ ஜனநாயக கட்சி தனது 29வது ஆண்டினுள் பிரவேசிக்கிறது. பழைய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து 1978 யூலை 3ம் திகதி பிறப்பெடுத்த கட்சி தனது மாக்சிச லெனினிச மா ஒசேதுங் சிந்தனைப் பாதையில் பல்வேறு சவால்கள் நெருக்கடிகள் துன்பங்களுக்கு முகம் கொடுத்து உறுதியுடன் முன்னேறி வந்துள்ளது. புதிய பூமி தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.







# ஜேர்மனியில் G8 உச்சி மாநாட்டை எதிர்த்து 1 லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம்





உலகின் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் G8 உச்சி மாநாடு ஜேர்மனியின் ஹெய்லிஸென்டாம் நகரில் யூன் 6ம் முதல் 8ம் திகதி வரை நடைபெற்றது. இது 33வது மாநாடாகும். அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, கனடா, யப்பான், ரஷ்சியா ஆகியனவே இவ் G8 நாடுகளாகும். இவைதான் இன்றைய முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளும் அமெரிக்காவின் தலைமையிலான உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னின்று முன்னெடுப்பவர்களுமாகும். இவ் உச்சி மாநாட்டின் கருப்பொருளாக புவி வெப்பமடைந்து வருவதைத் தடுப்பதற்கு கைத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் பச்சை வீட்டு வாயுவையும் ஏனைய அழிவுதரும் வாயுக்களையும் கட்டுப்படுத்தி அதன் அளவை தற்போதைய நிலையில் இருந்து அரைவாசியாகக் குறைக்கும் கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதும் அமெரிக்க அதிபர் புஷ் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

இவ் G8 உச்சி மாநாட்டையும் அதன் உலக மேலாதிக்க உலகமயமாக்கலையும் எதிர்த்து ஒரு லட்சம் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். 16,000 பொலிசார் பாதுகாப்பில் ஈடுபட்டனர். அவர்களில் 25 பொலீஸ் அதிகாரிகள் ஆர்ப்பாட்ட மோதலில் படுகாயம்பட்டனர். 12 கி. மீ. தூரத்திற்கு முட்கம்பி தடுப்புக்கள் போடப்பட்டிருந்தன. 140 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். 134 மில்லியன் டொலர்கள் பாதுகாப்புக்காகச் செலவிடப்பட்டது.

உலக முதலாளித்துவ செல்வந்த நாடுகளின் மீதும் அவற்றின் கொடூரச் சுரண்டலினால் உலக மக்கள் படும் துன்ப துயரங்களின் வெளிப்பாடாகத் தமது கண்டனங்களையும் வன்மையான எதிர்ப்புகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோபாவேசமாக வெளிக்காட்டினர். ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள் தாம் நினைத்தபடி உலகில் செயல்பட முடியாது என்பதற்கு வளர்ந்து வரும் உலக மக்களின் எதிர்ப்புகள் கண்முன்னான சாட்சியங்களாகும். அதன் ஒரு பகுதியே G8 நாடுகளின் உச்சி மாநாட்டை எதிர்த்த ஆர்ப்பாட்டங்களாகும்.









வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.